# ஈழத்துச் சிதம்பரம்



சிவஸ்ரீ
ச. கணபதீஸ்வரக்குருக்கள்

உ

சிவமயம்

# ஈழத்துச் சிதம்பரம்

ஆசிரியர்
சிவஸ்ரீ. ச. கணபதீஸ்வரக்குருக்கள்

வெளியீடு:

காரைநகர்
சுந்தரேசுவரர் தேவஸ்தானம்

இரண்டாம் பதிப்பு - 2002 மார்கழி
காரைநகர்

சுந்தரேசுவரர் தேவஸ்தானம்
ஆ. அம்பலவி முருகன்
மு. சுந்தரலிங்கம்
} ஆதீன கர்த்தாக்கள்

பதிப்புரிமை - தேவஸ்தானம்
2ம் பதிப்பு வெளியீடு - திருப்பணிச்சபை

2002
சித்திரபானு ௵ மார்கழி ௴

## இரண்டாம் பதிப்பின்
## பதிப்புரை

எமது முன்னோர்களால் பரோபகரார்த்தம் ஆரம்பிக்கப் பட்டு வழிபட்டு நிர்வகிக்கப்பட்டு தொடர்ந்து அவர் சந்ததியின ராகிய எம்மால் தற்போது பரிபாலனம் செய்யப்பட்டு வரும் திண்ணபுர சுந்தரேஸ்வரர் (ஈழத்துச் சிதம்பரம்) தேவஸ்தானத் தின் வரலாறு 1962 ஆம் ஆண்டு வணக்கத்திற்குரிய எமது தேவ ஸ்த்தான பிரதமகுரு சிவஸ்ரீ ச.கணபதீஸ்வரக்குருக்கள் அவர் களால் எழுதப்பட்டு எம் முன்னோர்களால் வெளியிடப்பட் டது.

தற்பொழுது பிரதிகள் கிடைக்காமையினாலும் தற்காலத் தில் ஆலயத்தின் உண்மைச் சரித்திரமும் பாரம்பரியமும் பலரும் அறிய விரும்புவதினாலும் பல்கலைக்கழகத்தில் இந்து நாகரீகத் துறை இறுதி ஆண்டு மாணவர்களின் ஆய்வுக்கும் பாடசாலை யில் கல்வி பயிலும் மாணவர்களின் கணிப்பீட்டு கல்விமுறைக்கு உதவும் நோக்குடனும் இடம்பெயர்வின் போது நூலினை இழந்த வர்கட்கு உதவும் வகையிலும் இந்நூலின் இரண்டாவது பதிப் பாக அச்சிட்டு வெளியிடுகிறோம்.

இந்நூலின் முதற் பதிப்பில் ஆரம்பகாலம் முதல் 1962 ம் ஆண்டு வரையிலான இவ் ஆலயம் அதன் பரிபாலனம் பற்றிய வரலாறு தெளிவாக விரித்துக் கூறப்பட்டுள்ளது. இவ் இரண்டா வது பதிப்பில் அனுபந்தம் 4 இல் 1962 ம் அண்டு முதல் 2002 ம் ஆண்டு வரையிலான ஆலயத்தின் வளர்ச்சியும் ஆதின கர்த்தாக் களின் சிவ கைங்கரியப் பணிகளும் பரிபாலனமும் சுருக்கமாகக் கூறப்பட்டுள்ளது. அத்துடன் அனுபந்தம் 5 இல் 1910 ம் ஆண்டு பிரம்மஸ்ரீ சபாரத்தின ஐயர் இயற்றிய திண்ணபுர ஊஞ்சலும்

இணைக்கப்பட்டுள்ளன. இந்த திண்ணபுர ஊஞ்சல் புத்தகத்தை பேணிக்காத்து தந்துதவிய தத்துவ கலாநிதி சிவஸ்ரீ க. வைத்தீஸ் வரக்குருக்கள் அவர்களுக்கும் இப்பதிப்பிற்கு ஆலோசனை களை வழங்கிய யாழ். பல்கலைக்கழக சமஸ்கிருதத்துறை விரிவு ரையாளர் ஸ்ரீகிருஷ்ணானந்தசர்மா (சிவன்கோவிலடி, நல்லூர்) அவர்களிற்கும் இப்பதிப்பிற்கு பலவழிகளிலும் உதவிய அனைவருக்கும் திண்ணபுரத்தின் அருள் கிடைக்க வேண்டு மெனப் பிரார்த்திக்கின்றோம். அடியவர்கள் இந் நூலினைப் பெற்று திண்ணபுரத்தானின் மெய்ச்சரிதத்தை உணர்ந்து அவனரு ளால் அவன்தாள் வணங்கி ஆலயத்தின் சிவபுண்ணிய செயல்களுக்கு ஊக்கமளித்து எம்பெருமான் திருவருளைப் பெற்று சீரிய வாழ்வுவாழ திண்ணபுரத்தான் திருவடிகளை வழுத்துகின்றோம்.

சித்திரபானு ஆண்டு மார்கழி மீ
2002.12.10.

ஆ. அம்பலவி முருகன்
மு. சுந்தரலிங்கம்
ஆதினகர்த்தாக்கள்

# முன்னுரை

ஈறாய்முத லொன்றாயிரு பெண்ணாண்குண மூன்றாய்
மாறாமறை நான்காய்வரு பூதம்அவை ஐந்தாய்
ஆறார்சுவை ஏழோசையொ டெட்டுத்திசை தானாய்
வேறாயுட னானானிடம் வீழிம்மிழ லையே.

- சம்பந்தர்

ஊரி லான்குணங் குறியிலான் செயலிலா னுரைக்கும்
பேரி லானொரு முன்னிலான் பின்னிலான் பிறிதோர்
சாரி லான்வரல் போக்கிலான் மேலிலான் றனக்கு
நேரி லானுயிர்க் கடவுளா யென்னுளே நின்றான்.

- கந்தபுராணம்

பிரமம் விண்ணிலும், மண்ணிலும், காற்றிலும் கனவிலும், மனிதரிலும், தேவரிலும் மரங்களிலும் மலைகளிலும் எங்குமுள்ளதென்று அதன் சர்வ வியாபகத்துவத்தை கடோபநிஷதம் விளக்குகின்றது. அதுவே தேகமையத்தில் - இருதயவெளியில் (தகராகாசத்தில்) நின்று உடலை இயக்குகின்றது; எல்லாவற்றிற்கும் உள்ளேயிருப்பினும் எல்லாவற்றிற்கும் எட்டாத தொலைவில் இருக்கின்றது. அதை எந்தத் தீரர்களாகிய ஞானிகள் தங்களுள் தங்கள் ஆத்மாவாகக் காண்கின்றனரோ அவர்கள் அழியாத சுகத்தையடைகின்றனர். உபநிஷதங்கள் எவன் தன்னுள் அமர்ந்திருக்கும் ஆத்மா அநித்தியத்தில் நித்தியமாக, அறிவுள் அறிவாக , உயிருள் உயிராக இருக்கின்றது என்பதை அறிகிறானோ அவனே சாந்தியடைகிறானெனக் கோஷித்துக் கொண்டிருக்கின்றன. இந்த ஞானத்தை உணரமாட்டாத உலகர் பொருட்டே ஆலயங்கள் ஏற்பட்டன. அவர் துவிதபாவ

னையாகிய வழிபாட்டால் பேரன்பு உண்டாகி முறுகப்பெற்று அதனால் அத்துவித பாவனையாகிய பிரமமும் தானும் வேறல்லாத ஞானம் கைவரப்பெற்று ஒன்றாய், வேறாய், உடனாய் நின்று உபகரிக்கும் நிலையை உணர்ந்து வீடுபேறெய் துவர்.

இப் பெரும்பேறு கருதி நம்மனோர் உய்யும் பொருட்டுப் பெருவாழ்வெய்திய பெரியோர்கள் கண்டது ஆலயம். இப்பரம் பரையில் வந்ததே 'ஈழத்துச் சிதம்பரம்' என்னும் இத்திண்ண புரத்துச் சுந்தரரேசுவரர் ஆலயமாகும். இவ்வாலயத்தின் வரலாற் றைப் பலரும் பலவிதமாகக் கூறுதலின் மக்கள் உண்மையை உணரவேண்டுமென்னும் பெருவிருப்புக் காரணமாக இந்த ஆலயவரலாற்றை எழுதித்தரும்படி இத்தேவத்தான எஜமா னர்கள் கேட்டுக்கொண்டனர். அவர்கள் விருப்பப்படி என்னறி வுக் கெட்டியவரை ஆராய்ந்து எழுதியிருக்கின்றேன். இதில் திருத்தம் பெறவேண்டிய பகுதிகள் உண்டேல் அவைகளை எமக்கு அறிவித்தால் அத்திருத்தங்கள் மறு பதிப்பில் இடம்பெறும்.

**காரைநகர்,** **ச. கணபதீசுவரக்குருக்கள்**

**பிலவ ௵ திருக்கார்த்திகை.**



சிவஸ்ரீ ச. கணபதீஸ்வரக் குருக்கள்



## பதிப்புரை

நீல மேனி வாலிழை பாகத்
தொருவ னிருதாள் நிழற் கீழ்
மூவகை யுலகு முகிழ்த்தன முறையே

எங்கள் முன்னோர்களால் பரோபகாரார்த்தம் ஆரம்பிக்கப்பட்டதும், இப்போது எங்களால் நிர்வகிக்கப்படுவதும் ஆகிய திண்ணபுரம் சுந்தரேசுவரர் தேவத்தான வரலாறு ஒழுங்காக யாவரும் அறியத்தக்கதாக இல்லை. பலரும் பலவாறு கூறிவருகின்றனர். காலக்கிரமத்தில் இதன் உண்மைச் சரித்திரம் பிற்சந்ததியினருக்குத் தெரியாத விஷயமாய் விடும். எனவே, இதன் சரித்திரம் தக்க முறையில் வெளிவருவது மிகவும் இன்றியமையாதது. இந்த வரலாறு எழுதுவது பற்றித் தக்கவர்கள் பலருடனும் சிந்தித்தபோது அவர்கள் யாவரும் ஒருமுகமாக இதனைச் சரியாகச் செய்ய வல்லவர்கள் இப்போதுள்ளவர்களில் ஆண்டில் முதியவரும், வடமொழி தென்மொழி வல்லவரும், பரம்பரையாக இந்தத் தேவத்தானத்தோடு தொடர்புள்ளவரும், பிரதம ஆசாரியராய் இருந்து இந்தத் தேவத்தானக் கிரியைகளை முறைப்படிசெய்து வைத்தவர்களுமாகிய சிவஸ்ரீ ச. கணபதீசுவரக்குருக்களையா அவர்களேயாவர் என உணர்த்தினார்கள். அன்றியும் குருக்களையா அவர்கள் அகில இலங்கைச் சைவசமயக் குருமார் சபைத்தலைவராயிருந்து கோயிற் கிரியைகள் சிவாகம விதி தவறாமல் நடைபெறுவதற்கு ஆக வேண்டியன செய்து வருபவர்கள்; நியமந் தவறாதவர்கள்; இந்தத் தேவத்தானப்பணியில் தமது சிந்தை, செயல், முழவதையும் அர்ப்பணித்துச் சுந்தரேசுவரரைத் தமது ஆத்ம நாயகராகக் கொண்டவர்கள். இத்தகைய குருக்களையா அவர்கள் இந்தத்

தேவத்தான வரலாறு எழுதுவது மிகவும் பொருத்தமேயெனத் தீர்மானித்து நமது எண்ணத்தை அவர்களிடம் கூறினோம். அவர்கள் தமது பல அலுவல்களுக்கிடையில் தள்ளாதவயதில் இதனை எழுதியுதவினார்கள். அவர்களது முயற்சியை யாம் மிகவும் போற்றிப் பாராட்டுகின்றோம். அன்றியும் அவர்களுக்கு சைவத் தமிழுலகும் விசேடமாக நம்மூரவர்களும் பெரிதும் நன்றி பாராட்டக் கடப்பாடுடையர். அன்றியும் இதை ஈழத்துச் சிதம்பரம் என்னும் பெயருடன் திண்ணபுரம் சுந்தரேசுவரர் தேவத்தான வெளியீடாக வெளியிடுகின்றோம். இதன் அனுபந்தங்களாக திண்ணபுரவந்தாதி, திண்ணபுரப்பதிகம், திண்ணபுர ஊஞ்சல், திண்ண புரவெண்பா என்னும் நூல்கள் சேர்க்கப்பட்டிருக்கின்றன. சைவத் தமிழன்பர்கள் இந்த வெளியீட்டை உவந்தேற்றுக் கொள்ளுவார் களென எதிர்பார்கின்றோம்.. இந்நூலை அச்சிட்டு வெளிப்படுத் துமாறு பிரம்ம ஸ்ரீ.க. வைத்தீஸ்வரக்குருக்கள், ஸ்ரீ க. சிற்றம்பலம் ஆகிய இருவரிடமும் ஒப்படைத்தோம். அவர்கள் எமது கோரிக் கையை ஏற்று இந்நூலை அச்சிட முன்வந்தமைக்கு எங்கள் நன்றி உரித்தாகுக.

சுந்திரரேசுவரர் தேவத்தானம், திண்ணபுரம், காரைநகர்.

அ. ஆண்டிஐயா
து. முருகேசு
தேவத்தான கர்த்தாக்கள்

# அணிந்துரைகள்

வடமொழி தென்மொழி வல்லுநர்

அச்சுவேலி.

## சிவஸ்ரீ ச.குமாரசுவாமிக்குருக்கள்.

அவர்கள்.

சைவசமயிகள் யாவராயினும் தாம் வழிபடும் ஆலயங்களின் தோற்றச் சிறப்புக்களையும் அவ்வாலயங்களுக்குக் காலந்தோறும் திருப்பணி முதலியவை நடைபெற்று வந்த வரலாறுகளையும், இறைவன் அங்கே சாந்நித்தியராய் எழுந்தருளியிருந்து அடியார் பொருட்டு செய்தருளிய திருவிளையாடல்களையும் இயன்றவரை அறிந்திருத்தல் ஆவசியகம் வேண்டப்படுவதாம். இவற்றை அறிந்து கொள்ளுதல் அவ்வழிபாட்டின்கண் ஊக்கமும் அன்பும் மேன்மேலும் பெருகிச் சிறப்புறதற்கேதுவாயிருக்கும். ஆதலினால்,தலமகத்துவங்களை யறிந்தோர் அவற்றைத் திரட்டி எழுதிப்பிரகடனம் செய்தல் யாவருக்கும் பெருநன்மை தரும் சிவபுண்ணியச்செயலாகும். இக்கருத்தை யுட்கொண்டு வெளிவந்தவை ஸ்ரீ நாகபூஷணி அம்மன் தேர்த்திருப்பணி மலர்,திருக்கேதீச்சரம் சைவமகாநாட்டு மலர் முதலியவைகளாகும். அம்முறையில் இப்பொழுது வெளிவரும் "ஈழத்துச்சிதம்பரம்" என்னும் இந்நூல்,சிவபூமி என்று திருமூலதேவராற் போற்றப்படும் ஈழநாட்டின் வடபாகத்தின் கண்ணதாகிய காரைநகரிலுள்ள புராதன சிவாலயத்தைப் பற்றியதாகும். இந்நூல், ஈழநாடு என்பது முதலாகப் பலபகுதிகளைக் கொண்டதாய், அப்புராதன ஆலய வரலாற்றினைத் திட்பமும் நுட்பமும் அமைய விளங்குவதாய் இனிய வசனநடையில் அமைந்திருக்கின்றது. இந்நூலின் அநுபந்த

மாகத் திண்ணபுர அந்தாதி, திண்ணபுரம் சுந்தரேசர் திருப்பதிகம், சுந்தரேசர் திருவூஞ்சல், திண்ணபுரவெண்பா என்னும் சிறந்த பிரபந்தங்களும் சிதைந்து போகாது சேர்க்கப்பட்டிருப்பது மேலும் சிறப்பினைத் தருவதாக உள்ளது. இப்பிரபந்தங்களுள் திண்ணபுர அந்தாதி இயற்றியவர் தமிழ்நாடெங்கணும் பெரும்புகழ்பெற்று விளங்கிய அறிஞர் திலகமாகிய பிரம்மஸ்ரீ கார்த்திகேயப் புலவராவார். மற்றைய நூல்களை ஆக்கியோர்களும் தமிழறிஞர்களெனப் பாராட்டப் பெறும் செந்தண்மை பூண்டவர்கள்.

'ஈழத்துச்சிதம்பரம்' என்னும் இந்த அரிய நூலை எழுதியும் தொகுத்துமுதவியவர், அன்பு அருள் அடக்கம், ஆசாரம் முதலிய சுகுணங்கள் நிரம்பப் பெற்றவரும், வைதிக சைவக் கிரியா நிபுணரும், எனது நண்பருமாகிய சிவஸ்ரீ ச.கணபதீசுவரக்குருக்கள் அவர்களாவார். குருக்களவர்களது நன்முயற்சி யாவராலும் பாராட்டப்படத்தக்கதாகும்.

இவர்கள் இன்னும் இவ்வாறே உலகுக்கு நன்மை பயக்கும் சிவப்பணிகளைச் செய்துகொண்டு வாழ வேண்டுமென்று செளந்தராம்பிகா சமேத ஸ்ரீ சுந்தரேசுவர சுவாமிகளது திருவடிக் கமலங்களைச் சிந்தித்து வந்தித்து வாழ்த்துகின்றேன்

**ச. குமாரசுவாமிக்குருக்கள்.**

***அச்சுவேலி,***

***பிலவ ஸ்ரீ கார்த்திகை மீ ,***

***விநாயக ஷட்டித் திருநாள்.***

## ஸ்ரீமத் சி. சுப்பிரமணிய தேசிகர்

அவர்கள்

*சீராரும் ஈழத்துச் சிதம்பரமென் றிடும்மேன்மைப்
பேராரும் காரைநகர்த் திண்ணபுரப் பெருங்கோயில்
ஏராரும் வகைமேவும் சுந்தரே சுரனிசைமை
பாராரும் படியுரைத்த பரிவுடைய பேரறிஞன்;*

*அத்தலத்தில் அருச்சகனாய் அமர்கின்ற குருமுதல்வன்
உத்தமன்சை வாகமத்தில் உரைத்தவிதி தவறின்றி
நித்தியநை மித்திகங்கள் நிகரிலா துஞற்றிடுவோன்
வித்தகன்நற் கணபதீ சுவரனெனும் விப்பிரனே.*

*அவன்மைந்தன் வைத்தியே சுவரனாம் அருங்குரவன்
நவந்தருமிச் சரிதைதனை அநுபந்தம் நனிசேர்த்தும்
உவந்தபல படஞ்சேர்த்தும் உதவுதலும் வெளியிட்டோர்
தவம்பெறுமத் தேவத்தா னத்தரும கருத்தரன்றே.*

***சி. சுப்பிரமணியதேசிகர்***

***காரைநகர்,***

***14. 12. 1961***

## சேர்.கந்தையா வைத்தியநாதன் C.C.S

அவர்கள்

குருக்கள் அவர்கள் இந்நூலுக்கு ஈழத்துச் சிதம்பரம் என்று நாமம் சூட்டி ஈழத்தையும், யாழ்ப்பாணத்தையும், காரைநகரையும் புராணரீதியாகவும், சரித்திர ரீதியாகவும் அலசி ஆராய்ந்து பெருமைகளை எடுத்துக்காட்டியதன் மூலம் இப்புண்ணிய பூமியிற் பிறக்க எம்மனோர் செய்த மாதவத்தின் பேற்றை எண்ணிப் பூரிப்படையத் தக்கதாய் இருக்கின்றது.

அத்துடன் காரையம்பதியில் கோவில் கொண்டு எழுந்தருளியிருக்கும் சௌந்தராம்பிகை சமேத சுந்தரேசுவரப் பெருமான் வரலாற்றை ஆதியோடந்தமாக எழுதி வரலாற்று மகாத்மியத்தையும் எடுத்துக் காட்டியமை பயனுடைய தொன்றாகும்.

சமூகப் பணிகளில் செயற்கரியன செய்த பெருமக்கள் பலரைச் சமுதாயம் பாராட்டும் அளவுக்குச் சமய விஷயங்களில் திருவருள் கைவரப் பெற்றுப் பணிபுரிந்த நல்லார் பலரை ஞாபகத்திற்கெடுத்துக் கொள்ளும் வழக்கம் நம்மவரிடையே அருகிவந்து கொண்டிருக்கும் இந்நாட்களில் சைவநல்லார் "அம்பலவி முருகர்" அவர்களின் அரும்பணிகள் இந்நூலில் திறம்பட இடம்பெற்றது நன்றிக்குரியதும் பெருமைப்படத் தக்கதும் ஆகும். "அம்பலவி முருகர்" அவர்கள், முன்பு ஐயனார் கோவிலாக இருந்த காலத்தும் அதைப் பஞ்ச பூதஸ்தலங்களில் ஒன்றாகிய சிதம்பரமாகச் சிந்தையில் வளர்த்தமையால் திருவாதிரை ஆனி உத்தரம் முதலிய

நாட்களை விழா எடுத்துக் கொண்டாடி இருக்கின்றார். அன்று " "அம்பலவி முருகர்" அவர்கள் சிந்தனையில் சிதம்பரரகசியமாக இருந்த விஷயங்கள் பலவற்றையும் குருக்களவர்கள் "ஈழத்துச் சிதம்பரம்" என்ற தலைப்பில் பரகசியப்படுத்தி விட்டார்கள்.

குடத்துள் விளக்காய் இருந்த இத்தியாதி பேருண் மைகள், விளக்கங்கள் பலவற்றையும் குன்றத்து விளக்காக ஒளிபரப்பும் இந்நூலுக்கு பழங்குடிச் சைவப் பெருமக்கள் இதய பூர்வமான நன்றி தெரிவிக்கக் கடப்பாடுடையவர்கள். அத்துடன் இந்நூல் வளர அரும்பணியாற்றிய குருக்கள் அவர்கள் இன்னும் பல்லாண்டு நம் சைவ மக்களுக்கு வழிகாட்டியாய் விளங்க வேண்டுமென, கௌரிநாயகி சமேத கேதீச்சரநாதர் பாதகமலங்களில் இறைஞ்சுவோமாக.

**க. வைத்தியநாதன்**

*"கொட்டில்"*

**திருக்கேதீச்சரம்,**

**பிலவ வருடம் கார்த்திகைத் திங்கள் 26 ம் நாள்.**

# பண்டித வித்துவான்
# திரு.க.கி.நடராஜன் அவர்கள் B.O.L

ஈழத்துச்சிதம்பரம் என்னும் பெயரோடு வெளிவந்த இனிய நூலை எழுதியவர் காரைநகர் பிரமஸ்ரீ ச.கணபதீசுவரக் குருக்களாவார்.

இந்நூலை யான் முதனின்று கடைசிவரை படித்துப் பார்த்தேன். மிக இலகுவான இனிய நடையில் இந்நூல் அமைந்திருக்கிறது. இதனை எழுதிய பிரமஸ்ரீ ச. கணபதீசுவரக் குருக்களவர்களின் சிவபத்தித்திறனும் செந்தமிழறிவும் அவர்தம் வசனநடையிற் பிரதிபலிக்கின்றன. ஈழத்தின் பெருமையும், யாழ்ப்பாணத்தின் சிறப்பும், காரைநகரின் கவினும், தினகரன் என்னும் அந்தணரின் ஞாபகமாகக் திண்ணபுரம் என்னும் பெயர் வந்தவகையும், ஈழத்துச் சிதம்பரம் என்று போற்றப்படும் எழின்மிகு சிவதலத்தின் மாண்பும், வரலாறும், பிறவும் படிப்போருள்ளத்திற் படம் வரைந்தாற்போலப் பதியுமாறு இந்நூல் எழுதப்பெற்றிருக்கின்றது.

நூலின் முகப்பில் அன்பர் உள்ளங்களையெல்லாங் கொள்ளை கொள்ளக் கூடியவகையில், கூத்தப் பெருமானின் மூவருணப்படம் திகழ்கின்றது. இன்னும் இருபத்தொரு அழகிய படங்கள் ஆங்காங்குச் சேர்க்கப்பட்டு நூலை அலங்கரிக் கின்றன. எழின்மிகு காகிதத்தில் முத்துப்போன்ற எழுத்துக் களின், கண்ணும், மனமுங் கவரும் வனப்பு மிக இந்நூல் அச்சிடப்பட்டிருக்கின்றது.

நூலின் இறுதியில் திண்ணபுரவந்தாதி, திண்ணபுரச் சுந்தரேசர் திருப்பதிகம், திண்ணபுரத் திருவூஞ்சல், திண்ணபுர வெண்பா என்னும் பக்திச்சுவை நிறைந்த பிரபந்தங்களும் பிற்சேர்ப்பாகச் சேர்க்கப்பட்டுள்ளன. இது சுந்தரேசுவரர் தேவஸ்த்தான வெளியீடாக அமைவது சாலவும் பொருத்த முடையதேயாம்.

இது சைவநன்மக்கள் அனைவரும் வாங்கிப் படித்து மகிழவேண்டிய ஓர் உன்னத நூல் என்பதில் ஒரு சிறிதும் ஐயமில்லை. இலங்கையின் தொன்மையும், யாழ்நாட்டின் உயர்வும் காரைநகரின் கண்ணியமும் அறிய விரும்புஞ் சரித்திர ஆராய்ச்சிக்காரருக்கும் இதில் அரிய குறிப்புக்கள் பல கிடைக் கின்றன. இத்தகைய நூல்களை எழுதி வெளியிடுவது சைவம் வளர்க்கும் பெரியோரின் தலையாய கடனாகும் என்பதை எண்ணும் போது குருக்களவர்களின் சமயப்பணி எமக்கு நன்கு புலப்படும்.

சைவமுந் தமிழும் வளர்க்குந் தனிப் பெருமையோடு விளங்கும் காரை நகரிலுள்ள பெருமக்களும் இந்நூலாசிரியரும் ஏனையோர்க்கெல்லாம் சிறந்த வழிகாட்டிகளாக விளங்குகின் றார்கள் என்று கூறி அமைகின்றோம்.

வாழுக ஈழத்துச்சிதம்பரம். வாழ்க கூத்தப் பெருமான் மன்னருள்.

க. கி. நடராஜன்

**வண்ணை,**

**12. 12. 1961**

## முதலியார் குல. சபாநாதன்

அவர்கள்

(ஸ்ரீலங்கா ஆசிரியர்)

*ஆதியும் அந்தமும் இல்லா அரும்பெருஞ் சோதியை- முன்னைப்பழம் பொருட்கு முன்னைப்பழம் பொருளை- பின்னை புதுமைக்கும் பேர்த்துமப் பெற்றியனை - உணர்ந்தார்க்கு உணர்வரியோனை எல்லோரும் இறைஞ்சு தில்லையம்பலத்தே கண்டு தொழுதற்குகந்த காலம் மார்கழித் திருவெம்பாவைக் காலமாகும். திருவாரூரிலே பிறந்தவர்களும், காசியிலே இறந்தவர்களும், சிதம்பரத்திலே சிவபெருமானுடைய திருவடியை தரிசித்தவர்களும் முத்தியடைவார்கள். திருவாரூரில் பிறப்பதும், காசியில் இறப்பதும் எழுதில் கைகூடத்தக்கனவல்ல. சிதம்பரத்திலோவெனில் ஆனந்த நடராஜருடைய குஞ்சித சேவடியை தரிசித்த மாத்திரத்தே முத்தி சித்திக்கும். ஆகவே, சிதம்பரமே எல்லாத் தலங்களினுஞ் சிறந்தது. கோயில் என்றாலே அது சிதம்பரத்தைக் குறிக்கும்.*

*சிதம்பரத்திற்கு செல்ல முடியாதவர்களின் பொருட்டு காரைதீவிலே உபய சிதம்பரத் தலமொன்று அமையலாயிற்று. இது காரைதீவுச் சிவன் கோயில் எனச் சைவப்பெருமக்களால் நன்கு அறியப்பெற்று விளங்குகின்றது. திண்ணபுரம் எனப்படும் இத்தலத்தின் பெருமையை அறிய விரும்புவோரின் ஆசையைப் பூர்த்தி செய்கின்ற முறையில் அமைந்துள்ளது "ஈழத்துச் சிதம்பரம்" எனும் நூல். இக் கோயிலின் வரலாறு அற்புதமானது பக்திச்சுவை நிரம்பியது எனவே பக்தியை ஊட்டும் பெற்றி வாய்ந்த புராதனக் கோயில் வரலாற்றினை அக்கோயில் அர்ச்சகராகத் தொண்டாற்றி வரும் பரம்பரையில் உதித்த சிவஸ்ரீ*

ச.கணபதீசுவரக்குருக்கள் அவர்கள் எழுதுவது சாலப் பொருத்தமாகும் அகில இலங்கை சைவசமய குருமார் சபைத் தலைவராக விளங்கும் கணபதீசுவரக்குருக்களவர்கள் ஈழநாட்டின் பெருமையைக் கூறுமிடத்து "இலங்கையில் தமிழும் சைவமும் மூவாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட பழமைவாய்ந்தனவென்பது மறுக்கவும் மறைக்கவும் முடியாத உண்மையாகும்" எனக்குறிப்பிடப்பட்டிருப்பது பாராட்டுதற்குரிய தொன்றாகும்.

இலங்கையிலே பிறமதங்கள் குடிபுகுவதற்கு முன் சைவசமயமே பரவியிருந்ததென்பதற்கையமில்லை. காரை தீவிலே அகத்தியர் வாழ்ந்த வரலாறு மேலும் நன்கு ஆராய்ந்து முடிவு செய்யப்பட வேண்டியதொரு விடயமாகும். காரைதீவிலுள்ள கோவளத்திற்கும் மலையாள நாட்டில் உள்ள கோவளத்துக்குமுள்ள தொடர்பு நன்காராயப்படின் இரு நாட்டிற்குமிடையேயுள்ள கலாசாரத்தொடர்புகள் நன்கு புலப்படும்.

இத்தகைய நூலை எழுதி உதவிய சிவஸ்ரீ ச.கணபதீசுவரக் குருக்கள் அவர்களுக்குச் சைவ மக்கள் பெரிதும் கடமைப்பட்டுள்ளார்கள்.

இத்தலத்தைப் பற்றி புலவர் பலர் பாடிய பிரபந்தங்களையும், அழகிய படங்களையும் சேர்த்துக் காரைநகர் சுந்தரேசுவரர் தேவஸ்த்தானம் இந்நூலை வெளியிட்டிருப்பது சிறந்த பணியாகும்.

முருகன் அருள், குல. சபாநாதன்

3 – 2 இராமகிருஷ்ண ரெறெஸ்,

வெள்ளவத்தை,

14. 12. 1961

## ஸ்ரீ.கி.பி. ஹரன் B.A.

அவர்கள்

(ஈழநாடு பிரதம ஆசிரியர்)

மூன்றாண்டுகளுக்கு முன்னர் காரைநகர்ச் சிவன் கோவிலில் நடைபெற்ற 'மாணிக்கவாசகர் விழா' வில் கலந்து கொள்ளும் வாய்ப்புத் திருவருளால் அடியேனுக்குக் கிடைத்தது. முதல்நாள் விழாவுடன் என் தலைமை முடிந்ததென்றாலும், அங்கிருந்து திரும்ப மனம் இடந்தரவில்லை. இயற்கை வனப்பும், மக்களின் சிவபக்தியும் என் உள்ளத்தைப் பெரிதும் கொள்ளை கொண்டுவிட்டன.

மார்கழித் திருவாதிரைக்குச் சைவ உலகம் சிதம்பரத்தை நோக்கும். பல காரணங்களால் அங்கு செல்ல முடியாதவர் களுக்கு, அதே கூத்தப்பெருமான் ஈழத்துச் சிதம்பரமாகிய காரை நகரில் கருணையுடன் காட்சி அளிப்பதாகக் கேள்வியுற்று எனது மற்றக் கடமைகளையும் மறந்து அங்கேயே தங்கி விட்டேன்.

பாம்பும், புலியும் மெய்ப்பாட்டுத் தேடிப்பார்த்துப் பயிரிட்ட சிதம்பரச் செல்வத்தைச் சிவஸ்ரீ ச. கணபதீஸ்வரக் குருக்கள் வழிவழியாகப் பக்தியுடன் போற்றி வளர்த்து அடியார் கள் பலருக்கும் அள்ளி அள்ளிவளர்த்து அடியார்கள் பலருக்கும் அள்ளி அள்ளிவழங்கும் ஆனந்தக் காட்சியைக் கண்டேன். விட்டுப்பிரிவதெப்படி? வேண்டுவார் வேண்டுவதே ஈவான் என்பதற்கு அத்தாட்சியாக அடியேனையும் தமது அண்மைக்கே இழுத்துக் கொண்டுள்ள அதிசயத்தை நினைக்க நினைக்க எதுவும் சொல்லத் தெரியவில்லை.

அன்றுமுதல் இத்திருத்தலத்தின் புனித வரலாற்றினை அறிய மனம் பெரிதும் விழைந்தது. ருசியான சில கதைகளைக் கேள்வியுற்றேன். இவற்றையெல்லாம் தொகுத்து ஒரு புத்தகமாக வெளிவந்தால் பலருக்கும் மிக உபயோகமாக இருக்குமென்று தோன்றியது. சிவஸ்ரீ கணபதீசுவரக் குருக்களைக் கொண்டே வெகுமேலோக நிறைவேற்றிவிட்டார் திண்ணபுரத்தண்ணல்.

சமய, சரித்திர, இலக்கிய முக்கியம் வாய்ந்த இத்திருத் தலமும், கோவிலும், மூர்த்திகளும் வளர்ந்த வரலாறும் 'சிவ ஆச்சிரமம்' போன்ற நவீன ஸ்தாபனங்களால் எவ்விதம் தருமமிகு இத்தலம் திருவருளால் வளர்ந்துவருகின்றதென்பதும் பல படங்களுடன் அழகாகத் தேவத்தானத்தாரால் வெளியிடப் பெற்றுள்ளது நல்லதோர் புண்ணியம். பழைமையும் புதுமையும் கலந்த முறையில் நவீன ஸ்தலபுராணமாகப் பொலியும் இந்நூல், ஈழத்துச் சிதம்பர தரிசனத்துக்கு வரும் பக்தகோடிகளுக்குப் பெரும் பயனளிக்குமென்பது உறுதி.

**கி. பி. ஹரன்**

**யாழ்ப்பாணம்**

**13. 12. 61.**

## சங்கநூற் செல்வர்
# பண்டிதர் சு. அருளம்பலவனார்
அவர்கள்

புண்ணிய பூமியாகிய பரதகண்டத்தின் தென்பால் அமைந்த இலங்கைத்தீவு பண்டைக் காலத்தில் 'ஈழம்' எனவும் வழங்கப்பட்டு வந்தது. இதன் வடதிசைக்கண்ணுள்ள காரை நகர்ச் சுந்தரேசுவரர் ஆலயம் சிதம்பரம் எனப்போற்றத்தக்க வகையில் சிறப்பமைந்து விளங்குகின்றது. பழமை வாய்ந்த இவ்வாலய வரலாற்றினை 'ஈழத்துச் சிதம்பரம்' என்னும் பெயருடன் பிரம்மஸ்ரீ ச. கணபதீசுவரக்குருக்கள் அவர்கள் சிறந்த முறையில் எழுதியுள்ளார்கள்.

ஈழத்தின் பழமையும், சைவமும் தமிழும் பண்டைக் காலந்தொட்டு இங்கே சிறந்து விளங்கியமையும் இந்நூலுள் கூறப்பட்டுள்ளன. வடிவேலெறிந்த வான்பகை பொறாது, கடல் குமரி நாட்டின் பெரும்பகுதியை விழுங்கியபோது எஞ்சிய பகுதி காரைதீவாய்க் காட்சியளிக்கின்றது என்று அகத்தியர் வரலாற்றிலும், வடமொழி, தென்மொழி வல்ல அகத்தியர் காரைத்தீவில் வசித்தார் என்று புத்த ஜாதகத்திலும் கூறப்படுதலையும், தூர்வாச முனிவர் இத்தீவில் அமர்ந்து தவஞ்செய்தார். இத்தீவின் பழைமையையும் பெருமையையும் ஆசிரியர் இதன்கண் நன்கு விளக்கியுள்ளார். முன்வெளிவந்த இவ்வாலய வரலாற்று நூல்களில் கூறப்படாத செய்திகள் பல இதன்கண் காட்டப்பட்டுள்ளன.

இந்நூலின் பிற்பகுதியில் அநுபந்தமாக அமைந்த திண்ணபுரவந்தாதி, திண்ணபுரத் திருப்பதிகம், திண்ணபுர வெண்பா

என்பன இத்தலத்தின் பெருமையை நன்கு விளக்குகின்றன. ஆலய வரலாற்றோடு தொடர்புபட்ட படங்களை நூலிற் சேர்த் திருப்பது பாராட்டத்தக்கது. இந்நூலைத் திண்ணபுரத்தேவத்தா னத்தார் வெளியிட்டிருப்பது போற்றத்தக்கது. இதனை யாவரும் வாங்கிப் படித்துப் பயன்பெறுவார்களாக.

காரைநகர், ச. அருளம்பலம்

15. 12. 61

அகில இலங்கைச் சிவப்பிராமண சங்கக் காரியதரிசி

## சிவஸ்ரீ சி. குஞ்சிதபாதக்குருக்கள்

அவர்கள்

*சைவ சமயத்தின் மாண்பையும், முற்காலத்தில் இலங்கையை ஆண்ட அரசர்களும் சைவ சமயத்தை வளர்த்தார்கள் என்பதையும் விளக்குவதும், இக்காலத்தும் நித்திய, நைமித்திகங்கள் சிறப்பாக நடைபெறும் (காரைநகர்) திண்ணபுரச் சிவன் கோவிலின் வரலாற்றை விளக்குவதுமாகிய "ஈழத்துச் சிதம்பரம்" என்னும் நூல் சைவசமயிகளால் பாராட்டு தற்குரியது.*

*இந் நூலாசிரியராகிய சிவஸ்ரீ ச. கணபதீசுவரக்குருக்கள் அவர்கள் பல நூல்களின் ஆராய்ச்சியையும், அனுபவத்தையும் கொண்டு இந் நூலைத் தொகுத்துள்ளார்கள்.*

*மேலும், வடமொழி, தென்மொழி வல்லுநராகவும், கிரியா விளக்கம் நன்கறிந்தவராகவும் விளங்கும் குருக்கள் அவர்கள், சைவ சமூகத்திற்கும், சைவ சமயத்திற்கும் செய்யும் தொண்டு கள் பாராட்டுதற்குரியன.*

***அகில இலங்கைச்***<br>
***சிவப்பிராமண சங்கம்***<br>
***கொழும்பு. 16. 12. 61***

***சி. குஞ்சிதபாதக்குருக்கள்***<br>
***காரியதரிசி***

# நன்றியுரை

ஈழத்துச் சிதம்பரம் என்னும் இந்நூல், இச் சிறப்புப் பெயரால் அழைக்கப்படும் காரைநகர் திண்ணபுரத்துச் சுந்தரேசுவரர் தேவத்தான வரலாற்றையும், அநுபந்தங்களாக அச்சுந்தரேசுவரர் மீது பாடப்பட்ட பிரபந்தங்களையும் அடக்கியது. இவற்றைத் தங்கள் தேவத்தான வெளியீடாக வெளியிடும் படி ஒன்றுக்கும் பற்றாத சிறியேமாகிய எம்மிடம் தேவத்தான கர்த்தர்கள் ஒப்படைத்தார்கள். இது சுந்தரேசுவரர் சோதிக்கத் திருவுளங் கொண்டது போலவே எமக்குத் தோன்றியது. இந்தத் தேவத் தானத்தின் உண்மை வரலாற்றை அன்பர்கள் அறிய வேண்டு மென்னும் பெருவிருப்பினாலும், வரலாற்று நூலாசிரியரதும், பிரபந்த நூல்களின் ஆசிரியர்களதும் திருத்தொண்டு நீடு நிலைக்க வேண்டுமென்னும் பேரார்வத்தினாலும் திருவருளை முன்னிட்டு இப் பணியை மேற்கொண்டோம்.

இந்நூல் உருப்பெற்றுச் சிறந்த முறையில் வெளிவருவதற்குப் பொருள் முட்டுப்பாடு ஏற்படாத வகையில் உதவிய பேரன்பர்களாகிய ஸ்ரீமதி தங்கம்மா நடராஜா, பிரம்மஸ்ரீ கா.சி. மஹேசசர்மா, காரைநகர் யாழ்நகர்க் கல்லூரி உப அதிபர் பிரம்மஸ்ரீ ப. சுவாமிநாதசர்மா B.A., காரை இந்துக் கல்லூரி ஆசிரியர் த. கனகசுந்தரம், திரு.க. பரமு (மலேயா பென்ஷனர்) திரு.க. சுப்பிரமணியம் (மலேயா பென்ஷனர்) சந்நிதியான் ஸ்ரோர்ஸ் திரு வே. ஆறுமுகம் என்பவர்களுக்கு யாம் என்றென்றும் கடப்பாடுடையோம்.

மிகக்குறுகிய காலத்தில் இந்நூலைச் சிறப்பாக அச்சிட்டுதவிய கலாதேவி அச்சகத்தாருக்கும், அச்சாக்கும் போது தமது ஆலோசனைகளைத் தெரிவித்து உதவிய கந்தரோடைத் தமிழ்க் கந்தையா வித்தியாசாலை தலைமை ஆசிரியர் பிரம்மஸ்ரீ சு. சிவசுப்பிரமணிய ஐயர் அவர்களுக்கும்,

திண்ணபுரம் தேவஸ்தானத்துத் திருவுருவங்களின் நிழற்படங்களை எடுத்துதவி அழகுபடுத்திய சுன்னாகம் "பிறின்ஸ்" படப்பிடிப்பாளருக்கும், அட்டைப்படத்தை மூவர்ணத்தில் அமைத்துத்தந்த அழகுபடுத்திய திரு. வி.கனகலிங்கம் அவர்களுக்கும், இதை அச்சிட்டுத்தந்த கொழும்பு மெய்கண்டான் அச்சகத்தாருக்கும் எமது உளம் கலந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

அச்சுவேலி சிவஸ்ரீ ச. குமாரசுவாமிக்குருக்கள் அவர்களும், சேர். கந்தையா வைத்தியநாதன் அவர்களும் ஸ்ரீமத் சி.சுப்பிரமணியதேசிகர் அவர்களும் முதலியார் குல. சபாநாதன் அவர்களும், "ஈழநாடு" பிரதம ஆசிரியர் ஸ்ரீகி. பி.ஹரன் அவர்களும், பண்டிதர், வித்துவான் க.கி. நடராஜன் அவர்களும் சங்கநூற் செல்வர், பண்டிதர் சு. அருளம்பலம் அவர்களும், அகில இலங்கைச் சிவப்பிராமண சங்கக் காரியதரிசி சிவஸ்ரீ சி. குஞ்சிதபாதக்குருக்கள் அவர்களும் இந்நூலுக்கு அணிந்துரைகள் அளித்துக் பெருமைப்படுத்தியிருக்கிறார்கள் அவர்களுக்கு எங்கள் நன்றி உரித்தாகுக.

இந்நூலை வெளியிடுதல் சம்பந்தமாகப் பல்லாற்றானும் உதவிகள் புரிந்த காரை இந்துக் கல்லூரி ஆசிரியர் திரு. சி. ஐயாத்துரை B.A., காரைநகர் வடக்குக் கிராமத்தலைவர் திரு. ந. அருளையா, யாழ்ப்பாணம் அவதான நிலையத்தைச் சேர்ந்த திரு. இ. வைத்தியலிங்கம் (காரைநகர் வடக்கு), காரை யாழ் நகர்க்கலாசாலை ஆசிரியர் திரு.வே.ச. வேலுப்பிள்ளை, Dr. கு. தண்டாயுதபாணி, அரசகருமமொழிப் பகுதியைச் சேர்ந்த ஆராய்ச்சி உதவியாளர் வித்துவான், F.X.C. நடராஜா, "கலைச் செல்வி" ஆசிரியர் சி. சரவணபவன் (சிற்பி) B.A., கொழும்பு கொம்மேர்ஷல் கம்பனியைச் சேர்ந்த திரு.தி.சி. கணேசலிங்கம் ஆகிய அன்பர்களுக்கும் யாம் என்றும் கடப்பாடுடையோம்.

**காரைநகர்.** — **க. வைத்தீசுவரக்குருக்கள்,**
**20.12.1961** — **க. சிற்றம்பலம்.**

உ

*சிவமயம்*

*திருச்சிற்றம்பலம்*

# ஈழத்துச் சிதம்பரம்

சடையா யெனுமால் சரண்நீ யெனுமால்
விடையா யெனுமால் வெருவா விழுமால்
மடையார் குவளை மலரும் மருகல்
உடையாய் தகுமோ இவளுண் மெலிவே.

வாயானை மனத்தானை மனத்துள் நின்ற
கருத்தானைக் கருத்தறிந்து முடிப்பான் தன்னைத்
தூயானைத் தூவெள்ளை யேற்றான் தன்னைச்
சுடர்த்திங்கட் சடையானைத் தொடர்ந்து நின்றென்
தாயானைத் தவமாய தன்மை யானைத்
தலையாய தேவாதி தேவர்க் கென்றும்
சேயானைத் தென்கூடற் திருவால வாய்ச்
சிவனடியே சிந்திக்கப் பெற்றேன் நானே.

முத்தா முத்தி தரவல்ல
முகிழ்மென் முலையா ளுமைபங்கா
சித்தா சித்தித் திறங்காட்டுஞ்
சிவனே தேவர் சிங்கமே
பத்தா பத்தர் பலர்போற்றும்
பரமா பழைய னூர்மேய
அத்தா ஆலங் காடாவுன்
அடியார்க் கடியே னாவேனே.

நாயிற் கடையா நாயேனை
நயந்து நீயே யாட்கொண்டாய்
மாயப் பிறவி யுன்வசமே
வைத்திட் டிருக்கு மதுவன்றி
ஆயக் கடவேன் நானோதான்
என்ன தோவிங் கதிகாரம்
காயத் திடுவா யுன்னுடைய
கழற்கீழ் வைப்பாய் கண்ணுதலே.

செய்வினையுஞ் செய்வானும் அதன்பயனுங் கொடுப்பானும்
மெய்வகையால் நான்காகும் விதித்தபொருள் எனக்கொண்டே
இவ்வியல்பு சைவநெறி அல்லவற்றுக் கில்லையென
உய்வகையாற் பொருள் சிவனென் றருளாலே உணர்ந்தறிந்தார்.

---

வானிடைப் பரந்த வரம்பில்பல் மீன்கணம்
தானுறு செலவும் தன்மையும் பிறவும்
ஐம்பெரும் பூத அடைவும் வனப்பும்
தம்பெரு நுண்மதி தன்னால் அறியும்
விஞ்ஞான அறிவு விளைந்தவர் தாமும்
மெய்ஞ்ஞா னந்தரு வேதமு வேதனும்
மாலும் அறியா மாண்பினை நீயே!
நாயேன் செய்யும் நவைமலி பூசையும்
நாளுங் கொண்டருள் நலங்கனி மூர்த்தீ!
திண்ணபுரமென்று விண்ணவர் போற்றும்
புண்ணிய புரமிதிற் புரிந்து வீற்றிருப்போய்!
மனமொழி மெய்களால் வழுத்துநர் நின்னை
தனமுதற் பேறுகள் தழைத்து வாழுவரே.

ஆயும் பொருளும் அறிவும் அகிலமும்
தாயும் நீயென்று தழைத்தன்பு - ஏயுறவே
ஈண்டியித் திண்ணபுர மெய்தியே நானாளும்
ஆண்டவனே போற்ற அருள்.

உறவும் பொருளுமொண் போகமும் ஞானமுள வெவையும்
நறவ மலர்க்கழ லென்றே யடைந்தனன் நானிலத்தில்
அறையும் பறைநின் றதிரவொ ரம்பினா லாண்டுகொண்ட
சிறையம் புனலணி திண்ண புரத்துளெம் தேசிகனே .

# ஈழநாடு

ஸ்ரீ விராட்புருடனது சரீரமாகிய பிரமாண்டத்தின் இடநாடிக்கு ஸ்தானம் என்று சாந்தோக்கியம் முதலான உபநிஷத்துக்களிலே எடுத்தோதப்படுவது இவ் இலங்கைத்தீவு.

இது தொடுகடலுடுத்த நிலமகட்கு முகமென மிளிரும் பரதகண்டத்தின் தென்பால் இந்து சமுத்திரத்தின் முத்துப் போன்று விளங்குவது, இஃது 'ஈழம்' என்று முன்னாளில் வழங்கப்பட்டமை பட்டினப்பாலை என்னும் சங்க இலக்கியத்தால் அறியக் கிடக்கின்றது. இதனை 'இலங்காதீபம்' என்று மணிமேகலை என்னும் பழந்தமிழ் நூல் கூறுகின்றது. திருமூலதேவ நாயனாராலே இது "சிவபூமி" என்று பாராட்டப்பட்டுள்ளது' தக்ஷிண கைலாச புராணத்திலே புண்ணியபூமி என்று விதந்து கூறப்பட்டுள்ளது. திருஞானசம்பந்த சுவாமிகளாலும், சுந்தரமூர்த்தி சுவாமிகளாலும் பாடல்பெற்ற ஸ்தலங்களாகிய திருக்கேதீச்சரம், திருக்கோணமலை என்பவற்றைத் தன்னகத்தே கொண்டுள்ளது. ஸ்ரீமேரு மலையின் சிகரங்களில் ஒன்று வாயுதேவனாற் பிடுங்கி வீசப்பட்டது என்றும், அதுவே திருக்கோணமலை என்றுங் கூறுப. அருணகிரிநாத சுவாமிகளாற் பாடப்பெற்ற கதிர்காமமாகிய சுப்பிரமணிய க்ஷேத்திரம் இதன் தென்பாகத்தில் விளங்குகின்றது. இன்னும் முனீஸ்வரம், நகுலேஸ்வரம், மாவிட்டபுரம், நல்லூர் முதலிய ஸ்தலங்களையும், பல தீர்த்தங்களையும் தன்னகத்தே கொண்டுள்ளது இத்தீவகம்.

மேலும் இவ் இலங்காதுவீபம் பரப்பளவிற் சிறியதாயினும் முகில்கள் தவழும் விண்ணுறவோங்கிய மலைகளாலும், உயர்ந்த மரங்களடர்ந்த பெரிய காடுகளாலும், நீண்ட பெரிய நதிகளாலும், அருவிகளாலும் சிறப்புற்று விளங்குகின்றது.

இதன் இயற்கையழகைக் கண்டு அனுபவித்தற்காகப் பலநாட்டவரும் பல்லாயிரக்கணக்கில் வருடந்தோறும் வருகின்றனர்.

காலந்தப்பாது பெய்யும் மழையினால் வயல்களில் நெல் வருடந்தோறும் இரண்டு மூன்று முறை விளைவிக்கப்படுகின்றது. மா,பலா,வாழை முதலிய கனிதரு மரங்கள் எப்பொழுதும் பயன் தந்து கொண்டிருக்கின்றன. தாமரை,குவளை முதலிய மலர்கள் ஓடைகளிலுங் குளங்களிலும் இடையறாமல் மலரும். காடுகளில் யானைபோன்ற பெரிய மிருகங்களும், மான், மரைபோன்ற சிறிய மிருகங்களும் வாழுகின்றன. மயில் முதலாம் பல்வகை அணிபெறு பறவைகள் மல்கி விளங்குகின்றன.

இலங்கையோடு சூரபன்மனைத் தொடர்புபடுத்திக் கந்தபுராணம் கூறுகின்றது. இ∴து இராவணனால் ஆளப்பட்ட நாடென இராமாயணம் கூறுகின்றது. இராவணன் சிவனடி மறவாப் பேரன்பினன். திருஞானசம்பந்தசுவாமிகளும், திருநாவுக்கரசு சுவாமிகளும் தேவாரங்களில் இவனது சிவநெறியினை விதந்து பாராட்டுகின்றார்கள். இராவணனது மனைவியாகிய மண்டோதரி சிவபிரானது திருவருள் பெற்றவள் என்பதை மாணிக்கவாசக சுவாமிகள்,

“ஆர்கலிசூழ் தென்னிலங்கை யழகமர் வண்டோதரிக்குப்
பேரருள் இன்பமளித்த பெருந்துறைமேய பிரானை”

எனக் கூறுதலால் நன்கு அறியப்படும்.

இராவணன் ஆட்சிக்காலத்தில் இலங்கையின் வடபகுதியில் நாகரும், தென்பகுதியில் இயக்கரும் வாழ்ந்தனரென்றும், இயக்கர் அரசனே இராவணன் என்றும், நாகர்களாலேயே திருக்கேதீச்சரம் முதலிய ஸ்தலங்கள் தோற்றுவிக்கப்பட்டிருக்க வேண்டும் என்றும் சரித்திர ஆராய்ச்சியாளர் கருதுகின்றார்கள். நாகர்வழி வந்தவர் களே தமிழர்கள் என்பது ஒருசாரார் கொள்கை.

இலங்கையில் வசித்த இயக்கரும், நாகரும் சிவ வழிபாடு உடையவர்கள் என்பதும், இலங்கையில் சரித்திர ஆரம்பகாலத் தில் சிவ வழிபாடே இருந்தது என்பதும், சரித்திரக்காரர் பலருக்கும் ஒத்தமுடிபுகளாகும். இலங்கையின் பெரிய நதியாகிய மகாவலிகங்

கையின் கரையில் அநேக சிவாலயங்கள் இருந்தன என்றும், அதனால் மகாவலி கங்கைக்கு மகாலிங்க கங்கை எனப் பெயர் இருந்தது என்றும், அதுவே தற்போது வழங்கும் பெயராக மருவியது என்றும் ஒருசாரார் கூறுவர்.

இராவணனுடைய ஆட்சிக்குப்பின் இங்கு வைஷ்ணவம் பரவத் தொடங்கியது என்ப. பிற்காலத்தில் வைஷ்ணவம் தனித்த சமயமாய் நில்லாமல், இலங்கையின் தென்பகுதியில் பௌத்தத்து டனும், வடபகுதியில் சைவத்துடனும் கலந்து தன் தனித்தன்மையை இழக்கலாயிற்று என்ப.

இலங்கையில் தமிழும், சைவமும் மூவாயிரம் ஆண்டுக ளுக்கு முற்பட்ட பழைமை வாய்ந்தனவென்பது எவ்விதம் முயன்றாலும் மறுக்கவும், மறைக்கவும் முடியாத உண்மையாகும்.

தமிழர் பண்டுதொட்டு இலங்கையின் பல பாகங்களிலும் வசித்தனர்; சிங்கள மக்களோடு கலந்தும் வாழ்ந்தனர். பல சிங்களக் குடும்பப் பெயர்களாலும் சிங்கள பாஷையிற் கலந்து வழங்கும் பழந்தமிழ்ச் சொற்களாலும் இஃது உறுதிப்படுகின்றது. இன்னும் இதனைப் பொலநறுவைச் சிவாலயம் பிரத்தியட்சமாய் எடுத்துக்காட்டுகின்றது.

---

# யாழ்ப்பாணம்

தமிழர் இலங்கையிற் பல பாகங்களிலும் பரவிச் செறிந்து வாழ்ந்தனராயினும் பிற்காலத்தில் யாழ்ப்பாணம் அவர்களுடைய ஆட்சித் தானமாய் இருந்து வந்தது. இந்தியாவிற் தொண்டை நாட்டிலுள்ள கவிவீரராகவன் என்னும் யாழில்வல்ல அந்தகன் 1

---

1 வாலசிங்க மகாராசன் செயதுங்கவரராசசிங்கன் என்னும் பட்டத்துடன் முடிசூட்டப்பெற்று, அரசாட்சியை ஒப்புக் கொண்டான்.

பகுதியைப் பெற்றான் என்றும், நல்லூரிலே இராசதானி அமைத்து ஆட்சிசெய்யும் போது தொண்டை நாட்டிலிருந்து சனங்களைக் கொண்டு வந்து குடியேற்றினான் என்றும் சரித்திரம் கூறும். அந்த யாழ்ப்பாடியைத் தொடர்ந்து ஆரியச் சக்கரவர்த்திகள் பலர் அரசாட்சி செய்துவந்தனர். யாழ்ப்பாணத்திலுள்ள சில ஊர்களின் பெயர்களால் இது தென்னிந்தியாவுடன் நெருங்கிய தொடர்புடையதாக இருந்தது என்பது தெளிவாகின்றது. வேதாரணியம் கோவிலுக்கும் கரணவாயிலுள்ள சைவக்குருக்கள் மார்களுக்கும் நெருங்கிய தொடர்பு உண்டு. யாழ்.திருநெல் வேலியைச் சேர்ந்த ஞானப்பிரகாச சுவாமிகள் திருவண்ணாமலை ஆதீனத்திலே தம்பிரானாக விளங்கித் தமிழுக்கும், சைவத்திற்கும்

---

அக்காலத்திலே சோழநாட்டிலிருந்து இரண்டு கண்ணுங் குருடனாகிய கவிவீரராகவன் என்னும் யாழ்ப்பாணன். செங்கடக நகரிலிருந்து அரசாட்சி செலுத்தும் வாலசிங்க மகாராசன் பேரிற் பிரபந்தம் பாடிக் கொண்டு போய் யாழ்வாசித்துப் பாடினான். அரசன் அதைக்கேட்டு மிகவும் சந்தோஷங் கொண்டு அவனுக்குப் பரிசாக இலங்கையின் வடதிசையிலுள்ள மணற்றிடல் என்னும் இந் நாட்டைக் கொடுத்தான்.

யாழ்ப்பாணன் இதற்கு யாழ்ப்பாணம் என்று பெயரிட்டு இவ்விடத்தில் வந்திருந்து வடதிசையிற் சில தமிழ்க் குடிகளை அழைப்பித்துக் குடியேற்றி இவ்விடமிருந்த சிங்களவர்களையும் அவர்களையும் ஆண்டு வந்தான் (யாழ்ப்பாண வைபவ மாலை---பக் 23,24 முதலியார் குல. சபாநாதன் பதிப்பு)

சோழநாட்டிலிருந்து கவிபாடிக் கன பரிசுகள் பெற்ற கவிவீர ராகவன் என்னுங் குருடன், செங்கடக நகரிலிருந்து அரசாண்ட செயதுங்கவரராசசிங்கன் என்னும் வாலசிங்கன் பெயரிற் புகழ்மாலையாக ஓர் பிரபந்தம் பாடிக் கொணர்ந்து இராசசபையிலே வந்துட்கார்ந்து, தனது யாழ்க் கருவியிற் கைபோட்டு நரம்புகள் இறுக்கித் தொனிபார்த்துச் சுதிகூட்டி யாலாபித்துக் கையாலுந் தனது குரற்றொனியாலுஞ் சங்கீத சாகித்திய முறைப்படி பாடினான். அவையிலுள்ளோர் தத்தம் செவிகளையே வாய்களாகக் கொண்டு கானரசத்தையமிர்தம் போற் பருகிப்பாடகனுக்கும் யாழ்த் தொனிக்கும் பேதமின்மையால், நயந்து, வியந்து, புகழ்ந்து ஆச்சரியமுற்றிருக்க அரசனும் இதற்கிணையின்றென்று ஆனந்தக் களிப்புற்று அதற்குப் பரிசாக மணற்றிடல் என்னும் இந் நாட்டை யாழ்பாடிக்கு கொடுத்தான். கவிவீரராகவன் என்னும் யாழ்ப்பாடி தன்னாம காரணப்படி இந்நாட்டுக்கு யாழ்ப்பாணம் எனப் பெயரிட்டு வடதேசத்திலிருந்து சில தமிழ் குடிகளை அழைத்துக் கொண்டு வந்து குடியேற்றி, இவ்விடமிருந்த சிங்களவரையும் அரசாண்டு வந்தான்.(யாழ்ப்பாணச் சரித்திரம் By:.S.Johan, பக்கம்-.19,20)

அளப்பரிய தொண்டுகள் புரிந்துள்ளதை உலகம் நன்கறியும். இவர் மரபில் உதித்த ஆறுமுகநாவலர் அவர்கள் தென்னிந்தியா, இலங்கை ஆகிய இரு நாடுகளிலும் சைவோத்தாரணம் புரிந்து விளங்கிப் பெரும் மதிப்புப் பெற்று வாழ்ந்தார்கள். அவருடைய தொண்டு கல்மேல் எழுத்துப் போன்று இன்றும் நின்று நிலவுகின்றது இன்னும் கல்வியில் சிறந்த பலர் இருந்தார்கள்; இருக்கின்றார்கள். சுருங்கக் கூறின் யாழ்ப்பாணத் தமிழர்களுடைய புகழ் உலகெங் கணும் பரவியதொன்றாம்.

## காரைநகர்

யாழ்ப்பாண தீபகற்பத்திற்கு மேல்பால் யாழ்ப்பாணப் பட்டினத்தில் இருந்து பத்துக்கல் தொலைவில் நான்கு புறமும் கடலாற் சூழப்பட்டிருப்பது காரைதீவு, மேற்கு, வடக்குப் பக்கங் களில் பாக்கு நீரிணையும், கிழக்குப் பக்கத்தில் சில காலங்களில் வற்றுதலையும் உடைய பொன்னாலைக் கடல் என்னும் சிறு நீர்ப்பரப்பும், தெற்குப் பக்கத்தில் அகலம் மிகவும் குறைந்த சிறிது ஆழமுடைய கடலும் இதைச் சூழ்ந்துள்ளன. இது நாலரை மைல் நீளமும், மூன்றரை மைல் அகலமும் உடைய சிறிய தீவாக இருந்தாலும் பணப்புழக்கம், சனநெருக்கம் முதலியவற்றாற் சிறந்துள்ளது. அக்காலத்திலே காரைச்செடிகள் நிறைந்துள்ள காரணத்தாற் காரைதீவு என அழைக்கப் பெற்றது என்பர் சிலர்.

*1* "வடிவேலெறிந்த வான்பகை பொறாது" கடலானது ஒளி நாடு, பெருவளநாடு, குமரிநாட்டின் பெரும் பகுதி முதலிய வைகளை விழுங்கிய போது எஞ்சிய பகுதி காரைத்தீவாய் இன்றும் காட்சி தருகின்றது என்று கூறுகின்றது அகத்தியர் வரலாறு.

இன்னும் இத்தீவைப் பற்றி மகாவித்துவான் மு. இரகவ ஐயங்கார் அவர்களது அறுபதாவது ஆண்டு நிறைவு விழாவின் போது வெளியிடப்பட்ட ஆராய்ச்சிக் கட்டுரைத் தொகுதி பின்வருமாறு கூறாநிற்கின்றது :-

---

1 அகத்தியர் வரலாறு பக் .75 2

மணிபல்லவம் என்ற தீவிற்கு மேற்கூறிய சமுத்திர தேவதையால் மணிமேகலை அழைத்துச் செல்லப்பட்டதும் ஆங்கிருந்த புத்த பீடிகையால் அவள் தன் பிறப்பு உணர்ந்து கொண்டதும், அங்குள்ள பொய்கை ஒன்றிற் பெற்ற அமுதசுரபி என்ற அக்ஷயபத்திரத்தோடு அவள் வெளியேறி அறங்கள் பல செய்ததும் பிறவும் மணிமேகலை நூலால் அறியப்படும். இம் மணிபல்லவம் காவிரிப் பூம்பட்டினத்திற்கு தெற்கே முப்பது யோசனையில் உள்ளதாகச் சாத்தனார் கூறுவர். இத்தீவு இப்போது யாழ்ப்பாணப்பகுதிகளுள் ஒன்றாகவே பலராலும் கருதப்படுகின்றது. அவற்றுள்ளும் காரைதீவு என்ற பகுதியே மணிபல்லவமாகக் கருதப் பொருத்தமுண்டு. இதற்கும் புகார் நகர்க்கும் பண்டைக் காலத்தில் இருந்த தொடர்பை அடியில் வரும் 1 அகத்தியர் யாதகக் கதையால் அறியலாம்.

காசியிலே, பெருஞ்செல்வமுடைய பிராமணக் குடும்பம் ஒன்றில் பிறந்த அகத்தியர் என்பார், தம்; தந்தை இறந்ததும், தமக்குக் கிடைத்த செல்வம் முழுவதையும் ஏழு நாளிற் தான தருமங்களிற் செலவு செய்துவிட்டுத் துறவியாக தம் சகோதரி யுடன் தமிழ்ராஜ்யத்துக்குச் சென்று, காவேரிப்பட்டினத்திலுள்ள உப வனமொன்றிற் தங்கித் தியானத்தில் இருந்தவர் என்றும், பின் அவ்விடமும் அவர்க்கு ஏற்றதாகாமையால் ஆகாசவழியே நாகதீப த்தின் வடபால் உள்ள காரைதீவிற்குச் சென்று, அங்கிருந்த காரை மரத்தின் கீழ்க் குடிலமைத்துக் கொண்டு அதனுள்ளிருந்து தனியே நோற்று வந்தனர் என்றும், அவரது அருஞ் செயல்கள் இந்திரனது பளிங்காசனத்தை நடுங்கச் செய்யவே, அவன் நேரில் வந்து அவரது பெருமையை அறிந்து உரியவற்றைச் செய்து சென்றான் என்றும் அந்த ஜாதகம் கூறுகின்றது. இலங்கையை நாகதீபம் என்ற பெயரால் ஜாதகங்கள் பலவும் வழங்கும். இத்தீபத்தின் வடபால் உள்ள காரைத்தீவு பௌத்தர்களால் முற்காலத்தே பெரிதும் மதிக்கப்பட்ட தென்பதற்கும், காவிரிப்பூம்பட்டினத்தோடு இதற்கு நெருங்கிய தொடர்பு இருந்தது என்பதற்கும் இக் கதையே தக்க சான்றாகும்.

---

1, ஜாதகக் கதை: பகுதி ✓ .பக்கம் 150.

புத்த ஜாதகம் பினவருமாறு பேசுதல் காண்க:--

"அகத்தியர் ஆகாயத்தின் கண்ணே குறுகிய வடிவில் பேரொளி வீசும் பிறையை ஒப்பத் தம் மேனி வாடக் கடுந்தவம் புரிந்து பெற்ற பேரொளி தோன்றக் காரைதீவில் வசித்தார்."

[1] இக் காரைத்தீவு அகத்தியர் வடமொழி, தென்மொழிகளில் வல்லுநர். இவர் தம்பெயரால் ஒரு நூல் செய்துள்ளார். ஆனால் அந்தநூல் முழுதும் கிடைக்கவில்லை. அந்நூலிலிருந்து உரையா சிரியர்கள் இரண்டொன்று எடுத்து ஆண்டிருக்கிறார்கள்.

நன்னூலில் மயிலைநாதரும் சங்கர நமச்சிவாயரும் 'ஏற் கும் எவ்வகைப் பெயர்க்கும்' என்னும் பெயரியற் சூத்திர உரையில் அகத்தியர் சூத்திரம் என்று ,

"ஏழியன் முறையது எதிர்முக வேற்றுமை
வேறென விளம்பான் பெயரது விகாரமென்று
ஓதிய புலவனும் உளன்; ஒருவகையான்
இந்திரன் எட்டாம் வேற்றுமை என்றனன்"

என்னும் சூத்திரத்தைக் காட்டியுள்ளனர்.

காரைதீவில் இருந்த அகத்தியரும் பாணினியும் ஒரேகாலத் தவர்கள் என்றும், பாணினி காலம் கி.மு. 400 ஆகும் என்றும் ஆராய்ச்சியாளர் கூறுவர். ஆகவே, காரைதீவு இற்றைக்கு 2350 ஆண்டுகளுக்கு முற்பட்ட சரித்திரப் பெருமையினை உடைய தென்பதனையும், இங்கே அகத்தியர் முதலான தமிழ்ப் பேரறி ஞர்கள் வாழ்ந்துவந்தார்களென்பதனையும் எவரும் மறக்கமுடியாது.

தூர்வாச முனிவரும் இத்தீவில் அமர்ந்து தவஞ்செய்தார் எனவும், அவர் இருந்து தவஞ்செய்த இடம் 'துர்வாகிரி' யென வழங்கியதெனவும், அதுவே தூர்வா - தூர்வில் - தூம்பில் [1] என

---

1 அகத்தியர் வரலாறு பக், 75.

1. காரைநகரின் வடகிழக்கு முனைப்பகுதியே தூம்பில் எனப்படும்.

அழைக்கப்படுகின்றதெனவும் சரித்திர ஆராய்ச்சியாளர் கருது கிறார்கள்.

இத்தகைய பழைமை வாய்ந்த காரைதீவின் தென் பாகத்தில் ஊர்காவற்றுறை என்னும் துறைமுகம் இருக்கின்றது. கி.பி. 1284 ல் மார்க்கோ போலோ என்பவர் சீனாவிலிருந்து மேலைத்தேசங்களுக்குப்போகும் வழியில் யாழ்ப்பாணத் துறைமுகமொன்றில் தாம் தங்கியதாகவும், அதன்பெயர் 'கோளம்' என்றும், அங்கே சீனா, அரேபியா முதலிய தேசங்களிலிருந்து கப்பல்கள் வியாபார நோக்கமாக வந்து போனதாகவும் கூறியிருக்கின்றார்.

மார்க்கோபோலோ குறிப்பிடும் 'கோளம்' என்ற துறைமுகம், (இப்போதைய) 1 'கோவளம்' தொடக்கம் ஊர்காவற்றுறைவரையு முள்ள பகுதிகளையடக்கிப் பரந்த விசாலமானதாக இருந்த தென்றும், அக்காலத்தில் ஊர்காவற்றுறை என்ற பெயர் இருந்ததில்லையென் றும், காலக்கிரமத்தில் அத்துறைமுகத்தின் தென்பகுதி ஊர்காவற் றுறை என்ற பெயரைப் பெற வடபகுதி 'கோளம்' என்ற பெயரைப் பெற்றதென்றும் இந்தக் 'கோளம்' என்ற சொல்லே 'கோவளம்' என மாற்றமடைந்ததென்றும் எண்ண இடமுண்டு.

முஸ்லீம் பிரயாணிகள் 2 'கலா' என்பதும் மார்க்கோ போலோ 'கோளம்' என்பதும் ஒரே துறைமுகத்தையே குறிக்கு மென்று ஆராய்ச்சியாளர் கருதுகின்றார்கள்.

ஊர்காவற்றுறைக்கடல் பாக்கு நீரிணையுடன் சந்திக்கும் வாசலில் ஒல்லாந்தரால் 3. வியாவில் ஐயனார் கோவிலை

1. காரைநகரில் வடமேற்குப் பக்கமாகக் கடலையடுத்துள்ள பகுதியே கோவளம் எனப்படும்.
2. 'கலா' என்பது மரக்கலங்களுக்குறைவிடமாகிய 'கலபூமி' ஈறுகெட்டுக் குறில் நெடிலாகிக் 'கலா' என நின்றது. கலபூமி என்னும் பெயர் பிற்காலத்திற் களபூமி என்றாயிற்று. லகர ளகர பேதம். (இராசநாயகமுதலியார் யாழ்ப்பாணச் சரித்திரம் பக்கம் 44)
(களபூமி என்பது காரைநகரிலுள்ள ஒரு குறிச்சியின் பெயராகும்)
3. காரைநகரிலுள்ள ஒரு குறிச்சிக்கு வியாவில் என்றுபெயர்.

இடித்துக் கட்டப்பட்ட 1 "ஹம்மன் ஹீல்" என்னுங் கோட்டை இவ்வூரைக் காவல் செய்வதுபோல் அமைந்து விளங்குகின்றது.

இவ்வூரின் வடமேற்குக் கடற்கரையில் வானுற உயர்ந்து பேரொளியுடையதாய் "உயிர்களின் அறியாமையாகிய இருளை நீக்கிச் செல்கதி காட்டும் திருவருள்போல" ஆழ்கடலிற் செல்லும் மரக்கலங்களுக்கெல்லாம் அடையுந்துறைக்கு வழிகாட்டுவதாய் அமைந்திருக்கின்றது ஒரு கலங்கரை விளக்கம்.

ஊரின் மத்தியபகுதி நன்செய் நிலங்களாக, அதனைச் சூழ்ந்து நாற்புறமும் மக்கள் குடியிருப்பு நிறைந்ததாய் மருதமும், நெய்தலும் நெருங்கிப் பல வளங்கள் செறிந்து அரிதினமைந்த கவின்மிகு நகராய் விளங்குகின்றது.

வடபகுதியிற் கடற்கழிகளிற் காற்றினாலொதுக்கப்பட்ட வெண்மணற் குன்றுகளையும், தாழை, சவுக்கு முதலிய மரங்கள் செறிந்த சோலைகளையும் இச்சோலைகளில் உறைந்து மீனுணவு தேடும் நாரை, கோட்டான் முதலிய பறவையினங்களையும் எங்கும் காணலாம்.

புனல் விளையாட்டு, பொழில் விளையாட்டு என்பவற்றில் ஈடுபட்டவராய், யாழ்ப்பாணத்தின் பல பாகங்களிலிருந்தும் ஆடவரும் மகளிரும் ஆகிய பலஇன, பலமத மக்கள் காலத்துக்குக் காலம் வந்துபோதல் கண்ணுக்கின்பந்தரும் காட்சியாகும்.

1. போர்த்துக்கீசர் இராச்சியம்போய் உலாந்தா இராச்சியம் வந்தது. அவர்கள் கிறீஸ்து வருஷம் 1658ம் ஆண்டு (ஏவிளம்பி வருஷம் சித்திரை மாதம்) ஊர்காவற்றுறையைப் பிடித்தார்கள்: ஊர்காவற்றுறையைப் பிடித்த ஒரு மாதத்திற்குள் சைவசமயக் கோவில்களை இடித்தார்கள்.

அவர்கள் வியாவில் ஐயனார் கோவிலிற் பூசைசெய்து கொண்டிருந்த எங்களிடம் வந்து பூசைசெய்ய வேண்டாமென்று தடுத்தார்கள். நாங்கள் விக்கிரகங்கள் எல்லாவற்றையும் நில அறையில் வைத்து இரகசியமாகப் பூசைசெய்து வந்தோம். இதை அறிந்ததும் அவர்கள் கோயிலை இடித்துக் கடலுக்குள்ளே ஓர் கோட்டை கட்டினார்கள்; விக்கிரகங்களையும் பொருள்களையும் கிணற்றுக் குள்ளே போட்டார்கள்; தேரையும் வாகனங்களையும் கடலிலே விட்டுவிட்டார்கள்; சுவாமிகளின் ஆபரணங்களைக் கொண்டுபோய்விட்டார்கள்; (காரைநகர் சு. சரவணபவக் குருக்கள் வம்ச வரலாற்று ஏடு பக்.30)

இங்கு கல்வியிலும், செல்வத்திலும் சிறந்த பெரியோர் பலர் வாழ்ந்தனர். இவர்களுள் மு. கார்த்திகேயப் புலவர் (1819 - 1898), திரு. அல்லின் ஏபிரகாம் B.A., F.R.A.S. (1865 - 1922), திரு. ந. நடராசா K.C. (1897 - 1947) என்பவர்கள் பெரும்புகழ் பெற்றவராவர்.

இப்பொழுதும் கல்வி, செல்வம், அதிகாரம் முதலியவற்றிற் சிறந்துவிளங்கும் பலர் இருக்கின்றார்கள்.

இங்குவாழும்மக்கள் மிக்க பெருமுயற்சியுடையர். தாளாண்மைமிக்க வேளாண் தொழிலினரே பலராவர். இங்குள்ள மக்களிற் பலர் வெளிநாடுகளிற் சென்று உத்தியோகம் வகிக்கின்றனர்; வியாபாரம் முதலிய தொழில்களும் நடாத்துகின்றனர்.

இங்குள்ள பல சபைகளும், சங்கங்களும் சமயம், பாஷை முதலியவற்றின் அபிவிருத்திக்காகச் சிறந்த சேவைகள் செய்கின்றன. அவற்றுள் சைவமகாசபை, மணிவாசகசபை என்பன குறிப்பிடத்தக்கன.

இங்கு பல பாடசாலைகளும் ஆலயங்களும் சிறந்து விளங்குகின்றன. ஆலயங்களுள் வியாவில் ஐயனார் கோவில் பழைமை வாய்ந்தது. திண்ணபுரத்துச் சுந்தரேஸ்வரர் ஆலயம் பெருஞ்சிறப்பினையுடையது.

இத்தகைய பல சிறப்புக்களும் பொருந்திய காரைநகரின் வடகிழக்குப் பகுதி வலந்தலை எனப்படும். மா, இருப்பை, புளி, தென்னை முதலிய பயன்தரு மரங்கள் செறிந்து நீர்வளமுடையதாய் விளங்கியமையின் 'வளந்தலை' (தலைசிறந்த வளங்களையுடையது) என அழைக்கப்பட்டுத் தற்போது வலந்தலை என வழங்கப்படுகின்றது. இவ்வலந்தலைக் குறிச்சியின் வடபகுதியில் சிறந்து விளங்குவது திண்ணபுரம்.

## திண்ணபுரம்

இற்றைக்கு இருநூற்றைப்பது ஆண்டுகட்கு முன் இந்தியாவில், துளுவ நாட்டில் வசித்த "தினகரன்" என்னும் பெயருடைய ஆரியப்பிராமணர் ஒருவர் இலங்கையிலேயுள்ள பல தலங்களையுந் தரிசிக்க விரும்பி இலங்கையை அடைந்து முனீஸ்வரம், திருக்கேதீஸ்வரம், கோணேஸ்வரம், சிவனொளிபாதம், நகுலேஸ்வரம், கதிர்காமம் முதலிய க்ஷேத்திரங்களுக்குச் சென்று சென்று தரிசனஞ் செய்தார். பின்பு அவர் தூர்வாசமுனிவர் வாசஞ்செய்த தூர்வாகிரிக்குச் (தூம்பில்) சமீபமாக இருந்தபோது வீட்டுத் திண்ணைகளிற் போயிருந்து பிள்ளைகளுக்குக் கல்வி கற்பித்தார். அன்றியும் கவிபாடியும் வந்தார். அதனால் தினகரனென்னும் அப்பிராமணருக்குத் 'திண்ணைக்கவி' என்னும்பெயர் வழங்குவதாயிற்று. இப்பொழுதும் அவர் வசித்துவந்த இடத்துக்குத் 'தினகரன்பிட்டி', 'திண்ணைக்களி' (திண்ணைக்கவி என்பதன் மருஉ) என்னும் பெயர்கள் வழங்குகின்றன. இவ்விடத்தில் வைரவர் கோயிலும், ஒரு பழைய ஆலமரமும் இருக்கின்றன. இந்த ஆலமரம் தினகரன் என்னும் பிராமணரால் உண்டாக்கப்பெற்றதென்பது முதியோர் கூற்று.

## ஐயனார் கோவில்

இராமநாதபுரம் சேதுபதி மகாராசாவின் கட்டளைப்படி சேதுக்கரையைக்காவல் செய்தவர்களது வம்சத்திலே தோன்றியவராகிய [1] ஆண்டியென்றும் பெரியார் இலங்கைக்கு வந்து பல தலங்களையுந் தரிசனஞ்செய்தபின், வியாவில் ஐயனார் கோயிலையடுத்துள்ள தாமோதரஐயர் அக்கிரகாரத்திலே தங்கியிருந்தார். அப்போது ஐயனார் கோயில், முன்னிருந்த சிறப்புக்கள்

1. மணற்காட்டு மாரியம்மன் கோயிலைக் கட்டிய முத்துத்தாண்டவ முதலியாரின் புத்திரராகிய இராசரத்தின முதலியாரது மகனான வரசிங்க முதலியாரால் கோயிற் பூசையுரித்தும், மனேஜர் வேலையும் தாமோதர ஐயரவர்களுக்கு கி.பி. 1749இல் எழுதிக் கொடுக்கப்பட்டன. ஐயர் அவர்களும் பெரியார் ஆண்டியும் ஒரே காலத்தவர்கள். ஆகவே, பெரியார் ஆண்டி இற்றைக்கு ஏறக்குறைய 200 ம் ஆண்டுகளுக்கு முற்பட்டவர் ஆவார்.

யாவற்றையும் இழந்து அழிந்திருப்பதைப் பார்த்து மனவருத்தம் அடைந்தார்.

அவர் அன்பு, அருள் முதலிய நற்குணங்கள் வாய்க்கப் பெற்றுச் செம்மை நெறியிற் திகழ்பவர். 'செம்மலர் நோன்றாள்' சிரத்தினிற் கொண்ட செல்வர்; இப்பெரியாரது மனக்குறையை நீக்காமல் இருக்க இறைவரால் இயலவில்லை. உடனே இறைவர் கனவிற் தோன்றி, "நீயே நான்; நானே நீ. தூர்வாச கிரிக்குச் சமீபமாய் அரசமரத்தின்கீழ் இருக்கின்றேன்" என்று கூறி மறைந்த ருளினார். உடனே பெரியார் உணர்ந்து திருவருளை வியந்து, குறித்த இடத்தையடைந்து அந்த அரசமரத்தின் கீழே, தாம் கொணர்ந்த சூலத்தை வைத்துத் தம் ஆத்மார்த்த பூசைசெய்து, திருவருளில் திளைத்து அவ்விடத்திலேயே வாழ்ந்து வந்தார்.

ஆண்டி என்னும் பெரியார் அவ்விடத்தில் வாழ்ந்து வருவதை அறிந்த ஊரவர்கள் பலரும் அப்பெரியாரை அண்டி வழிபட்டு நல்லறிவுபெற்று வந்தனர். இதனால் அப்பெரியார், மக்கள் வழிபடுவதற்கு அவ்விடத்திலே ஒரு ஆலயம் எடுக்கவிரும்பி அரச மரத்தின் கீழ்ச் சூலத்தை வைத்துச் சிறு ஆலயம் அமைத்துப் பரார்த்தபூசை முதலியவற்றைத் தாமே செய்துவந்தார். சிலகாலம் சென்ற பின் அரசமரத்திற்குத் தென்கிழக்குத் திசையிலே ஓர் ஒளி உண்டாயிற்று. அதனைக்கண்டு மிகவும் அதிசயமுற்று அந்த இடத்தைத் தோண்டினார். அப்போது ஒரு ஐயனார் திருவுருவம் வெளிப்படக்கண்டு அளவில்லாத ஆனந்தம் அடைந்து திருவருளை வாழ்த்தி, அத்திருவுருவத்தைச் சூலத்துடன் வைத்துப் பூசை வழிபாடுகளை தவறாது செய்து வந்தார். ஆண்டியால் தோண்டப்பட்ட கேணி 'ஆண்டிகேணி' என்றும் ஐயனார் 'ஆண்டிகேணி ஐயனார்' என்றும் பிற்காலத்தவர்களால் வழங்கப்படுவனவாயின.

---

1. இந்தியாவிலே ஒரு பௌத்த பிக்கு மன அமைதியில்லாமல் பலதலங்களையுந் தரிசித்துக் கொண்டு திரிந்தபின், வடஇந்தியாவிலே உள்ள ஒரு ஸ்தலத்தில் இருக்கும்போது, "ஈழத்தின் வடபகுதியில் காரைதீவின் வடதிசையில் உள்ள ஓர் அரசமரத்தின் கீழே ஒரு சூலமிருக்கிறது அங்கே சென்றால் உனக்கு மன அமைதி ஏற்படும்" என்று ஓர் அசரீதி வாக்குக் கேட்டதாகவும் அதன்படி பிக்கு இங்கு வந்து வழிபட்டு மன அமைதி பெற்றதாகவும் ஒரு கதை வளங்கி வருகின்றது.

இந்த ஐயனார் திருவுருவம் பறங்கியர் சைவாலயங்களை இடித்து அழித்த காலத்தில் யாரோ ஒரு சைவ அபிமானியால் சேமமாகப் பூமியிற் புதைத்துவைத்ததாய் இருக்கலாம் என்று தோன்றுகின்றது. அந்த அரசமரம் இன்றும் சிவன்கோயிலின் தெற்குவீதியில் பெரிய கிளைகளோடு பரந்து விளங்குதலைக் காணலாம்.

இதன்கீழ் உள்ள வைரவர்கோயில் பிற்காலத்தில் திருத்தி யமைக்கப்பட்டது. 'ஆண்டிகேணி', அரசுக்குத் தென்புறத்தில் பள்ளமாய் இருந்து தூர்ந்துவிட்டது.

## அம்பலவி முருகர்

களபூமியைச் சேர்ந்த மரபால் உயர்ந்த மானாமுதலி வம்சத்தில் அவதரித்த 1 'அம்பலவி முருகர்' என்னும் பெரியார் அக்காலத்தில் வாழ்ந்துவந்தார். அவர் கடவுள் பக்தி, அடியார் பக்திகளிற் சிறந்தவர்; அருள், அடக்கம், பொறை, சத்தியம் முதலிய நற்குணங்கள் யாவும் நிரம்பப் பெற்றவர்; தாம் தொடங்கிய கருமத்தைக் கைவிடாது நிறைவேற்றுவதில் ஈடுஇணையில் லாதவர்; "மயிர் நீப்பின் வாழாக்" கவரிமான் போன்ற மானம் உடையவர். அவர், ஆண்டியென்னும் பெரியாரின் விசேஷங்களைக் கேட்டறிந்தும், அவருடன் பழகி நேரில் அறிந்தும், அவரோடு நட்புப் பூண்டும், பல ஆண்டுகள் உடனுறைந்தும் இறைவன் திருவடி மறவாப் பேரின்பத்தில் திளைத்தனர்.

அவ்வாறு இரு பெரியவர்களும் வழிபட்டுவருங் காலத்தில் ஐயனாருக்குத் தனி ஆலயம் அமைக்கவேண்டுமென்னும் எண்ணம் அம்பலவி முருகருடைய மனத்தில் உதிக்கலாயிற்று. அவ்வெண் ணம் நாள்தோறும் பெருகத் தொடங்கியது. அவர் தம்கருத்தை அவ்விடம் வந்துபோகும் அடியார்களுக்கும், பிறருக்கும் எடுத்துக் கூறி வந்தார். அதனை எல்லோரும் ஏற்று ஆதரவளித்தார்கள்.

---

1. அம்பலவி முருகர் இளம் பராயத்தில் வாழ்ந்து வந்த இடம் 'அம்பலவி முருகன் தோப்பு' என்று இன்றும் வழங்கி வருகிறது. இது, களபூமியைச் சேர்ந்த விளானை என்ற இடத்தில் இருக்கிறது.

அவர் ஆலயம் அமைத்தற்கு வேண்டியன யாவும் செய்யத் தொடங்கி, அந்த அரசமரத்துக்கு வடபாலுள்ள தமது நிலத்தில், தமது சொந்த முயற்சியாலும், பிறர் உதவியாலும் திருவருள் கைகூட்ட ஒரு நல்ல முகூர்த்தத்தில் ஓர் ஆலயம் எடுக்க ஆரம்பித்தார். மெய்யன்பர் தொடங்கிய திருப்பணி எவ்வித முட்டுமின்றிச் செவ்வனே நடைபெறலாயிற்று. அன்பராயினார் எல்லோரும் தாமே தேடிச் சென்று வேண்டிய பொருளெலாம் கொடுத்துதவினர். இது நிகழ்ந்தது ஏறக்குறைய நூற்றிஐம்பது வருடங்களின் முன் என்பது முதியவர்கள் கூற்று.

அப்பெரியார் மேற்படி கோயிற் கும்பாபிஷேகத்தைமாரீசன் கூடலிலிருந்த (மாரியங்கூடல்) பொன்னுச்சாமிப்பட்டர், சுப்பிர மணியப் பட்டர் (பட்டர் = குருக்கள்) என்னும் அந்தணக் குருக்கள் மாரைக்கொண்டு முறைப்படி சிறப்பாகச் செய்வித்தார். நாராயண பட்டர் அர்ச்சகராக நியமிக்கப்பட்டு நித்தியபூசை முதலிய வற்றைச் செய்து வந்தார்.

சில ஆண்டுகளின் பின்பு ஐயனார் உற்சவ மூர்த்தியைப் பிரதிஷ்டை செய்ய விரும்பிச் சிற்பாசாரி ஒருவரிடம் பெரியாரால் திரவியம் கொடுக்கப்பட்டது. அந்தச் சிற்பாசாரியும் ஐயனார் திருவுருவை வார்த்து இப்பேரன்பரிடம் காட்டியபோது, திருவுரு வைப் பார்த்து ஆச்சரியமடைந்த அவர், அதில் ஈடுபட்டு உடனே தரும்படி வேண்டினார் என்றும், சிற்பாசாரி செப்பஞ்செய்ய வேண்டும் எனக் கூறிச் செப்பஞ் செய்யத் தொடங்கத் திருவுருவினின்றும் உதிரம் வெளிப்பட்டது என்றும், அதனைக் கண்ட சிற்பாசாரி ஆச்சரியமும், பயமும் எய்திப் பெரியவரை வணங்கித் திருவுருவைப் (செப்பஞ் செய்யாமலே) பெரியவரிடம் கொடுத்தார் என்றும் முதியோர் கூறுவர்.

ஐயனார் திருவுரு செப்பஞ் செய்யப்படாமலேயே கும்பாபிஷேகம் செய்யப்பெற்றுப் பூசிக்கப்பட்டு வருகின்றது. இதனை இன்று காணலாம்.

அக்காலத்தில் ஐயனாரின் அற்புதச் செயல்கள் பற்பல நிகழ்ந்தனவாகக் கூறுவர். ஐயனாருக்கு பூசை செய்து வந்த

அந்தணரொருவர் ஆசாரமின்றிக் கோயிலுட் புக வந்தபோது அங்கே வசித்து வந்த நாகமொன்று திருவாயிலருகில் நின்று தடுத்ததாகவும், அவர் அதனைப் பொருட்படுத்தாது உள்ளே புகக் கதவைத் திறந்த போது யாரோ ஒருவர் பிடரியில் அடிப்பதை உணர்ந்து திரும்பிப் பார்க்கவே அவரது கழுத்து ஒருபக்கம் திரும்பி விட்டது என்றும், அதனால் அவர் "கழுத்துத்திருப்பி" ஐயர்" என அழைக்கப்பட்டார் எனவும் கூறுவர்.

அம்பலவி முருகர் கோயிற் பூசையைக் குறைவறச் செய்வித்து வந்தார். அதனால் அவர் ஊரவர்களிடம் நெல் முதலிய பொருட்களைத் தருமமாகப் பெற்று வந்தார். ஒரு நாள் வழமை போல ஒரு வீட்டில் பூசைத்தருமம் பெறச் சென்றபோது அவ் வீட்டுக்காரர், "அம்பலவி முருகனும் வயிறுவளர்க்க வந்து விட்டான்" என்று முணுமுணுத்துக் கூறினாராம். வீட்டுக்காரர் கூறிய வார்த்தைகள் அவரது செவியில் நாராசம் போல் விழுந்தன. உண்மையை உணராது அவன் கூறிய வார்த்தைகள் அவர் மனத்தைப் பெரிதும் புண்படுத்தின. அதனால் அப்பெரியவர் அன்று தொடக்கம் அரிசிச்சாதம் உண்பதில்லை என்று சபதம் செய்து, இலை, கிழங்கு, காய்வகைகளையே உப்பின்றிப் பாகம்பண்ணித் தமது ஆயுள் உள்ளவரை உண்டு வந்தார் என்ப. அதனால் அன்று தொட்டு கோயிலில் உப்புச் சேர்க்காமல் நிவேதனங்கள் செய்ய வேண்டும் என்ற நிபந்தனையையும் ஏற்படுத்தி விட்டார். இன்றும் அவ்வாறே நடந்து வருவது கண்கூடு.

மார்கழித் திருவெம்பாவை காலத்தில் ஐயனாருக்கு வீஷேட அபிஷேகம், பூசை முதலிய நடைபெறச் செய்து, திருவெம்பாவைத் திருவிழாவை ஒழுங்காக நடாத்தி வந்தார். திருவாதிரையிலன்று திருவாசகம் முழுவதையும் ஓதுவித்தும் வந்தார். ஆனி உத்தரத்தைத் தீர்த்தத் தினமாகக் கொண்டும் திருவிழா நடைபெறச் செய்தார். ஆகவே வருடத்தில் மார்கழி, ஆனி ஆகிய இரு மாதங்களிலும் திருவாதிரை, உத்தரம் என்னும் நட்சத்திரங்களை முக்கியமாகக் கொண்டு சிதம்பரத்தைப் போன்று திருவிழா நடைபெற்று வந்தது. இச்செயல் ஆண்டி என்னும் மெய் அடியாரின் பேரன்பிற் கலந்த அம்பலவி முருகரின் திருவுள்த்திற் கிளர்ந்த திருவருட் செயலேயாம் என்றே நாம் கூறக்கிடக்கின்றது.

அப்பெரியவர் அந்நாளில் எழுதி உபயோகித்த திருவாசக ஏடு இன்றும் போற்றிப்பாதுகாக்கப்பட்டுத் திருவெம்பாவைக் காலத்தில் உபயோகிக்கப்படுகின்றது. இத்திருவேட்டில், எகர ஏகாரம், ஒகர ஓகாரம் என்பன மேலிடும் குற்றினால் வேறுபாடுறும் பழைய முறையைக் காணக் கூடியதாக இருக்கின்றது. ஆனி உத்தரத் திருவிழா சில காரணங்களினால் பங்குனி உத்தரமாக மாற்றப்பட்டது.

## சிவாலயம்

பேரன்பினராய்த் திருவருள் வழிவந்த பெரியவராகிய அம்பலவி முருகர், ஐயனார் திருவுருவினை வைத்து வழிபாடுகள் செய்து வந்தவராயினும் அவரது நடைமுறைகளைக் கூர்ந்து கவனிக்கும் போது, அவர் நடத்தி வந்த மார்கழித்திருவாதிரை, ஆனி உத்தரத் திருவிழாக்கள் ஆதியன அத்திருவுருவிற் சிவபரம் பொருளைக் கண்டு அதனால் சிவபரம் பொருளின் திருவுருவைத் தனியே காணப்பெரிதும் விழைந்தனர் என்பதை நன்கு அறிவுறுத்துகின்றன. அவர் தமது உள்ளத்தே கண்ட சிவாலய வழிபாட்டை வெளியிற்காண மிகவும் ஆசைப்பட்டார். இந்த ஆசையைத் தமது மனதுக்குகந்த பிறர்க்கு எடுத்துக்கூறி மேன்மேலும் வளர்த்தார். திருவருள் கைகூடவே குறித்த ஒரு நல்ல நாளில் ஐயனார் கோயிலின் வடபுறத்திலே சிவாலயத் திருப்பணியைத் தொடங்கினார். தம்மிடம் இருந்த பொருளைக் கொண்டு சிவாலயத் திருப்பணியை நடாத்துவித்தார். தாம் செய்யக்கூடிய பணிகளையெல்லாம் தவறாமற் தாமே செய்து வந்தார்.

அப்பெரியவர் இரண்டு எருதுகளை அன்போடு வளர்த்தார். அவற்றிற்கு 'கந்தன்' என்றும், 'சங்கரன்' என்றும் பெயர். அவர் பெயர் சொல்லிக் கூப்பிட்டால் செய்ய வேண்டியதென்ன என்று கேட்பன போல் அவ்விரு எருதுகளும் அவர் முன் ஓடி வந்து நிற்கும். அவை இச் சிவாலயத் திருப்பணியில் பெரிதும் உதவியாயிருந்து வந்தன: எவ்வளவு பெரும் பாரத்தையும் தம் களைப்பைப் பொருட்படுத்தாது இழுத்துக் குறித்த இடத்திற் சேர்த்துவிடும் தன்மையன.

அக்காலத்தில் அவ்வாலயத்தில் இரண்டு நாகங்களும் வாழ்ந்து வந்தன. இப் பெரியார் அவற்றிற்குக் 'கூழையன்' 'வாலன்' என்று பெயரிட்டு அழைத்து வந்தார். அவை கோயிலில் சர்வசாதாரணமாய் உலாவி வந்தன. பிறருக்கு எவ்வித இடையூறும் விளயாமல், களவு முதலியன நடைபெறாமல் அவை பாதுகாத்து வந்தன இவையெல்லாம் பெரியவரிடத்தில் விளங்கிய திருவருளின் சாயலாக மக்கள் கருதி வந்தார்கள்.

அம்பலவி முருகராம் பெரியார், இறைவர் கோயிற் திருப்பணியைத் தளரா ஊக்கத்துடன் சலிப்பின்றிச் செய்து வந்தார். திருப்பணியை முற்றுவிக்கப் பெரும் பொருள் வேண்டியிருந்ததெனினும். திருவருள் முன்னின்று கூட்டத் தொடங்கிய திருப்பணியாதலின் பெரியவர் பொருள் கிடைக்காமல் திருப்பணி முட்டுறுமோ என்று ஒருபோதும் அடைந்திலர். திருவருள் செய்கின்றது, அதற்குத் தாம் கருவியாக இருப்பதைத் திருவருள் காட்டக் கண்டு கொண்டிருந்தாராதலின், திருத்தொண்டின் பெருமையினையும், பெரியாரது பக்தி வைராக்கியத்தையும் கண்டறிந்த ஊரவர்கள் பலரும் திருப்பணித் தேவைகள் எல்லாவற்றையும் தத்தம் ஆற்றலுக்கு இயைந்தவாறு கொடுத்துதவினர். பெரியவர் போல் திருப்பணி வளர்ந்து செவ்வனே நிறைவெய்தியது. சிவாலயத் திருப்பணி நடைபெறும் போதும் பெரியவர் அக் கோயிலிற் தாபித்தற்கு வேண்டிய சிவலிங்கம் பற்றி அடிக்கடி சிந்தித்துக் கொண்டே வந்தார். கோயிற் திருப்பணியோ நிறைவெய்தி விட்டது ஆகவே, மேல் நடைபெற வேண்டிய கருமம் சிவலிங்கத் தாபனமொன்றேயாதலால் பெரியவர், அடிக்கடி திருவருளை வேண்டி அந்த விஷயத்தைச் சிந்திப்பார். அப்போது எவ்வித போக்குவரத்து வசதியும் இல்லாத காலம். எவ்விடத்திற்கும் நடந்தே செல்ல வேண்டும். போக்குவரத்துக்குரிய பாதைகளும் செப்பமில்லாத காலம். சிவலிங்கம் இலங்கையிற் கிடைக்காது. செய்யக் கூடிய சிற்பாச்சாரிமாரும் இங்கு இருக்கவில்லை. ஆகவே சிவலிங்கம் பெறுதல் மிகவும் கஷ்டமான விஷயமாய் இருந்தது. இவற்றையெல்லாம் எண்ணி வருந்தினரேனும் திருவருள் கைகூடச் செய்யும் என்ற உறைப்பில் அவர் சிறிதும் தளர்ச்சி பெற்றிலார். ஒரு நாள் இறைவர் கனவில் தோன்றிச் சிதம்பரத்தில் உள்ள ஓர் ஆசாரியரிடம் பதினாறு இலிங்கங்கள் இருக்கின்றனவென்றும்,

அவற்றுள் தம்மால் அடையாளம் காண்பிக்கப்படும் இலிங்கத்தை வாங்கி வரும்படியும் உணர்த்தியருளினார். பெரியவர் துயிலுண ர்ந்து இறைவன் தமக்கருள் செய்தபடியை நினைத்து ஆனந்தக் கண்ணீர் சொரியத் திருவருளை வாழ்த்தி வணங்கிப் பின் நித்திரை கொள்ளாமலே எஞ்சிய இரவைச் சிவ வழிபாட்டில் கழித்து விடிந்ததும் தம் கனவை மற்றவர்களுக்கும் கூறி, சிதம்பரம் செல்வதற்கு வேண்டிய ஆயத்தங்களைச் செய்து, ஒரு நல்ல நாளில் புறப்பட்டு ஊர்காவற்றுறையிற் பாய்க்கப்பலேறிச் சென்று கோடிக்கரையிலிறங்கிக் கோடிக்குழகரை வழிபட்டு வழிக் கொண்டு இடையில் பல தலங்களையும் வணங்கிச் சிதம்பரத்தை யடைந்தார். அங்கு சிதம்பர சபாநாயகரையும், சிவகாமியம் மையாரையும் வணங்கி, தமக்குத் திருவருள் செய்த செயலை நினைத்து, புளகாங்கிதராய், இம்மையிலே பேரின்பம் பெற்றவராய், மெய்மறந்து சிவானுபூதியிற் திளைத்து, மன்றுளே திருக்கூத்தாடி அடியவர் மனைகள் தோறும் சென்றருள் புரியும் நாதன் எடுத்த சேவடிக்கீழ் அழுந்தி, அருள் பெற்று ஒருவாறு சந்நிதானத்தை விட்டு வலம்வந்து ஆரா அன்பினில் தாழ்ந்தெழுந்து பல முறை வணங்கி, திருவருள் விடைபெற்றுச்சென்று தாம்வந்த கருமத்தைக் கவனிக்கத் தொடங்கினார்.

அவர் அங்குள்ளார் பலரையும் விசாரித்துத் திருவருள் கைகூட்ட ஒரு ஆசாரியையடைந்து தமது கருத்தை தெரிவிக்க, அவ்வாசாரியர் தம்மிடமிருந்த பதினாறு இலிங்கங்களையும் காட்டியபோது பெரியவருக்குத் தாம்கண்ட சொப்பனம் நினைவில் வந்தது. அதன்படி ஏழாவது இலிங்கத்திலிருந்து மெல்லெனக் காற்றெழுவதைக்கண்டு, அதுவே இறைவர் திருக்குறிப்பு என மனதுட்கொண்டு திருவருட்செயலை வியந்து அதனையே வாங்கு வதற்கு நிச்சயித்தார். அந்த இலிங்கத்தின் விலையை ஆசாரியாரிடம் கேட்ட போது அவர் கேட்டளவு தொகை கொடுக்கத் தம்மிடம் போதியளவு பொருள் இல்லாமையால் பெரிதும் மனம் வருந்தினார். அன்று இரவு இலிங்கம் வைத்திருந்தவருக்குச் சுவாமி சொப்பனத்திற் தோன்றி அவர், முன் தருவதாகக் கூறிய பத்து வராகனையும் பெற்றுக்கொண்டு இலிங்கத்தை அந்த அயலவரிடம் கொடுக்குமாறு சொல்லி மறைந்தார். அவ்வாறே அடுத்த நாள் இலிங்கம் அடியவரிடம் கொடுக்கப் பெற்றது.

சிவலிங்கம் கிடைக்கப்பெற்ற பெரியவர், கன்றை யணைந்த புனிற்றாப்போலப் பேரானந்தம் அடைந்து, இறைவன் திருவருளை வியந்து சில காலம் சிதம்பரத்திற்றானே தங்கியிருந்து அம்பிகை, விநாயகர், சுப்பிரமணியர், சண்டேசுவரர், நந்தி, பலிபீடம் முதலான திருவுருவங்களையும் செய்வித்துக் கொண்டு பெரும்பேறு பெற்றவராய் இங்கு வந்து சேர்ந்தார்.

சிவானுபூதிச் செல்வராகிய அம்பலவி முருகர், தாம் கட்டுவித்த சிவாலயத்தில் நல்ல முகூர்த்தத்தில் கும்பாபிஷேகம் செய்ய நிச்சயித்துச் சாவகச்சேரியைச் சேர்ந்த விளைவேலி என்னுமிடத்தில், அக்காலத்தில் பேர்பெற்று விளங்கிய பிரம்மஸ்ரீ வேதக்குட்டிக் குருக்கள், அவரது மருமகன் அப்பாசாமிக் குருக்கள், சுப்பிரமணியக் குருக்கள், பஞ்சநதேசுவரக் குருக்கள் என்னும் நான்கு சிவாச்சரியர்களைக் கொண்டும் பிரதிஷ்டா கும்பாபிஷேகத்தை ஆகமநெறி தவறாது சிறப்புற நடாத்தி வைத்தார். அப்போது பரிவார மூர்த்திகளுக்குத் தனித்தனி கோயில்கள் கட்டப்பட்டமையால் சிவாலயத்தில் மகாமண்டபத் திலேயே விநாயகர் சுப்பிரமணியர் முதலான மூர்த்திகளை வைத்து வழிபட்டு வந்தனர்.

சிவலிங்கப் பெருமானதும், அம்பிகையினதும் அழகைக் கண்ட சிவாச்சாரியர்களும், அன்பர்களும், பெரியாரும் சிவலிங்க த்திற்குச் சுந்தரேசுவரர் என்றும், அம்பிகைக்குச் சௌந்தராம்பிகை என்றும் திருநாமமிட்டு, அந்நாமம் என்றென்றும் வழங்குவதாக என வாழ்த்தி வணங்கினர். அக்காலத்திலே நித்திய பூசகராக நியமிக்கப்பட்டவர் மு. இராமசுவாமி ஐயர் என்பவர் ஆவார். இவர் குளக்கோட்டு மகாராஜாவினால், வியாவில் என்னும் பதியில் கட்டுவிக்கப்பட்ட ஐயனார் கோயிலுக்கு முத்து மாணிக்கம் செட்டியாரால் திருவுத்தரகோசமங்கையிலிருந்து கொணர்ந்து பூசை செய்யும்படி நியமிக்கப்பட்ட மங்களேஸ்வரக்குருக்களின் வழித் தோன்றல் ஆவர். இவர்களின் வழித்தோன்றலே இப்போது அர்ச்சகராக இருக்கும் பிரம்மஸ்ரீ க. மங்களேசுவரக்குருக்கள் அவர்கள்.

## சோமஸ்கந்தமூர்த்தி

அரனடியன்றி அயலறியா நெறிவாழ்ந்த பெரியாராகிய அம்பலவி முருகர், சிவகாலஞ் செல்வச்சச்சிதானந்தத் திருவுருவமாகிய சோமஸ்கந்தமூர்த்தியைத் தாபிக்கவேண்டு மென்று விரும்பினார். அதற்கு வேண்டியவற்றைத் தேடி ஆயத்தங்கள் செய்து தமது மகன் சண்முகத்தாருடன் இங்கிருந்து புறப்பட்டுச் சிதம்பரத்தையடைந்தார். அங்கு சிதம்பரசபாநா யகரையும், சிவகாமி அம்மையாரையும் வழிபட்டு, திருவருளிற் திளைத்து மூழ்கி அருள்பெற்று அவ்விடத்திற் தங்கியிருந்தார். அவ்விடத்திலுள்ள சிற்பாச்சாரிகளைக் கண்டு தமது நோக்கத்தை தெரிவித்தார். ஆசாரியார் வேண்டிய ஒழுங்குகளைச் செய்து கொண்டு வேலையைத் தொடங்கி வார்த்த போது, இரு முறையாகக் கருச் செவ்வனே பாய்ந்தும் சிதைவுற்றதனைக்கண்டு, பெரியவர் பெரிதும் மனம் வருந்தி திருவருளை வேண்டித் தியானித்து வேண்டிய போது, மனதில் எழுந்த தூண்டுதலினால் தாம் காதில் அணிந்திருந்த பொற் கடுக்கன்களைக் கழற்றி, அவற்றை முன்னரே கொடுத்து விடாது, தமக்காக வைத்திருந்த செயலை நினைந்து, 'இவற்றின் பொருட்டோ இவ்வாறாயிற்று ! யாவுந் தந்து விட்டேன் 'என்று மெய்மயிர் பொடிப்ப ஆனந்தக் கண்ணீர் சொரியக் குகையில் இட்டு மறுபடியும் வார்க்கும்படி கூறினார். ஆசாரியும் அவ்வாறே செய்தார். அப்போது சோமஸ்கந்தமூர்த்தியின் திருவுரு செவ்விதாக அமைந்தமையை ஆசாரிமூலம் அறிந்த பெரியவருடைய ஆன்மா அத்திருவுருவில் கலந்தது போல் உடனே மறைந்தது. அங்குநின்றவர்களும், ஆசாரிமாரும் நிகழ்ந்ததைக் கண்டு ஆச்சரியமடைந்து திருவருளை வியந்தனர். தமது இறுதியை ஒருவாறு உணர்ந்தே அம்பலவி முருகர் தமது மகன் சண்முகத்தாரை உடன் அழைத்துக் கொண்டு போனார் போலும்.

அங்கு நடந்த செயலால் ஆச்சரியமடைந்தாரேனும், தம் தந்தையின் பிரிவால் பெரிதும் வருந்தினார். தந்தையாரின் அந்தியக் கருமங்களை விதிப்படி செய்தார். அன்று அரசினர் கொண்டாட்ட நாளாதலின் சிதம்பர நகர் வீதிகள் நன்றாக அலங்கரிக்கப்பட்டிருந்தன. அலங்கரிக்கப்பட்ட வீதி வழியே பெரியவரின் சடலம் மயானத்தையடைந்து. ஆங்குச் செய்யவேண்டிய ஈமக்கடன்களைச் சண்முகத்தார் செய்து முடித்தார்.

நாட்கள் சில சென்றதன் மேல் சண்முகத்தார் பொறுப்பினை எண்ணிக் கருமஞ் செய்பவராய்ச் சோமஸ்கந்த மூர்த்தியைக் கொண்டு இங்குவரப் பறப்படலாயினர். ஆனால், எண்ணியபடி குறித்த நாளிலே புறப்பட இயன்றவரை முயன்றும் முடியாமற் போகவே, பறங்கிப்பேட்டைத் துறை முகத்திலே சோமஸ்கந்தமூர்த்தியைக் கொண்டு போய் ஒரு தோணியில் ஏற்றி அனுப்பி வைத்தார். தாமும் மற்றொருவருமாக வேறொரு தோணியில் ஏறிவரும் போது. தோணி புயற்காற்றில் அகப்பட்டு பாயமரம் முதலியன சேதமடைந்து கடலில் அமிழ்ந்தியது. சண்முகத்தாரும் அவருடன் கூடவந்தவரும் கடலில் ஒரு பற்றுக்கோடும் இன்றித் தத்தளித்த போது தெய்வீகமாகக் கையில் அகப்பட்ட மரக்குற்றியொன்றினை இறுகப்பற்றிக் கொண்டனர். அவ்விதம் இரண்டு நாள் கடலில் அலைக்கப்பட்டு மிகவும் வருத்தமுற்று, மூன்றாம் நாள் அதிராம்பட்டினக் கடற்கரையை நல்லூழினால் அடைந்தனர். அப்போது அறிவு மயங்கிய நிலையில் கிடந்த அவர்களை அங்குள்ளவர்கள் கண்டு, வேண்டிய சிகிச்சைகள் செய்து உணவு முதலியன கொடுத்து தேறுதல் கூறி அவர்கள் வரலாற்றை அறிந்து, வேண்டும் உதவிகள் செய்து சில நாள் தங்க வைத்தனர். பின்பு அவ்வூரவர்கள் ஒரு தோணியல் ஏற்றி இங்கு அனுப்பி வைத்தார்கள். அவர்கள் இங்கு வந்து சேர்ந்ததும், சண்முகத்தார் தம்மால் முன்பு அனுப்பி வைக்கப்பட்ட சோமஸ்கந்தமூர்த்தித் திருவுருவம் எவ்வித இடையூறுமின்றி இங்கு வந்து சேர்ந்ததை அறிந்து மனமகிழ்ந்தார். அன்றியும் தம்முடன் கொண்டு வராமல் மூர்த்தியை முன் அனுப்பத் தூண்டிய திருவருட் செயலை எண்ணியெண்ணி, மற்றவர்களுக்கும் கூறி பெரிதும் வியப்படைந்தார். சில காலங்களின் பின்னர் ஒரு நல்ல முகூர்த்தத்தில் சோமஸ்கந்தமூர்த்திப் பிரதிட்டை செவ்வனே நடைபெற்றது. இதன் பின்னர் மார்கழித் திருவெம்பாவை உற்சவத்தில் சோமஸ்கந்தமூர்த்தம் பிரதானமாகக் கொள்ளப் பட்டு இரதோற்சவத்திற்கு எழுந்தருளுவதாயிற்று. அவ்வாறே

பங்குனி உத்தர உற்சவத்திலும் கொள்ளப்படலாயிற்று. இவ்வாறு நடைபெறத் தொடங்கி நூறு வருடங்கள் ஆகின்றன.


சோமாஸ்கந்தமூர்த்தி :-- ச + உமா + ஸ்கந்த என்ற பதங்கள் சோமாஸ்கந்த என்று புணரும். உமாதேவியாரோடும் ஸ்கந்த (சுப்பிரமணியர்) ரோடும் கூடிய இறைவர் என்பது இச் சொல்லின் கருத்தாகும். சிவன், சக்தி ஆகிய இருவரிடத்தும், தேவர்களது இடுக்கண் தீர்க்க கருணையினால் உதித்த அருள் வெளிப்பாடே ஸ்கந்தர் ஆவர். ஆதலினால் இம்மூவுருவையுங் கொண்டதென்பது பெரியோர்களது கருத்து.

பரஞ்சோதியர் என்கின்ற சிறுத்தொண்டநாயனாருக்கு அருள் செய்ய இறைவன் சோமாஸ்கந்தமூர்த்தம் கொண்டாரென்று [1] பெரியபுராணம் கூறுகின்றது. உலகில் எவராலும் நினைக்க முடியாத பெரும் தொண்டைச் செய்தவர் சிறுத்தொண்டர். அத்தகைய பெரியவரை ஆட்கொள்ள இறைவர் கொண்ட திருக்கோலமெனில் அதுபற்றி யாம் யாது கூறவல்லோம். இத்தகைய அருள் மூர்த்தத்தில் அம்பலவி முருகருக்கிருந்த ஈடுபாடும் அதனால் அவர் அடைந்த நற்கதியும் என்றென்றும் அம்பலவி முருகரை எமக்கு அறிவுறுத்துவனவாகும். அவர் பெயரென்றும் நின்று நிலவுவதாக.

பரிவார மூர்த்திகளாகிய விநாயகர், சுப்பிரமணியர் ஆலயங்கள் சண்முகத்தார் காலத்தில் கட்டப்பட்டன. அம்பாள் கோயிலும் இக்காலத்திலேயே கட்டப்பட்டது நடேசர் கோயிலும் இவர்காலத்திலேயே கட்டப்பட்டதாகும். சண்முகத்தார் மகன் சின்னத்தம்பியார் காலத்தில் விநாயகர் பிரதிஷ்டை நடைபெற்றது. மாசிலாமணியும் துரையப்பாவும், சுப்பிரமணியர் பிரதிஷ்டையும், நடராஜர் பிரதிஷ்டையும், சந்திரசேகரர் பிரதிஷ்டையும், சமய குரவர் பிரதிஷ்டையும் செய்வித்தனர். இச் செயல்களுக்கு சைவாபிமானிகளாகிய ஊரவர்கள் பலரும் பெரிதும் உதவி புரிந்தனர். பேரழகுடன் விளங்கும் நடராஜ மூர்த்தியின் திருவுருவம் சிவன் கோயிலிலேயே வார்க்கப்பட்டது. அதனைச் செய்தவர் சோழபுரத்துக்குக் குரசாமி ஆசாரி என்பவராவர்.

---

1, 'செய்யமேனிக் கருங்குஞ்சிச் செழுங்கஞ்சுகத்துப் பயிரவர் யாம்
உய்ய அமுது செய்யாதே ஒளித்ததெங்கே'? எனத்தேடி
மையல் கொண்டு புறத்தணைய மறைந்த அவர் தாம் மலைபயந்த
தையலோலோடுஞ் சரவணத்துச் தனைய ரோடுந் தாமணைவார்



சிவஸ்ரீ க. மங்களேஸ்வரக்குருக்கள்

# நடராஜர் திருவுருவம்

இங்குள்ள நடராஜ மூர்த்தியின் திருவுருவம் பதஞ்சலி வியாக்கிரபாதர் என்னும் முனிவர்களுடன் கூடியது. இவ்விதமாக முனிவர்களுடன் கூடிய நடேசர், அம்பிகா சமேதராக அமைந்திருக்கும் பாவனையில் உள்ள திருவுருவம் இந்தியாவிற்றானும் இரண்டொரு தவத்தில் மாத்திரமே உண்டென கோயில் வரலாற்றிலும் மூர்த்தி அமைப்பு முறைகளிலும் நிரம்பிய அறிவுள்ள திரு.தொ.மு. பாஸ்கரத் தொண்டைமான் அவர்கள் கூறுகின்றார்கள்.

இத்தலத்திலுள்ள நடேசர்விக்கிரகம் மிக அற்புதமானது.

வியாக்கிரபாத முனிவரும் பதஞ்சலி முனிவரும் திருவடியின் இருமருங்கிலும் தொழுதேத்த, முயலகன்மேல் ஊன்றிய வலத்திருப்பாதமும் தூக்கிவளைத்த இடத்திருப்பாதமும், புலித்தோலை ஆடையாக்கிக்கொண்டு கச்சையுடைத்தாய் நெறிப்புப்பொருந்தி விளக்குந் திருவரையும், டமருகம் பொருந்திய திருக்கரம் அபயகரம் என்னும் வலத்திருக்கரம் இரண்டும், அக்கினியகல் பொருந்திய திருக்கரம் டோளகரம் என்னும் இடத்திருக்கரம் இரண்டும், திருநீலகண்டமும், சங்கக் குண்டலம் பொருந்திய வலத்திருச்செவியும், திருத்தோடு பொருந்திய இடத்திருச்செவியும், கங்கையையும் பிறையையும் கொன்றை மாலையையுந் தாங்கிப் பின்றூங்காநின்ற திருச்சடையும், மூன்று திருக்கண்ணும் திருப்புன் முறுவலையுடைய ஒரு திருமுகமும், கோடி சூரியருடைய ஒளிபோலும் ஒளியும் உடைய சபாநாயகர், பச்சைநிறத் திருமேனியும், திருக்கழுத்திலே பொருந்திய திருமங்கல சூத்திரமும், செங்கழுநீர் மலர்பிடித்த வலத்திருக்கையும், கடிக்கீழ்த் தொங்கவிட்ட இடத்திருக்கையும், மிக ஒடுங்கிய திருநிலையும் உடைய சிவகாமி அம்மையாருடன் வீற்றிருக்கும் காட்சி கண்கொள்ளாக் காட்சியாகும்.

இந்த நடேசமூர்த்தியைக்கண்டு தொழுத சித்தாந்த சிகாமணி திரு.க.வச்சிரவேலு முதலியார், 'திருப்புகழமிர்தம்' ஆசிரியர் திருமுருக கிருபானந்தவாரியார், திருவாவடுதுறை ஆதீன வித்துவான் திரு. வீர. சுப்பிரமணியம், அண்ணாமலைப் பல்கலைக் கழகத் தமிழ்ப்பேராசிரியர் வித்துவான் ச. தண்டபாணி தேசிகர் முதலான பெரியோர்கள் இத்திருவுருவத்தின் அழகை வாயாரப் போற்றியிருக்கிறார்கள்.

# நடராஜமூர்த்தி

இந்த நடராஜர் திருவுருவம் திருவாசியுடனே சேர்ந்ததாக, நடனத் திருவுருவின் ஓர் அங்கமாக அமைந்திருக்கிறது. இந்தத் திருவாசியில் ஐம்பது சுடர்கள் இருக்கின்றன. இந்த அமைப்பில் சிறந்த தத்துவக்கருத்து ஒன்று உண்டு. சர்வ சங்காரமுடிவில் இறைவன் ஏகனாக இருக்கின்றான். அவ்வாறு கோடானுகோடி ஆண்டுகள் கழிகின்றன. ஆன்மாக்கள் கேவலாவத்தையில் - அறிவு செயல் ஒன்றுமின்றிக் கல்லுப்போற் கிடக்கின்றன. இவ் வான் மாக்களில் வைத்த கைம்மாறற்ற பெருங்கருணையினால் இறைவன் உலகை மீண்டும் தோற்றுவிக்க எண்ணுகிறான். அந்த எண்ணத்தினால் சிவம், சத்தி, விந்து, நாதம் ஆகிய தத்துவங களாய் உலகம் காரியப்படுகிறது. நாத தத்துவத்திலிருந்து சத்தப் பிரபஞ்சம் காரியப்படுமாற்றால் பிரணவம் முதலிலே தோன்றி மூன்றெழுத்தாய் ஐந்தெழுத்தாய், (ஸ்ரீபஞ்சாட்சரம்) எட்டெழுத் தாய் ஐம்பத்தெழுத்தாய் விரிந்து மந்திரம் பதம் முதலியனவாய்த் தூலப்படுத்துகிறது.

இந்தத் திருவாசியுடன் கூடிய திருவுருவம் இறைவன் ஒருவனே ஓரெழுத்தாய் (பிரணவம்) ஐந்தெழுத்தாய் ஐம்ப தெழுத்தாய் இருக்குமியல்பைக் காட்டி அவையே வேதங்கள், ஆகமங்கள், மந்திரங்கள் என நமக்கு உணர்த்துகின்றது.

ஐம்ப தெழுத்தே அனைத்தும்வே தங்களும்
ஐம்ப தெழுத்தே அனைத்தாக மங்களும்
ஐம்ப தெழுந்தேயு மாவ தறிந்தபின்
ஐம்ப தெழுத்தும் போய்ஐஞ் செழுத்தாமே

இணையார் திருவடி எட்டெழுத் தாகும்
இணையார் கழலிணை ஈரைஞ்ச தாகும்
இணையார் கழலிணை ஐம்பத்தொன்றாகும்
இணையார் கழலிணை ஏழாயிரமே, என்பன திருமந்திரம்

# திருவெம்பாவை உற்சவம்

இந்தக் கோயிலில் நடைபெறும் உற்சவங்களுள் மிகப் பிரசித்திபெற்றது திருவெம்பாவை உற்சவமாகும். இவற்றுள் நடராஜர் இரதாரோகணமும், ஆர்த்திராபிஷேகமும் குறிப்பிடத்

தக்கன. இந்த உற்சவங்கள் சிஷ்டாசாரப்படி நடத்தப்பட்டு வருகின்றன. அபிஷேகத்தன்று மாலையில் நடைபெறும் திருவூடல்

"சூடினார்கங் கையாளைச் சூடிய துழனிகேட்டிங்கு
ஊடினாள் நங்கையாளும்"

என்ற அப்பர் சுவாமிகளது திருநேரிசைக் கருத்தை உள்ளடக்கியதாக அமைந்திருக்கிறது. அதுபற்றிப் பெரியோர் பல தத்துவக் கருத்துக்கள் கூறுவர். இந்த உற்சவங்கள் சிதம்பரத்தில் நடைபெறுவது போன்றே பெரும்பாலும் நடைபெறுவதால், இத் திருத்தலம் 'ஈழத்துச் சிதம்பரம்' என அழைக்கப்பட்டு வருகின்றது.

திருவெம்பாவைக் காலத்திலே காரை மணிவாசக சபையார் இவ்வாலயத்தில் மணிவாசகர் விழாவைச் சிறப்புடன் நடாத்திவருகின்றனர். இவ்விழாவில் இந்தியா, இலங்கை என்னும் நாடுகளைச் சேர்ந்த பெரியார்கள் பலர் மணிவாசகரைப்பற்றியும், திருவாசகத் திருமுறைகளைப் பற்றியும் சிறந்த விரிவுரைகள் நிகழ்த்தி மக்களிடையே பக்தி பிரவாகிக்க வழி வகுக்கின்றார்கள்.

## திருப்பணிகள்

தூய உள்ளத்திலே மேலும் இனிய விருப்பமுண்டாவதன் காரணமாக, திருவருள் முன்னிற்கத் தொடங்கிய திருப்பணி நாள் தோறும் வளர்ந்துவருமென்பது அநுபவத்திற்கண்ட உண்மையாகும். இதற்குப் பெரியார் அம்பலவிமுருகர் தொடங்கிய திருப்பணி விதிவிலக்காய் இருக்கவில்லை. அத்திருப்பணியை அவரது பிற்சந்ததியினரும் மற்றைய அன்பர்களும் தொடர்ந்து நடாத்திவந்தனர்; நடாத்திவருகின்றனர். அவர்களுள் கர்மயோகி மாசிலாமணி அவர்கள் செய்த திருப்பணிகள் மிகப் பலவாகும். இவரால் கட்டுவிக்கப்பெற்ற வசந்தமண்டபம் இலங்கையின் வேறெப்பகுதியிலுங் காணமுடியாத சிறப்பையுடையது. தற்போதைய எஜமானர்களாகிய திரு. அ. ஆண்டிஐயாவும், திரு.து. முருகேசுவும் இராம இலட்சுமணர்போன்று கோயில் நிர்வாகத்தில் கண்ணும் கருத்துமாய்ப் பக்தி சிரத்தையுடன் காரியங்களைக் கவனித்து வருகின்றார்கள். இக்கோயிலின் சதாபிஷேகம் 1948ல் இவர்களால் மிகச் சிறப்பாக நடாத்தப்பட்டது.

# கோபுரம்


காரைநகர் செல்வச்சிறப்பினால் மிக மேம்பட்டது; தெய்வ நம்பிக்கை மிக்க மக்களை நிரம்புவுடையது; தருமசீலர் பலரைத் தன்னகத்தே கொண்டது. இத்தகைய ஊரில் உள்ள, 'ஈழத்துச் சிதம்பரம்' என அன்பர்களால் விதந்து போற்றப்படும் இந்த இந்த ஆலயம் தூலலிங்கமெனச் சாத்திரங்களாலும், தோத்திரங்களாலும் கூறப்படும் கோபுரத்தைத் தன்னகத்தே அடக்காமலிருப்பது பெருங்குறையாகும். கோபுரம் கோயிலுக்கு அழகைக் கொடுப் பதுடன் பல தத்துவ உண்மைகளை அடக்கிக் கொண்டிருப்பது. இத்தகைய கோபுரத் திருப்பணி நிறைவேற வேண்டும் என்ற எண்ணம் சகல அன்பர்களது மனத்தினும் உண்டாகும் வண்ணம் திருவருள் துணைபுரிவதாக.

# மாணிக்கவாசகர் மடாலயம்

இற்றைக்கு 32 ஆண்டுகளுக்கு முன்னர் இக்கோயிலின் வடகிழககு மூலையில் ஆரம்பிக்கப்பட்டது இம்மடாலயம். திரு.வீ.வே. சண்முகம் அவர்கள் இம்மடத்தில் முக்கிய கவனம் செலுத்தி அன்னதானத்தை சிறப்பாக நடாத்தி வந்தார். சில ஆண்டுகளின் முன் அவர் சில காரணங்களால் இக்கைங் கரியத்தைச் செய்யாது விலகிக்கொண்டார். இப்பொழுது எஜமானர்களின் ஆலோசனைப்படி ஒரு சபை அன்னதானத்தை மிகச் சிறப்பாக நடாத்தி வருகின்றது.

# சிவ ஆச்சிரமம்


இலங்கையிற் சிறந்த நியாயவாதியாய்த் திகழ்ந்து, பெரும்பதவிகள் வகித்து, புகழுடன் விளங்கி இவ்வூரில் நிலையான பொதுத் தருமங்களை செய்து பூதவுடலை நீத்த திரு. நடராஜா K.C அவர்களின் சகதர்மிணி தங்கம்மா அவர்கள், இக்கோயிலின் வடக்குப் பக்கத்தில் ஏறக்குறைய ஒரு இலட்ச ருபா செலவில், மிகச் சிறந்த ஆச்சிரமத்தை அமைத்திருக்கின்றார்கள். அங்கு பெண்மணிகள் தங்கி, கடவுள் வழிபாட்டில் தம்காலத்தை கழிப்பதற்கான வசதிகள் பலவும் உண்டு. பற்றாய் உள்ள இனசன ங்களாற் துறக்கப்பட்டவர்களும், நல்கூர்ந்தவர்களும், ஆகிய



கோவிலின் தற்போதைய பிரதம சிவாச்சாரியார்
சிவஸ்ரீ வி. ஈஸ்வரக்குருக்கள்

பெண்கள் எவ்வித கவலையும் இன்றி, தம் அந்திய காலத்தை அங்கேயே கழிக்கலாம். இத்தகையோரை ஆச்சிரமம் தன்னிடம் வரும்படி அழைக்கின்றது. இது போன்ற ஆச்சிரமம் இலங்கையின் வேறெப்பகுதியிலும் இல்லையென்பது கவனிக்கத்தக்கது. தேவாரம் முதலான திருமுறைகளைப் பண்ணுடன் ஓதவதன் பெருமையை உணர்ந்து, இவ்வூர் ஆண்களும், பெண்களுமாகிய சிறுவர்களுக்கு வாராந்தோறும் பண்ணில் வல்ல ஆசிரியரைக் கொண்டு திருமுறை வகுப்பு இவ்வாச்சிரமத்தில் நடத்திவிக் கப்படுகிறது. திருமுறைகளைப் பண்ணுடன் ஓதவதல், ஓதுவித்தல் என்பன சிறந்த சிவபுண்ணியங்களாய் ஈற்றில் சிவானந்தப் பெருவாழ்வை நல்குமென்பது திருஞான சம்பந்தப்பெருமானது திருப்பதிகங்களின் திருக்கடைக்காப்பினால் அறியப்படும். இன்னும் இவ்வாச்சிரமத்தில் வாரந்தோறும் பெண்மணிகள்கூடி, திரு முறைகளைப் பராயணம் பண்ணியும், திருவிளையாடற் புராணம் முதலான புராணபடனங்களைச் செய்தும், சிவசிந்தனையில் ஈடுபடுவார்கள். இன்னோரன்ன பல சிவபுண்ணியச் செயல்கள் சிவாச்சிரமத்தில் தவறாது நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. இந்த நல்ல எண்ணத்தை அம்மையாரின் உள்ளத்தில் உண்டாகச் செய்த திருவருளை ஆச்சிரமப் பணிகள் மேலும் சிறக்க அருள் செய்யுமாறு வணங்குதல் ஒவ்வொரு சைவ அன்பரது கடனாகும்.

தென் தமிழ் நாட்டில் உதித்த ஒரு பெரியார் இங்கு வந்து தம்தாய்நாட்டை மறந்து, தெய்வத் திருவருளில் திளைத்து அம்பலவி முருகரைத் துணையாகக் கொண்டு, வாழ்ந்து, தமது ஆத்மாவின் பேரொளியால் அற்புதப் பெருங்கோயில் கண்ட வரலாற்றை ஒருவாறு இதுவரை அறிந்தோம். இப் பெரியார்களின் பெருநெறியில் நின்று இத் தேவத்தானத்தைப் போற்றிகாத்தல் ஒவ்வொரு சைவப்பெரியார்களதும் கடனாகும். இத்திருத்தொண்டில் ஈடுபடும் ஒவ்வொருவருக்கும் சௌந்தராம்பிகா சமேத சுந்தரேஸ்வரர் திருவருள் கிடைப்பதாக ஆண்டிகேணி ஐயன் திருவருள் அகிலமெங்கும் பரவுவதாக. அனைத்தும் நலமேயாகுக.


ஈழத்துச் சிதம்பர இராஜகோபுரம்

உ

# ஈழத்துச் சிதம்பரம்

**சுவாமி யெர்: சுந்தரேசுவரர்**

**அம்பாள் பெயர்: சௌந்தராம்பிகை**

தலவிருட்சங்கள்:

**1. அரசு 2) வன்னி 3) இருப்பை**

**தீர்த்தங்கள்**

**1. பரமானந்த கூபம் 2) சித்தாமிர்தவாவி**
**3) துர்வாசசாகரம்**

**கும்பாபிஷேகம்:**

சுந்தரேசுவரர்

**முதலாவது - 1848 இரண்டாவது 19.03.1903**
**மூன்றாவது 26.01.1934 நான்காவது 16.11.1950**


**சதாபிஷேகம்: 17.06.1948**

**ஐயனார் (இரண்டாவது) கும்பாபிஷேகம் 06.091929**
**நடராஜர் " " 23.04.1903**


**நவக்கிரகங்கள் கும்பாபிஷேகம்**
**27.11.1931**

**தேவத்தான கர்த்தாக்கள்**


**1. அம்பலவி முருகர்**
**2. சண்முகத்தார்**
**3. சின்னத்தம்பியார்**
**4. மாசிலாமணி + துரையப்பா**
**5. ஆண்டி ஐயா + முருகேசு**




திண்ணபுரவெண்பா 50வது செய்யுள்



தற்போதைய ஆதீன கர்த்தாக்கள்
திரு. ஆ. அம்பலவிமுருகன்,　　திரு. மு. சுந்தரலிங்கம்



திண்ணபுரவந்தாதி ஆசிரியர்
மு. கார்த்திகேயப்புலவர்
(1819 - 1898)

அநுபந்தம் 1

உ
சிவமயம்

# திண்ணபுரவந்தாதி

## காப்பு

திருவேளை யட்டவன் காரை நகருறுந் திண்ணபுரத்
தொருவேழை பங்கினன் மேலொரந் தாதியை யோதுதற்குப்
பெருவேளை பூண்டு பிரார்த்திக்கு மன்பர் பிறவியெனுங்
கருவேழை யந்துடைத் தாளுங் கணபதி காப்பதுவே.

## நூல்

நீரம ரந்திச் சடாமகு டத்த னிருதரொடும்
பேரம ராற்றிய கந்தனைத் தந்த பிரானயன்மா
லேரம ரர்க்கு முணர வரியவ னேறுகன்னி
கார மரஞ்செறி திண்ணபுரத்துநங் கண்ணுதலே.

கண்ணுதல் செய்ய சடையன்றிண் ணப்புரன் காண்கருத்தி
லெண்ணுதல் செய்யவொண் ணாதவன் றன்னை யினிமையுட
னண்ணுதல் செய்ய மலர்கொடு போற்றி யமர்ந்தர்ச்சனை
பண்ணுதல் செய்யன் பருக்கின் னருளினைப் பாலிப்பானே. 2

பாலந் தரியினை வைத்த வநாதி பகவன்றிரி
சூலந் தரித்தவன் றிண்ண புரப்பதி துன்னிநிதம்
மேலந் தரித்திரி தந்தோ னெனக்கிந்த மெய்முழுதுங்
கோலந் தரிசிக்க வாசவன் போற்கண் கொடுத்திலனே. 3

---

## அரும்பத விளக்கம்

காப்பு - பெருவேளை பூணுதல் - மன்றாடுதல்

1. கன்னிகாரம் - கோங்கு
2. அண்ணுதல்செய்ய - அடைய, அமர்தல் - விரும்புதல்
3. அந்தரி - பார்வதி, மேல் அந்தரித்து இரிதந்தோன் - பிரமா.

கொடுத்தகை யாருறு திண்ண புரத்தமர் கோபதிகார்க்
கடுத்தகை யான தவிர்களத் தானன்பர் காசியினில்
வடுத்தகை யாமறை நாற்கூறு செய்தவன் மால்பெரிதென்
றெடுத்தகை யாங்கட் டவன்றன் கணதொ டிருப்பர்களே. 4

இருபதத் தன்றனைக் கீழுற வூன்றி யிருத்திற
லொருபதத் தன்றிகழ் திண்ண புரப்பதி யுள்ளுவந்தான்
வருபதத் தன்முத லானோர்கள் ஞான வழியமையக்
கிருபதத் தன்றனைப் போற்றிடு வார்க்கொரு கேடிலையே 5

கேடு மடிய வருடிரு மாதுதன் கேள்வனுற்றுத்
தேடு மடியனற் றிண்ண புரப்பதி சேர்ந்தவனிக்
கூடு மடியமு னேத்தி வணங்கிக்கை கூப்பியென்றும்
நாடு மடியவர்க் கேயின்ப வாழ்வினை நல்குவனே. 6

நற்றவ ராகத்தன் செட்டிநல் லார்க்கு நலங்கொடொடி
விற்றவ ராகமஞ் சொற்ற விமலன் மிகவுமுயர்
கற்றவ ராகக்கொ டிண்ண புரத்தமர் கண்ணுதலுக்
குற்றவ ராகந் தனைக் கூறிக் கொண்டுசெல் லோதிமமே. 7

ஓதி மயனிம வான்பெற் றருளு முமைதனக்கோர்
பாதி மயன்சூ ரெனையணு காத படியருளுஞ்
சோதி மயன்புகழ் திண்ண புரப்பதி துன்னினார்க்கு
ஞாதி மயனினை யார்க்கய லானென்ற னாயகமே. 8

அகமா யதற்குப் புறமாகி யெங்கு மமர்ந்தருள்வோன்
மிகமா யனுப்புகழ் திண்ண புரப்பதி மேவு பிரான்
மகமாய நீங்கித் தனைமதிப் போர்க்கு மகிழ்ந்துதவுஞ்
சுகமாய வல்லவர் யார்புல வீரிந்தத் தொன்னிலத்தே 9

---

4. கோபதி - பசுபதி, தகை - கூறுபாடு, வடுத்தகையா - குற்றத்தை நீக்கி.
5. வருபதத்தன் வினைத்தொகை, பதத்தன் - பக்குவி, (சனகர்)
கிருபதத்தன் என்பது கிருபதத்தன் என நின்றது.
7. கல் - மலை, தவர் - வில். அகம் ஆகமமென நீண்டது. அராகம் - இச்சை.
8. ஓதி - ஞானம். சூர் - துன்பம், ஞாதி - பிதாவழிச் சுற்றத்தான்.
9. மகமாயம் - மகாமாயை

நிலங்கட லார லொலிவெளி யான நிமலனொன்னார்
கலங்கடன் மேவு மழுவாளி திண்ணக் கவின் புரத்தான்
புலங்க டமைத்தெறு மாதவர் போற்றும் புனிதனென்றன்
குலங்க டமக்கொர் துணையா யருள்செய் குணநிதியே 10

நிதித்தலை யானண்ப திண்ண புரத்து நிமலசிவ
விதித்தலை யார விறந்து பிறந்துழல் விண்ணவரைத்
துதித்தலை யாம லுனை நம்பி னேனமன் றுள்ளியென்முன்
கொதித்தலை யாப்பது போல்வரி னீவந்து கொண்டருளே. 11

கொண்டலை யூர்தரு வாசவன் கர்வங் குறைத்தவன்வான்
றண்டலை யூர்தரு போதி னுலாவிய சஞ்சரிகம்
வண்டலை யூர்தரு மங்கையர் பைங்குழன் வந்துநறை
யுண்டலை யூர்தருந் திண்ண புரத்தி னுறைபதியே. 12

உறைவா ரடிய ரகத்தினு மற்று முலகெங்குமாய்
நிறைவா ரழகிய திண்ண புரத்தினர் நீளகல்வான்
பிறைவார் சடைமுடிப் பிஞ்ஞக நாமம் பெருகுமன்பி
னறைவார் பெருமையை யாருணர் வாரிவ் வகலிடத்தே. 13

இடைபிக் கலைக ளொடுக்கிச் சுழுமுனை யேற்றியொரு
தடைபிங் களையின்றி யோகத் தமருந் தவத்திர்செல்வம்
உடைபிங் கலனண்பன் றிண்ண புரத்தின னோதிமத்து
நடைபிங் கலைதன் மணாளனைப் போற்று நலம்பெறவே. 14

நலமமையாரங் கரும்பார மென்னளி நாரமள்ளர்
அலமமை யாவொளிர் திண்ணபுரத்தி னானன்பர்கள்
பெலமமை யாவிற லின்பநற் கீர்த்தி பெருமைகொடை
இலமமை யாத்திருக் கல்விதீர்க் காயுளு மெய்துவரே. 15

---

10. கலங்க அடல் - கலங்கடல், அடல் - வெற்றி.
11. தலைவிதி ஆர என இயையும். அலை - கடல் (ஆகபெயர்)
12. சஞ்சரிகம் - வண்டு. வண்டல் - மகளிர்விளையாட்டு
14. பிங்களை - ஆயுட்காலத்தின் மூன்றிலோர்பகுதி,
பிங்கலன் - குபேரன், பிங்களை - பார்வதி
15. அமை - மூங்கில், ஆரம் - தோட்டம், மாலை. நளினம்
தாமரை, அலம் - கலப்பை.

துவரித ழும்பிகை பாக னெனது துயர்தணித்தோன்
உவரித முங்கியற் றிண்ண புரத்தி லுறைபெருமான்
கவரிதழ் வில்வத்தி னாலருச் சிக்கக் கருதினரைச்
சவரித முங்கப்பொற் கற்பக நாட்டிற் சரிப்பிப்பனே. 16

சரிதருஞ் செங்கரத் தையனல் லாமயற் றங்கிமிகத்
திருதரு மெற்கருள் செய்குவை யோநற் செறுவதனில்
வரிதரு முத்தைச் சிரல்கூண் டிடைச்சுடர் மானவைத்துத்
தெரிதருந் திண்ண புரப்பதி மேவிய சிற்பரனே. 17

பரவை யிடஞ்சுந் தரற்காகத் தூது படர்பரம
னரவை யிடர்தணித் தோன்றொழுந் திண்ண புரத்ததிப
னிரவை யிடாதன் பருக்கருள் வோன்றனை யெண்ணிநிதங்
குரவை யிடக்கடி தோடிவந் தாளுங் குணமலையே. 18

மலைவிற்றை யாதிரி சூல கணேச மகிதலஞ்சூ
ழலைவிற்கை யாழிக் கிறைதொழுந் திண்ண புரத்தினத்த
முலைவிற்கை யார்புரி மோகத்தில் வீழும் முதுக்குறைவின்
கலைவிற்கை யாரணந் தேட வருங்கரு ணைக்கடலே. 19

கடம்பணியும் புயக்காளையை யீன்ற கடவுண்முத்து
வடம்பணி பூண்முலை மாதொரு பாகன் மருங்கெங்கணும்
அடம்பணி யுற்றிடுந் திண்ணபுரத்தி லமர்ந்தவன்செய்
நடம்பணி வுற்றவ ரன்றோ கயிலையி னண்ணினரே 20

இனமத னைப்புத் திரரையத் தத்தினை யெண்ணியென்றுங்
கனமத னைச்செய் துழன்று திரிதருங் கன்மிகளே
தனமத னையுள திண்ண புரத்துறை தாணுவின்மேன்
மனமத னைச்சற் றுறுத்தித் துதித்து வணங்குமினே. 21

---

16. உவரி - கடல், சவரி - சாமரை. சரிப்பு - போதல், உலாவுதல்
17. சரி - கைவளை. செறு - வயல், சிரல் - ஒருபறவை. வரி - வரிசை சங்குமாம்
18. அரவு - பாம்பு. இரவு - இரத்தல். குரவையிடுதல் - கூப்பிடுதல்.
19. வில் அலை கை - ஒளிபொருந்திய அலைவரிசை. முலைவிற் கையார் - வேசிகள், முதுக்குறைவு - பேரறிவு, கை ஏவல் வினைமுற்று.
20. அடம்பு - மரம், கொடி

மின்னா ருறுசடை யானா துலரை வெறுத்துப்பிற
கென்னா ருறுகின்ற திண்ண புரத்தெம் மிறைவன்றனை
யுன்னா ருறுதுய ரங்களை யானெண்ணு வோர்க்குதவும்
பொன்னா ருறவரோர் நால்வர்க்கு ஞானம்போ தித்தவனே. 22

போதே கியவய னும்புகழ்ந் தேத்தும் புனிதனெங்கும்
மீதே கியபொழிற் றிண்ண புரத்தினில் வீற்றிருப்போன்
காதே கியவிழிக் கன்னியொர் பங்குடைக் கண்ணுதல்பாற்
றூதே கியவன மீளா திருப்பதென் றொல்வினையே 23

தொல்வினை யாலுயர் மானுட ராய்வந்து தொன்றியிங்ஙன்
கொல்வினை யாதிய பாதகஞ் செய்யுங் கொடியவரே
நல்வினை யாருறுந் திண்ண புரத்த னரன்றனக்கு
வெல்வினையாவங்கொடுத்தானைப் போற்றுமின் மெய்யன்பொடே 24

மெய்யங்க மாறுண ரந்தணர் போற்றும் விமலனருள்
கையங்கர் கோன்புகழ் திண்ண புரத்தன் கருங்கடுவார்
பையங் கதஞ்செறி பூணாகனென்று பரவினுறுஞ்
செய்யங்க நாலுடன் மேதினி யாளுந் திறமதுவே. 25

திறல்கெழு மும்மயிற் கண்ணார் குடையச் செவ்வல்லிமலர்
அறல்கெழு மும்மடுச் சூழ்திண் ணபுரத் தமரமல
மறல்கெழு முஞ்சமன் சீறியென் முன்னால் வரும்பொழுதில்
உறல்கெழு மும்வெள் விடைதனி லேறி யுமையுடனே. 26

உடலை யநித்திய மென்றுண ராம லுழன்றுபல
நடலை யறைந்து திரிபவ ரேமுன்னோர் நாளதனிற்
கடலை யயின்றோன் பணிதிண் ணபுரக் கடவுளர் கோன்
அடலை யணிபவன் கீர்த்தியைக் கூறுமி னாதரித்தே 27

---

22. உறுவர் - முனிவர்
23. போது - புஸ்பம்
24. ஆவம் - அம்பு
25. அங்கதம் - பாம்பு. அருள்கை - கொடையால்.
26. அயில் - வேல். அறல் - கருமணல்
27. நடலை - பொய். கடலையயின்றோன் - அகத்தியன். அடலை - விபூதி

ஆதர வேணுடை யெற்குனை யாயு மறிவதனை
நீதர வேணு நிமல வமல நிராமயகங்
காதர வேணு வளர் திண்ண நற்புரக் காத்தசெம்பொற்
பூதரவேணு வளைத்துப் புரஞ்செற்ற புண்ணியனே. 28

இயலிசை நாடகம் வல்லார் புகழு மிறைவர்செந்நெல்
வயலிசை திண்ண புரத்துறை யெந்தை மலையகத்தில்
புயலிசை கூந்தனல் லாயுன்றன் மேனி பொலிவழிந்தோர்
செயலிசை யாதுளஞ் சோர்வடைந் துற்றதென் செப்புவையே 29

செப்பற் கரியன கொங்கைக் களவிழிச் சில்லையர்பாற்
கப்பற்கரிய கொடியெனச் சென்றுகலை காமுகரே
ஒப்பற் கரியநற் றிண்ண புரத்திறை யும்பர்பிரான்
அப்பற் கரிய துயர்தீர்த் தவன்பணி யாற்றவம்மே. 30

வங்க மலைய னிமையவர் யாவரும் வந்திறைஞ்சு
துங்க மலைசெறி திண்ண புரத்துறை தோன்றலின்சொற்
சங்க மலைவ தகற்றியருளினற் றாழ்பவர்தம்
அங்க மலைவுசெய் நோயின்றிவாழ்வ ரவனியிலே. 31

அவந்தனி னாட்களைப் போக்கி யுழன்றுள் ளறிவழிந்து
பவந்தனின் மூழ்கிக் கிடந்தே யிடர்ப்படும் பாழ்மனமே
கவந்த நிறைதடஞ் சூழ்திண் ணபுரக் கருணையுருச்
சிவந்தனி லன்புற்றுப் போற்றிச் சிவகதி செல்லுவையே 32

செல்லை யளக்கும் பனசக் கனிவிண்ட தேன் செறிந்தே
எல்லை யளக்குஞ் செய்தித்திண் ணபுரத்த னிறும்பதனில்
வல்லை யளக்கர் முழங்க நிலாத்தென்றல் வந்துபட
வில்லை யளக்கு நுதலாய்மெய் வாடி மெலிந்தனனே. 33

---

28. ஆதரவு - விருப்பம். ஏண் - இறுமாப்பு. வேணு - மூங்கில், வில், பூதரம் - மலை
29. புயல் - மேகம்
30. செப்பு அல்கரி - செப்பறகரி, களம் - கறுப்பு, சில்லையர் - தூர்த்தமங்கையர். கொடி - காகம்.
31. வங்கம் - வெள்ளி, மலைவு - மாறுபாடு, அகற்றல் - நீக்கல்
32. கவந்தம் - நீர்.33. செல் - மேகம், பனசம் - பலா, செய் -வயல், இறும்பு - மலை

தனத்தை யுடையோர் வறுந்தொண்டற் கீயத் தனதற்கருள்
கனத்தை யுடையவன் றிண்ண புரத்தினன் காமருறும்
அனத்தை யுடைய னறிதற் கரிய னயநிகரென்
மனத்தை யுடைத்து நிலாமணி போற்செய் மறைமுதலே. 34

முதலையி னாவை யரிந்தவ னாதியர் முன்னிறைஞ்சும்
மதலையி னானெழிற் றிண்ண புரத்தினன் மாதுரியக்
குதலையி னாளொரு பங்கின னைம்முகன் கோதில் வெள்ளிப்
பதலையி னானைப் பரவிடிற் பாவம் பறந்திடுமே. 35

பறத்தலை யுற்ற பறவையைப் போலப் பலயோனியிற்
பிறத்தலை யுற்றலை பேதைநெஞ் சேயொன்று பேசுவன்கேள்
சிறத்தலை யுற்றொளிர் திண்ண புரத்துத் திருப்பதிசென்
றுறத்தலை யுற்றிடும் பேர்க்கரி தாம்பொரு ளொன்றிலையே 36

ஒன்றா யிருவகை முப்பெய ரைந்திற னோடொளியாய்
நின்றா யிருந்தவர்க் காகமுன் வந்தெதிர் நீள்கரியைக்
கொன்றா யிருளி லழுந்தாம லுன்றன் குரைகழற்கீழ்
நன்றா யிருக்கவை திண்ண புரத்துறை நம்பரனே. 37

நம்பு முளத்தினர் தாபந் தணித்தரு ணாதன்றுடி
கொம்பு முழவங் கிணைபணை பேரி குமுறியிரை
கம்பு முழங்குநற் றிண்ண புரப்பதி காதலுறுஞ்
சம்பு முளரிப் பதமதல் லாலெற்கொர் சார்பிலையே 38

இலய மதிகரம் போக மதாகி யெவரெவர்க்கும்
நிலய மதித்தற் கரியவன் றேவர்க ணேமிவரை
உலய மதிக்கையில் வந்தநஞ் சுண்டவ னுற்றவிடங்
கலய மதிற்சனித் தோன்றொழுந் திண்ணக் கழற்புரமே 39

---

34. அயம் - இரும்பு, நிலாமணி - சந்திரகாந்தக்கல்
35. முதலையினாவையரிந்தவன் - விஸ்ணு. மதலை - பிள்ளை
பதலை - மலை
36. உற - உறுதலினாலே
38. தாபம் - துன்பம், கம்பு - சங்கு
39. நேமி - சமுத்திரம், வரை - மலை, கலயம் - கும்பம்.

கழுமுட் படையினன் றிண்ண புரத்தினன் கல்லகத்திற்
தொழுமுட் பகையற் றவர்புக ழுந்திறற் சுந்தரனே
எழுமுட் படலையும் வேடரு நாயுமிகலி மிகக்
கெழுமுட் பிரிவுடை யாளிட மல்கலிற் கிட்டலையே 40

அலைவா யினன்றனை யோம்பொருள் கேட்டரு ளாத்தனெழு
நிலையா யிறங்கிய திண்ண புரத்து நிருமலன்பல்
கலைவா யினாற்சொற் றவன்றன தன்பர் கருவெடுத்து
முலைவாயில் வைத்தருந் தாதருள் செய்திடு மூர்த்தியன்றே 41

அன்றால நன்னிழ லுற்றறி வோதின னண்டருக்காய்த்
துன்றால நல்கமுன் றுய்த்தவன் பாவத் தொகைதொலைக்குந்
தொன்றால நற்றடஞ் சூழ்திண் ணபுரத்துச் சோதிசிவ
மென்றால நற்பல மெங்ங னளவிட் டிசைப்பதுவே. 42

பதக்கஞ்சுடர் தனில்வீழ்ந்துமெய் வெந்தழிபான்மையைப் போல்
இதங்க நலமென் றரிவையர் மோகத் திசைபவரே
உதங்கன் றொழுதகு திண்ண புரத்தை யுகந்தவனை
மதங்கந் தனதுரி போர்த்தானைக் கண்ணுற வந்திடுமே. 43

வந்து தருஞ்சுத னுன்னுமுன் வந்தருள் வள்ளலுறை
சிந்து தருந்திரைத் திண்ண புரப்பதி சென்றினிதாய்
முந்து தருமம் புரிந்தா லயங்கண் முடித்தவர்கள்
ஐந்து தருவளர் சொர்க்கத் திருப்ப ரயன்கற்பமே. 44

சற்ப வளவனிடத்தோலை விட்ட கடவுளொளிர்
நற்ப வளம்புரை செஞ்சடை யான்றனை நம்பினர்க்குச்
செற்ப வளறொழி திண்ண புரத்துத் திருப்பதியான்
உற்ப வளயமி லாத வரன்றன தொண்புகழே 45

---

40. கழுமுள் - சூலம், கல்லகம் - மலை, எழுமுட்படலை -எழுமுட்கூட்டம்.
41. அலைவாய் - திருச்செந்தூர், ஓம் - பிரணவம்
42. ஆலம் - நஞ்சு, நீர்
43. பதங்கம் - விட்டில், சுடர் - விளக்கு. இது அங்கம் - இதங்கம் உதங்கன் - ஓரிருடி, மதங்கம் - யானை.
44. வந்துதருஞ்சுதன் - வீமன், வந்து - காற்று
45. இக்கவி பூட்டுவிற் பொருள்கோள், செல்ப அளறு - செற்பவளறு. செல் - இடி. ப - காற்று, அளறு - நரகம் உற்பவளயம் - ஜனனவட்டம். வளையம் - வளயம் எனநின்றது.

ஒண்டளை யிற் சிக்குண் டோயு மவருக் குவந்தருள்வோன்
ஞெண்டளை யிற்சங்க மீன்றவெண் முத்த நிலாப்பரப்பக்
கண்டளை யிற்பானல் விள் திண் ணபுரன் கழறுமென்றன்
வெண்டளை யிற்பிழை யாயினுஞ் சால விரும்புவனே. 46

விரும்பா வனலத்தை யேந்திய கையன்விண் ணோர்வியக்கத்
துரும்பா னலத்தின்முச் செய்கையைக் காட்டிய துய்யனியல்
இரும்பா நலத்தர்சொற் றிண்ண புரத்த னிறும்பதனிற்
பெரும்பானலினொரு செங்காந்தள் பூத்ததென்பெய்வளையே. 47

வளையா தயநிகர் வஞ்சக நெஞ்சுடை வன்கணர்பால்
நுளையா தறஞ்செய் பவருடன் கூடுதி நுண்மனமே
களையா தவன்றொடுந் திண்ண புரத்துறை கண்ணுதன்மேல்
விளையா தவரினி யென்செய் குவார்நமன் மேவுகைக்கே 48

கைப்பணி யாலெழிற் றிண்ணபுரத்திற் கடிதுவந்து
வைப்பணி யாகநன் மாளிகை கூபம் வகுத்தடைவே
பைப்பணி யாபர ணன்சுந்த ரேசன்பொற் பாதமல
ரைப்பணி யார்பிற விக்கட னீந்த லரிதரிதே. 49

அரம்பட ருங்குலி சாயுத னேத்து மமலசெயில்
வரம்படர் நீர்செறி திண்ண புரத்தமர் வானவனே
உரம்படர் மாயனுங் காண்டற் கருநின் னுபயபதஞ்
சிரம்பட ரத்தந் தருள்வதெக் காலஞ் சிறியனையே. 50

அனையும் பிதாவுநீ யல்லா துலகினி லாருமிலைப்
புனையும் பிதாமகன் போற்றும் புனிததண் பொய்கையினிற்
கனையும் பிதாவமர் திண்ணபுரத்துறை கர்த்தவினி
யெனையும் பிதாவழி யுற்பவி யாம லிரட்சிப்பையே. 51

---

46. தளை - பாசம், அளை - புற்று, மலைக்குகைச்சுனை (ஆகுபெயர்)
47. விரும்பா - விரும்பி. அனலம் - அக்கினி. இரும்பாநலத்தர் - புலவர். பானல் - கருங்குவளை.
48. கழை - கரும்பு, எதுகைநோக்கிக் களை என நின்றது. விளையாதவர் எனநின்றது.
49. வைப்பு - இடம், அணி - வரிசை, பை - படம், பணி - பாம்பு
50. குலிசாயுதன் - இந்திரன், செய் - வயல், உரம் - வலிமை
51. பிதா - பெருநாரை

இருக்கோ தையுமன்ப ரேத்தோ தையுமங் கெழுகடலின்
பெருக்கோதை போன்றிடுந் திண்ண புரத்துப் பிரான்கிரியிற்
கருக்கோ தையரிட் டிடையிடை யென்று கனதனத்தின்
மருக்கோதை மார்ப வணியார்கண் முத்து மதாணியதே. 52

தாணில வர்க்கம் புனைசடை யானொரு சார்பொழிந்தோன்
சேணி லவர்புகழ் திண்ண புரத்துச் சிவபெருமான்
றுணி லவதரிக் கும்மரி தோல்புனை தூயன்றனைக்
காணி லவர்க்கருள் வான்பொற் கமலக் கழலிணையே. 53

களக்கறை யானையக் கண்ணன் றனதுகைக் கார்முகநாண்
விளக்கறை யானுரு வாயறுத் தோனை விசும்புநெறி
அளக்கறை யாலயஞ் சூழ்திண்ணபரத் தமர்பரனை
உளக்கறை யான தகற்றித் தொழவந் தொருப்படுமே. 54

படர்வேலை யன்ன விழியின ரேவற் பணிகளன்றித்
தொடர்வேலை யாத்திடுந் திண்ண புரப்பதி துன்னியென்றும்
நடர்வேலை யன்றொண்டு செய்யாத நீவிர் நமன்றனொற்றவர்
அடர்வேலை யாது புரிவீ ரதனை யறைகுவிரே. 55

விரையப் பறுகித ழிச்சடை யான்வைகை மெல்லியற்காய்க்
கரையப்ப மண்சுமந் திட்டவன் றிண்ணக் கவின்புரத்தான்
உரையப் பருக்குறு நோயொழித் தோனென் னுயாதணிப்பன்
தரையப் பனல்வளி யாகாய மாகிய சங்கரனே. 56

சங்கூர் பழனத் தலையி லுழவர் கடம்மொலியாற்
கொங்கூர் பழமைக் குரங்கினம் பாய்ந்து குதிக்கவுயர்
தெங்கூர் பழமுதிர் திண்ண புரத்துறை சிற்பரன் மின்
பங்கூர் பழம்பொரு ளென்னை யடிமைகொள் பண்ணவனே. 57

---

52. கோதை - மயிர், மாலை, இட்டிடை - சிறுமை, மதாணி - பதக்கம்.
53. அர்க்கம் - எருக்கு, விள்ள - விள என நின்றது.
55. படர் - பரந்த, வேலை - சமுத்திரம்
56. விரை அப்பு அறுகு இதழி - விரையப்பறுகிதழி, உயா - வருத்தம், இதழில் - கொன்றை.
57. கொங்கு - நாற்றம்

பண்ணறு கான்முரல் கொன்றையந் தாரினன் பத்தருளத்
துண்ணாறு மெந்தை பெருமா னுமாபதி யொண்கமலக்
கண்ணாறு நீர்செறி திண்ண புரத்தினன் காணலரைப்
புண்ணாறு செய்திரி சூலா யுதத்தனைப் பூசனையே. 58

சனக நசன மிடவிட வுண்டவன் றாதையுயர்
கனக னசதி யுறத்தறி மேவுகண் ணன்பரவும்
அனக னசல னனாமயன் றிண்ண புரத்தமலன்
எனகன சஞ்சல மாற்றிநல் வாழ்வினை யீகுவனே. 59

ஈயுந் தகைய ருறுதிண் ணபுரத் திறைவதியும்
மீயுந் தகையதொர் வெற்பிற் றிதலை மிளி தனத்தாற்
றேயுந் தகைய விடையளி காணறுந் தேங்குழலிற்
பாயுந் தகைய நறவுண்டு துஞ்சுதல் பண்பல்லவே. 60

பல்லவங் கோதிக் குயில்கூவு சோலைகள் பாங்கினமர்
நல்லவங் கோதியன் றிண்ண புரத்தின னான்மறையோன்
மெல்லவங் கோது திருவாசகத்தின் மிகப்பிரியன்
செல்லவங் கோதியொர் பாகனென் றால்வினை தீர்ந்திடுமே. 61

தீ நகைப் பால சுரபுரஞ் செற்றவன் றேவருக்காய்த்
தூநகைப் பாலனற் றிண்ண புரப்பதி தோன்று மண்ணல்
வானகைப் பாலனம் போல்வா னடியர்க்கு மன்னுயிரை
ஆனகைப் பாலரைம் போற்காப் பவனென றறிசித்தமே. 62

சித்திர கூடலிற் றென்னவ னாகிய செல்வன்செந்தீக்
கத்திர கூடமமைத்து வனமுண வாற்றினற்குக்
குத்திர கூடவரைத்தெறு பாணங் கொடுத்தபிரான்
சத்திர கூடஞ்சூழ் திண்ண புரப்பதி சார்பவனே. 63

---

58. இக்கவி பூட்டுவிற் பொருள் கோள், ஆறுகால் - வண்டுகள், முரலுதல் - ஒலித்தல், உண்ணாறுதல் - தோன்றுதல், கள் நாறு - கண்ணாறு. புண்ணாறுசெய் - புண்படுத்துகின்ற.
59. சனகனசனமிடவிடவுண்டவன் - பிள்ளையார், அசனம் - சோறு, கனகன் - இரணியன், அசதி - மயக்கம்.
60. மீஉந்து அகைய - மேலாக உயர்ந்து எழும்புகின்ற திதலை - தேமல்61. பல்லவம் - தளிர், வங்க ஓதியன் - வெள்ளிமலையையுடையவன்,
கோதி - வெற்றி
62. தீ - அக்கினி, நகை - ஒளி, மகிழ்ச்சி
63. அத்திரம் - அம்பு, சூத்திரம் - வஞ்சனை

சாரு மறைவின்றிப் பூவையி னோடுயர் தண்டலையிற்
றேரு மறைபகர் திண்ண புரத்தினிற் றேவனிகல்
கூரு மறையவன் றேடவேட் டாத குழகனிலத்
தாரு மறையும் புகழின னேயெனை யாண்டவனே. 64

ஆண்டரங் கத்திற் றுயில்பவன் போற்றப்பொன் னம்பலத்தார்
பாண்டரங் கத்தினன் றிண்ண புரம்வதி பற்றுடையான்
மாண்டரங் கத்தையுண் டோற்கொரு நீரருள் வள்ளலன்பர்க்
கீண்டரங் கத்தை யகற்றி யருள்புரி யெந்தையன்றே 65

என்னனை யாவ லொடுவருந் திச்சுமந் தீன்றளித்த
மின்னனை யாக மழியுமு னுன்னருண் மேவுவனோ
துன்னனை யான துகள விறால்வெடித் துச்சொரியும்
நன்னனை யாறு றுந் திண்ண புரத்தை நயந்தவனே. 66

நயந்த வரைத்தனு வெந்தி தனோடெதிர் நண்ணலரைக்
கயந்த வரைவின் மிடற்றிண் ணபுரக் கடவுணிதம்
வியந்த வரைத்தனக் கொப்பாக வைக்கும் விமலனெனிற்
பயந்த வரைச்சற்றுங் கிட்டாது நீங்கும் பழவினையே. 67

பழவினைப் பற்றற வேண்டுதி ராயிற் பரதனத்திற்
கழவினைப் பற்று விடாத்திண் ணபுரத்துக் காதலுறந்
தழவினைப் பற்ற நகையுமை யாளொடு தங்குதிரு
விழவினைப் பற்றொடு கண்டிட யாரும் விரைந்துறுமே. 68

உறுவரம் பைக்கனி யிற்றேன் பெருகி யுலவியயல்
செறுவரம் பைக்கரை திண்ண புரத்தினிற் றேவனெழில்
பெறுவரம் பைக்குலம் போற்றுமை பாகனைப் பேணித்துதித்
திறுவரம் பைக்கடந் துய்ந்தனர் கோடி யிருந்தவரே. 69

---

64. சாரு - கிளி
65. அரங்கம் - திருவரங்கம், அழிவு . தரங்கம் - சமுத்திரம் (ஆகபெயர்)
66. துன் அனை - நெருங்கியமீன் - உகளல் - குதித்தல்,நல்நனை - தேன்.
67. ஏந்தி - தாங்கியவர்.68. களவு - எதுகைநோக்கிக் கழவு என நின்றது, தளவு என்பதுமப்படியே, இனை - இனைதல், வருந்தல், விடா - விட்டு, தளவு - முல்லை.
69. அரம்பை- வாழை, செறு - வயல், இறுவரம்பு - மரணகாலம்

இருவருஞ் சோதிக்க வெட்டாது வானில மெட்டிநின்ற
பொருவருஞ் சோதி மலையா னவனுயர் புன்னைவன்னித்
தருவருஞ் சோதி தகைதிண் ணபுரத் தளியதனில்
மருவருஞ் சோதியைப் போற்றிடிற் பாச வலையறுமே. 70

வலநிறை பொன்றிகழ் சூலப் படைக்கரன் வானளக்குங்
குலநிறை பொன்னமர் திண்ண புரத்தினெங் கோன்குவட்டில்
நலநிறை பொன்மக னேருன தன்பர் நகில விலை
கலநிறை பொன்கொடு வந்தாரெனதருங் கண்மணியே. 71

மணிமான் முதல வயங்கொ ளியக்கரும் வந்துபணி
கணிமான் முகட்டியற்றிண்ண புரத்துக் கபர்த்திதுழாய்
அணிமான் முரட்கணை தூண்டியவுணரை யட்டவனென்
பிணிமான் முழுதும் வருத்தா தருள்செயும் பெற்றியனே. 72

பெற்றம் பறித்தெறி முக்கோண வெற்பைப் பிடுங்கரக்கன்
கொற்றம் பறியப் பெருவிர லூன்று குழகனிலா
முற்றம் பறியுநற் றிண்ண புரன்மேன் மொழிந்தமையாற்
குற்றம் பறினு மிகழாரென் பாவினைக் கொள்வர்களே. 73

கொள்ளைவண்டாது குபொற்கொன்றைத் தாமங்குலாஞ்சடையன்
வெள்ளைவண் டானந் திரியுந் தடத்தன் வியன்சலசக்
கள்ளைவண் டார்ந்தினி திற்றுஞ்சு திண்ணக் கவின்புரத்தான்
அள்ளைவண் டானைச்செற் றோனடி யார்க்கெவ ரஞ்சிலரே. 74

அஞ்சாறு செய்யருக் கெட்டாத வான்ந்த னானமலர்ச்
செஞ்சாறு செய்யணை திண்ண புரத்துறை தேவனுயர்
மஞ்சாறு செய்ய சடையா னுமையொடு வாழுமவர்
தஞ்சாறு செய்பவர் பேற்றினை யானிவண் சாற்றரிதே. 75

---

70. தகை - தடை, தளி - கோவில், மருவு அருஞ்சோதி - மருவருஞ்சோதி
71. குலம் - வீடு, குவடு - மலை, நகிலம் - முலை
72. கணி - வேங்கைமரம்
73. பெற்றம் - காற்று, பறிதல் - நீங்கல், வெளிப்படுத்தல் - பொருந்தல்
74. கொள்ளை - கூட்டம், வண்டானம் - நாரை
75. சாறு - தேன், திருவிழா. மஞ்சு - அழகு, செய் - வயல்

சாற்றற் கரிய தனித்திண் ணபுரத்தன் றண்கடலிற்
றோற்றற் கரியநஞ் சுண்டவன் மாயையின் றோன்றலுக்கு
மாற்றற் கரிய வரமருள் வோன்புகழ் வாய்மொழிவோர்
ஆற்றற் கரியுகைத் தோனென வாழுதற் கையமின்றே. 76

ஐயா னனந்தனைச் செற்றவ னெற்கரு ளாறிரண்டு
கையா னனந்தனை யீவோன்றிண் ணப்புரங் காட்டுமுய
ருய்யா னனந்தனை யூர்தடஞ் செய்தங் குவந்தவர்கள்
மெய்யா னனந்தனைப் போற்கயி லாயத்து மேவுவரே. 77

மேவார் புரந்தக னம்புரி கூரிய மிக்கவென்றி
யேவார் புரந்தனை யொத்ததிண் ணப்புரத் தெம்பெருமான்
காவார் புரந்தரன் போற்ற வருளுங் கடவுளன்பர்
ஆவார் புரந்தனி னோயின்றி வைகுவ ரம்புவியே. 78

புவியுண்டு பண்ணும் பிரமன் முதலிய புங்கவர்க்காய்க்
கவியுண் டுதரத் தமைத்தவன் கார்மயிற் கன்னியர்கண்
செவியுண் டுலவு நிழலினைச் சேலெனச் செய்யெங்கணுங்
குவியுண் டுழக்குதென் றிண்ணபுரகொற்றத் தம்பரமே. 79

தம்பய மொன்றின்றி யைந்தொழில் செய்யுந் தலைவனெடுங்
கம்பய மொன்றி பணைத்திண் ணபுரக் கபாலிசிவன்
பம்பய மொன்றிய நாரதன் வேள்வி படாந்துலவு
கொம்பய மொன்றினன் றந்தைமற் றெந்தன் குலத்துணையே. 80

துணையென் றடைந்தவர் தந்துயர் தீர்த்தரு டூயனொளி
அணையென் றனைப்பொரு மேனிய னுள்ளத் தவலமெய்தும்
பிணையென் றளக்கரை நீந்திக் கரையைப் பிடிப்பதற்குப்
புணையென் றதுவந்தத் திண்ண புரத்துப்பொன் னாலயமே. 81

---

76. தோற்று அல் கரிய - தோற்றற்கரிய
77. அனந்தன் - கடவுள், உய்யானனம் - சோலை
78. ஏ - அம்பு, புரம் - உடன்
79. தம்பரம் - ஆத்மநாயகன்
80. தம்பயன் - தமது பயன், கம்பு - சங்கு, அயம் - நீர், பம் - கிரகங்கள், பயனம் ஒன்றிய - பயப்படும்படி.
81. என்று - சூரியன், அன் சாரியை, பிணை - ஆசை, புணை - தெப்பம்.82. ஆலம் - நஞ்சு, மால் - பெருமை, ஏலம் - மயிர்ச்சாந்து.

ஆலஞ்சு வைத்த களத்தின னன்பர்க் கருள்பரமன்
மாலஞ்சு மாமுகன் றிண்ண புரத்தினன் மாமலையில்
ஏலஞ்சு மந்த குழலாண் மனதி லிரக்கமுற்றெக்
காலஞ்சு கந்தரு மோவ தறிந்தருள் காதலியே. 82

காத மளிக்கு மணநாறு சோலையிற் கட்பருகிக்
கீத மளிக்குரல் கேட்டனந் துஞ்சிக் கிடக்குபணை
யேத மளிக்குந்தென் றிண்ண புரமென வேத்தினாக்குப்
பாத மளிக்கு நினைமற வாதருள் பத்தியையே. 83

பத்தற்கு வந்ததொல் பாவந் துடைக்கும் பகவனுயர்
நத்தற்கு வந்தரி சாபந் தணித்தவ னைப்பெறுஞ்சீ
முத்தற்கு வந்தனை செய்தெவர் தம்மினு முந்துகின்ற
சித்தற்கு வந்ததென் றிண்ண புரத்துச் சிவபதியே. 84

சிவம்புரி யாதுல கத்துறை சீவர் தினங்கலங்க
அவம்புரி யாறி லறங்கடை யீரொன் றறைந்திடுவன்
துவம்புரி யாகிய திண்ண புரத்திற் றொடர்ந்துநல்ல
தவம்புரி யாதனி ரென்செய்கு வீரநமன் றண்டனைக்கே 85

தண்டனைத் தாள்கொ டுதைத்தருச் சித்துத் தழுவியமார்க்
கண்டனைத் தாழ விடாததிண் ணப்புரங் காண்வெளியன்
பண்டனைத தாழ்விற் சரந்தொடுத் தட்டவள் பாகமுறை
அண்டனைத் தாழ்பவர் செல்வதத் தேவ னமருகவே. 86

உலகம் பலவினு மேலான பாரினி லுற்பவித்துக்
கலகம் பலவிளைத் துத்திரி கின்றதிற் கண்டதென்னே
திலகம் பலவிரி திண்ண புரத்தினிற் சேர்ந்தவர்க்கா
மலகம் பலவி னியானைப் போற்றில் வரும்பயனே. 87

வருமருக் கன்றடந் தேரைத் தகைந்து வளர்ந்திடுவெண்
டருமருக் கண்மிகு திண்ண புரத்தினன் சாருமனல்
உருமருக் கன்றுயர் தீர்த்தழி யாம லுறவருளும்
பெருமருக் கன்பிலர் தம்மொடுங்கூடல் பெருமிழையே. 88

83. ஏதம் - துன்பம்
84. நத்தன் - விஸ்ணு
85. சிவம் - நன்மை, துவம்புரி - நிலைபெற்ற முதன்மை
87. திலகம் - மஞ்சாடி மரம்
88. தரு - தேவதாரம், மரு - மலை, அனல் உரும் அருக்கன் - இந்திரன்

பிழைக்கைக் குரிய வழியறி யாதுழல் பேதைநெஞ்சே
உழைக்கைக் குரிசினற் றிண்ண புரத்தின னொண்சிறகர்
முழைக்கைக் குரீஇக்கொரு மூன்றெழுத் தோதிய மூர்த்தியன்பர்
திழைக்கைக் குரியுங் கொடாதிருப் பார்கதி சேர்வரிதே. 89

சேரல ராவி யழிக்கு மழுவினன் செங்கமலத்
தேரல ராவியந் திண்ண புரத்த னிறும்பதனிற்
சாரல ராவிய வன்ப ரகன்றனர் தாமிங்கினி
வாரல ராவியற் பூங்குழ னின்சொல் மனத்துன்னியே. 90

உன்னற் கரிய மிடல்கெழு கஞ்ச னுரங்குறைத்தோன்
முன்னற் கரியவன் றிண்ண புரத்தமர் மூர்த்திபரன்
தென்னற் கரியவொர் மாமணி யீந்தவற் சேவித்திடிற்
பன்னற் கரியது போலுறுந் தீவினைப் பந்தமதே. 91

பந்தா டலைப்புரி மின்னார் கருங்குழற் பார்த்துமயின்
முந்தா டலைப்புரி திண்ண புரத்தின் முழுமுதலே
நந்தா டலைப்புரி சக்கர மேந்தியு நாடவரும்
நுந்தா டலைப்புரிந் தாள்வதெப் போது றுவன்றருளே 92

அருக்க னகையழ லத்திரி யென்ன வறைதருமுத்
திருக்க நகைத்துப் புரம்பொடித் தோய்சிறி யேற்கருள்வாய்
உருக்க நகைநிறப் பொன்னாட்டி லுள்ளவர் யாருமுற்றுப்
பெருக்க நகைத்தணை திண்ண புரத்தமர் பிஞ்ஞகனே. 93

பிஞ்சு மதியா வம்புனை சேகர பீடுகெழு
துஞ்சு மதியதென் றிண்ண புரத்துறை சுந்தரனே
அஞ்சு மதியு மழிந் துடலம்விழு மப்பொழுதென்
நெஞ்சு மதியய ராதுனை யெண்ண நிருமிப்பையே. 94

---

89. உழை - மான், முளை திளை என்பன எதுகை நோக்கி முழை திழை என நின்றன. திளைத்தல் - அனுபவித்தல், உரி - அரைப்படி.
90. ஏர் - அழகு, அலர் - மலர், ஆவி - குளம், சாரல் அராவிய - இருக்கின்ற, வாரலர் - வரமாட்டார்.
91. பன்னல் - பருத்தி
92. ஆடல் - விளையாட்டு, நடனம், போர்
93. திருக் - கண், உருகநகஜநிற - உருக்கநகைநிற, நகைத்தல் - களித்தல்.
94. துஞ்சுமதிய - நிலைபெற்ற மதிப்பையுடைய, மதி - புலன், புத்தி

நிருவிகற் பத்தின ருள்ளக லாத நிமலநித்தன்
பொருவிகற் பத்திரி யைந்தானை வென்ற புனிதனமர்
அருவிகற் பத்திய திண்ண புரத்தை யடைத்தவர்தீ
தொருவிகற் பத்தினும் நீங்காப்பே ரின்பத் துறுசிட்டரே. 95

சிட்டித் தலைசசெ யயனுந்தே டற்கருஞ் செம்மலண்டம்
முட்டித் தலையுயர் திண்ண புரத்தன் முதுரையிற்
கெட்டித் தலைவ வனல்கரி யாகக் கிளருமுற்பூண்
கட்டித் தலைவியைக் கொண்டணை வாய்கவி னூர்கலந்தே. 96

கலக்கந் தருமைம் புலனுமொடுங்கிக் கருத்தழிந்து
மலக்கந் தருமை யெழும்பும் பொழுதெதிர் வந்தருள்வாய்
இலக்கத் தருமையி றிண்ண புரத்தினி லென்றுமுறை
துலக்கந் தருமை யணிகண்ட னேயென் றுயர்கெடவே. 97

கெடித்தலை யுற்றவுட் பாவனை யற்றவர் கேண்மையினான்
கொடித்தலை யுற்ற வுபரிகை கூடங் குழமிமிகப்
படித்தலை யுற்றுயர் திண்ண புரத்துப் பரமனன்பர்
முடித்தலை யுற்றினி தாளுவர் பூமி முழுவதுமே. 98

முழுமுத லைச்சிறுத் தொண்டன் சமைத்துமுன் னாளளிக்கக்
குழுமுத லைக்கறி வேண்டி யருளுங் குழகன்செறுக்
கெழுமுத லைப்பெறு திண்ண புரத்தினிற் கிட்டியென்றுந்
தொழுமுத லைத்தால மீந்தோர்க் கரிய துணைப்பதமே. 99

பதமய மான வுடம்பினை நானெனும் பற்றமுந்திக்
கதமய மானம் விடாதலை கின்ற கருத்துவிட்டு
நிதமய மானவர் போற்று திண்ணப்புர நித்தனது
சிதமய மான துணர்ந்தவர் முத்திசெ னீர்மையே. 100


**திண்ணபுரவந்தாதி**

**முற்றிற்று.**


---

95. இகல் - வலிமை, நிருவிகற்பம் - விகற்பமின்மை, பத்திரி - அம்பு, கல் அருவிபற்றிய என இயையும், கற்பம் - பிரமன் வாழ்நாள், உறுதல் - அனுபவித்தல்.96. கரி - சாட்சி
97. ஐ - சிலேட்டும், இலக்கந்தருமையில் - எண்ணப்படுங்குற்றமில்லாத
100. பதமயம் - அன்னமயம், சுதமயம் - உக்கிரமயம் - நிதம் அயம் மானவர் - எப்பொழுதும் நல்வினையுடைய மனிதர், மான சிதமயம் - பெருமைபொருந்திய ஞானவடிவம்.

அரும்பதவிளக்கம்
முற்றிற்று.



ஆலய முன்பாக அமைந்துள்ள சித்தா அமிர்த வாவி என
அழைக்கப்படும் திருக்குளம்



திண்ணபுரப் பதிகம், திண்ணபுர ஊஞ்சல்
என்பவற்றின் ஆசிரியர்
த. நாகமுத்துப்புலவர்
(1857 - 1939 )

அநுபந்தம் - 2

## காரைநகர்த் திண்ணபுர சுந்தரேசர்

# திருப்பதிகம்

### விநாயக வணக்கம்

வெண்பா

செந்திருவாழ் காரைநகர்த் தேவசுந்த ரேசர்தம்மேற்
சந்ததமி ழிற்பதிகஞ் சாற்றவே - புந்திதருஞ்
சோதி விநாயகனார் தோன்றல் கயமுகனைக்
காதி விநாயகனார் காப்பு.

# பன்னிருசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்.

சுந்தர மமைந்தகணி யுமையம்மை பாகமுஞ்
சுதனுறையுநின்கவானுந்
தூயமுக தாமரையி னழகொழுகு கருணையுந்
தோமிலா நகை நிலாவுஞ்
சிந்துநீ ரார்சடா மகுடமும் வெண்பொடி
செறிந்தசெம் பவளவடிவுந்
திகழுசங் கொடுதொடு பூண்டவிரு கன்னமுந்
தேனி தழி மாலைமார்பும்
சந்தவுப வீதமு மான்மழுத் தீயைத்
தரித்தசெங் கரமலர்களும்
சரணாம் புயங்களுந் தனிவெள்ளை விடையின்மேற்
றமியனேன் காணவருவாய்
கந்தனைத் தந்தருளு காரணா பூரணா
கழனிவள நனிபொலிந்த
காரைநகர் திண்ணபுர வாசனே நேசனே
கதிசுந்த ரேசபதியே. 1

பூமேவு வேதனும் பொன்மேவு மார்பனும்
போற்றுமடி முடிகடெரியாப்
போதனே வேதனே நாதனே நீதனே
புகழ்மறையின் முடியின் மணியே
பாமேவு கவிஞருரை பாக்களைக் கேட்டுருகு
பரமகல்யாண குணனே
பாராதி யண்டங்கள் யாவையுந் தந்தவா
பற்றலர் புரஞ்செற்றவா
மாமேவு வடமேரு வில்லாய் வளைத்திட்ட
மாபரா பரவரதனே
மண்ணாதி யைம்பூத மானவடி வங்கொண்ட
மாதேவ யென்னையாள்வாய்
காமேவு கற்பகக் கையனே துய்யனே
கழனிவள நனிபொலிந்த
காரைநகர் திண்ணபுர வாசனே நேசனே
கதிசுந்த ரேசபதியே. 2

தற்பரஞ் சோதியே சாதிகுண மில்லாத
தலைவனே சாந்த மலையே
சதுர்வேத வாகம புராணங்க ளறியொணாச்
சச்சிதா னந்தசிவமே
அற்புதா னந்தவருள் பொழிகின்ற மேகமே
அறிவினுக் கறிவானவா
ஆதியே சோதியே யம்பலந் தன்னிலே
யரியநட மாற்று முதலே
சிற்பர வியோமசிந் தாமணிக் குவியலே
தேனே நெடுஞ்சலதியே
தெள்ளமுத மேசென்ம மாற்றுதற் கடியார்கள்
தேடியலை யருமருந்தே.
கற்பகச் சோலையே யென்றடிய னுன்றனைக்
கவிமாலை சூட்ட வருளாய்
காரைநகர் திண்ணபுர வாசனே நேசனே
கதிசுந்த ரேசபதியே. 3

பொல்லாத தீயரொடு கழகந் தனிற்சேர்ந்து
போதகலை யூட்டுபாவி
போந்தவா துலர் மிடியர் தங்களுக் கன்னநீர்
போற்றியீ யாதபாவி
இல்லாத சொல்லியே கயவரைக் கவிகளில்
எடுத்துப் புகழ்ந்தபாவி
யானெனு மகந்தைதா னெள்ளளவு மகலா
திருந்திட்ட கொடியபாவி
வல்லாள கண்டனாய்ப் படுவழக் குப்பேசி
வஞ்சித்த பெரியபாவி
வம்பர்க ளுடன்சேர்ந்து பஞ்சமா பாதகம்
வையத்தி யற்றுபாவி
கல்லாத பாவியேன் பொல்லாத குணநீக்கிக்
காத்திரட் சித்தல்வேண்டும்
காரைநகர் திண்ணபுர வாசனே நேசனே
கதிசுந்த ரேச பதியே 4

அருமையுட னேபெற்ற தாயும்பி தாவுநல்
லாசானு மிகவு மேன்மை
யானகுல தெய்வமும் பிறவிப் பெரும்பிணிக்
கருமருந்துஞ் சுற்றமும்
பெருமைமிகு குறைவற்ற செல்வமுந் துணைவியும்
பிரியமக ரரியநட்பும்
பேசரிய பரகதிகொ டுத்தருள்செய் வள்ளலும்
பிழையனைத் தும்பொறுக்குந்
தருமதுரை யானவனு நீயென்று வந்துநின்
சரணமே சரணமடைந்தேன்
தயவாக வேமன மிரங்கிநிர் மலமுத்தி
தந்தெனையு மடிமைகொள்வாய்
கருமைமயி லேறிவரு கந்தனைத் தந்தவா
கற்றவர் விழுங்குகனியே
காரைநகர் திண்ணபுர வாசனே நேசனே
கதிசுந்த ரேசபதியே. 5

வஞ்சியர்க ளிளமதி முகத்திலே யவர்கண்
மருட்டிலே மைப்பொட்டில்
மானொத்த விழியிலே தேனொத்த மொழியிலே
வண்டனைய கார்குழலிலே
கொஞ்சுகிளி போற்பயிலு மிங்கிதந் தன்னிலே
குஞ்சிரிப்பின் நகையிலே
கொப்புச் சிமிக்கிபொன் னோலையணி காதிலே
கோத்தமுத் தணிமார்பிலே
சஞ்சீவி மலையைநிகர் முலையிலே இடையிலே
சர்ப்பபட தடமடுவிலே
சங்கவளை கொங்கைக் குலுக்கிலெளி யேன்மனஞ்
சாராம லருள்புரிகுவாய்
கஞ்சனுயி ரைக்கொன்ற மாயவன் மைத்துனா
கருணைநிதி யெனையாளவா
காரைநகர் திண்ணபுர வாசனே நேசனே
கதிசுந்த ரேசபதியே. 6

அரிதான மானிடப் பிறவியைப் பெற்றுமென்
னறியாமை நீங்கவில்லை
அன்பென்று சொல்லவும் கேட்டதிலை யானெனு
மகந்தைசற் றகல்வதில்லை
பெரிதான வெஞ்சின மடங்கவிலை யைம்புலப்
பிழைவழி யொதுங்கவில்லை
பேராசை தீரவிலை நல்லோ ரிணக்கமென்
பிறவியிற் கேட்டதில்லை
பரிதாவல் போலெங்க ணுந்தாவு பாழ்மனப்
பதைபதைப் பகலவில்லை
பசுபாச பதிவினவி யெவ்வாறு நின்பதப்
பங்கயத் தடைவதம்மா
கரியமா றங்கையுமை யம்மையார் பாகனே
கருணாகரக் கடவுளே
காரைநகர் திண்ணபுர வாசனே நேசனே
கதிசுந்த ரேசபதியே. 7

திருநாவ லூரில்வரு சுந்தரர் முனஞ்சென்று
திருமணம் புரிபோதினிற்
சிறுவனீ நமதடிமை யென்றொரு பொய்யாவணஞ்
செங்கைமலர் கொண்டுகாட்டிப்
பெருநாவின் வல்லமறை யோர்களவை முன்புமெய்ப்
பித்தவரை வலிதினாண்டு
பித்தவென நந்தமைப் பாடுகென வருளியிரு
பேதையர்கள் காதல்பூட்டி
ஒருநா ளிராப்போது தூதுசென் றும்பரவை
யூடலையு மெளிதின்மாற்றி
உணவுநிதி நெல்லாதி யுந்தந்து முதலைவா
யுறமதலை வரநல்கியுங்
கருமாய் மலர்க்கழ லளித்தவா றெம்மையுங்
கடைக்கண்வைத் தருளல்வேண்டும்
காரைநகர் திண்ணபுர வாசனே நேசனே
கதிசுந்த ரேசபதியே. 8

வாதமுதன் முப்பிணியில் விளையுமெப் பிணியுநினை
மனதி னினைக்குமுன்னே
வந்தவழி தெரியாம லோடுமே பொல்லாத
வஞ்சனை வருத்தபில்லி
ஏதமுறு சூனியம் முதலான கர்மங்கள்
யாவையும் நீறாக்குமே
இருளனொடு முனிகறுப் படல்வீர மாடனு
மிடாகினியு மாகாளியும்
பூதவே தாளவிற லேமனுட னவனேவல்
புரிகின்ற காலபடரும்
பொய்யாத நின்பெயருரைத்திடி னடுங்கிவாய்
பொத்தியே யோடிவிடுவார்
காதலாய் நின்பெருமை யறிவதற் கெளியதோ
காமனைக் காய்ந்த நிமலா
காரைநகர் திண்ணபுர வாசனே நேசனே
கதிசுந்த ரேசபதியே. 9

மாயமாய் மாதாவ யிற்றிலுரு வாகிமிகு
மலமூத்தி ரத்துழன்று
மாநிலந் தன்னிலே சேயெனத் தோன்றுசிறு
மதலையாய்த் தானிருந்து
காயம்வ ளுத்தபின் நானென்ற கங்கொண்ட
காளையாகத் திரிந்து
காமாதி நோயால் மெலிந்துடல் வருந்தியொரு
கன்னியைம ணந்துபின்னும்
தேயமதி லெங்கெங்கு மோடியெந் நாளுநிதி
தேடிப்பு தைத்துவைத்து
தேகியென் போர்தமக் கீயாமல்வீணிலே
தினமுங்க ளிக்குமிந்த
காயனெவ் வாறுனக் காளவெ னருளுவாய்
கங்கைபிறை யணிபிரானே
காரைநகர் திண்ணபுர வாசனே நேசனே
கதிசுந்த ரேசபதியே. 10

பதிகம் முற்றிற்று.

உ

சிவமயம்

## காரைநகர்த் திண்ணபுரத்தில்
## எழுந்தருளியிருக்கும்
# சுந்தரேசர் திருவூஞ்சல்

விநாயகர் வணக்கம்

**எண்சீர் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்**

பூமலியுஞ் சோலைவளம் பொலிந்து சூழும்
புகழ்மலியுங் காரைதிண்ண புரத்தில் வாழும்
தேமிலியுஞ் சிவசுந்த ரேசர் தம்மேற்
திசைமலியுந் தமிழூஞ்சல் சிறக்கப் பாட
மாமலியும் மதியிதழி மத்தை சூடும்
மருமலியுஞ் சடைப்பரமன் மகிழ்வி னீன்ற
காமலியுங் கரடதட களிறாம் பெம்மான்
கதிமலியு மடிக்கமலங் காப்ப தாமே.

**நூல்**

ஏர்திகழும் மறை நான்கும் கம்ப மாக
இசைதிகழு மாகமங்கள் விட்ட மாக
சீர்திகழு மெண்ணெண்ணூல் கயிறதாகத்
திருத்திகழு மாறங்கம் பலகை யாகப்
பேர்திகழும் பிரணவமே பீடமாகப்
பிணைதிகழு மழகொழுகு மூஞ்சன் மீது
தேர்திகழுங் காரை திண்ண புரத்தின் மேவுஞ்
செயசுந்தர ரேசரே யாடி ரூஞ்சல். 1

காவிருக்கு மிந்திரன்வெண் கவிகை தாங்கக்
கலியிருக்கு முரசுமுத லியங்க ளேங்க
மாவிருக்கு மளகேச னடைப்பை யோங்க
மறமிருக்கு மறலிகையிற் களாசி தேங்க

தாவிருக்கு வாயு கையிற் கவரி தூங்கத்
தகையிருக்கு நந்தியக மகிழ்வின் வீங்கத்
தூவிருக்குங் காரைதிண்ண புரத்தில் வாழுந்
துரைசுந்த ரேசரே யாடீ ரூஞ்சல். 2

மதிமலியுங் கந்தருவர் சுரதி கூட
மகிழ்மருவுந் தும்பருநா ரதர்பண் பாட
துதிமலியுங் கமலவயன் தாளம் போடத்
துணைமலியு மரம்பையர்க ணடன மாட
விதிமலியும் மறையினொலி விரவி நீட
வியன்மலியும் மன்பரிடர் வெருவியோட
நதிமலியுங் காரைதிண்ண புரத்தில் வாழும்
நாதசுந்த ரேசரே யாடீ ரூஞ்சல். 3

அணியமையு மண்டர்பொழி யலர்கள் வீழ
அளியமையுங் கணநாதர் அருகு சூழப்
பணியமையு மடியர்மல வருளைப் போழப்
பதமமையுந் திருமாது பரவி வாழ
மணியமையு மான்முதலோர் மகிழ்ந்து தாழ
மதிமலியும்பரிசனங்கள் மதர்ப்பி னாழக்
கணியமையுங் காரைதிண்ண புரத்தில் வாழுங்
கதிசுந்த ரேசரே யாடீ ரூஞ்சல். 4

உருமலரு மடியருள்ளத் துவகை கூர
உரமலருங் கரமலர்கண் முடிமேற் சேரக்
கருமலரு மானந்தக் கண்ணீர் வாரக்
கதிமலரும் பெருஞானங் கசிந்துள்ளூரத்
திருமலியுஞ் சைவநெறி யெவருந் தேரத்
திறமலியுஞ் சௌந்தரநா யகியார் சேரத்
தெருமலியுங் காரைதிண்ண புரத்தில் வாழுஞ்
சிவசுந்த ரேசரே யாடீ ரூஞ்சல். 5

திங்கள்சடை தரித்தவரே யாடி ரூஞ்சல்
திரிபுரத்தை யெரித்தவரே யாடீரூஞ்சல்
அங்கையிற்றீ பரித்தவரே யாடீ ரூஞ்சல்
ஆனையைமுன் னுரித்தவரே யாடீ ரூஞ்சல்
பங்கைமங்கைக் களித்தவரே யாடீ ரூஞ்சல்
பரவையிடஞ் சென்றவரே யாடீ ரூஞ்சல்
சங்கைவயற் காரைதிண்ண புரத்தில் வாழும்
தலைவசுந்த ரேசரே யாடீ ரூஞ்சல். 6

வார்செறியுஞ் சடாடவியு மதியு மாட
வளஞ் செறியுங் காற்சிலம்பு சதங்கை யாட
கூர்செறியு மழுமான்கை குலவியாடக்
குணிசெறிபும் பூதமொடு புலித்தோ லாட
நேர்செறியு மணியவரக் கச்சு மாட
நிதிசெறியுந் திருக்குழைவில் வீசி யாட
வார்செறியுங் காரரைதிண்ண புரத்தில் வாழும்
வரதசுந்த ரேசரே யாடீ ரூஞ்சல். 7

பாலிருக்கு முனிவரர்க ளாசி கூறப்
பலமிருக்கு மறையவரா சாரம் வீற
வேலிருக்குங் கரவரசர் நீதி தேற
விலையிருக்கு வணிகர்பெரு நிதியி லேறச்
சேலிருக்கு வயலுழவர் வளத்தின் மீறத்
திறமிருக்குங் களபசுகந் தாதி நாறக்
காலிருக்குங் காரைதிண்ண புரத்தில் வாழும்
கர்த்தசுந்த ரேசரே யாடீ ரூஞ்சல். 8

மண்மணியே விண்மணியே யாடீ ரூஞ்சல்
மனோன்மணியே மறைமணியே யாடீ ரூஞ்சல்
எண்மணியே யிசைமணியே யாடீ ரூஞ்சல்
இறைமணியே நவமணியே யாடீ ரூஞ்சல்
கண்மணியே கருமணியே யாடீ ரூஞ்சல்

கலைமணியே வரைமணியே யாடீ ரூஞ்சல்
பெண்மணிசேர் பாகதிண்ண புரத்தில் வாழும்
பிரபுசுந்த ரேசரே யாடீ ரூஞ்சல். 9

காவிருக்கும் மந்தசிந்துங் கனித்தேன் றாவக்
கணியிருக்கு மடைபடைத்த முத்த மேவ
பூவிருக்குங் கந்தியின்மேல் வாளை தாவப்
புகழிருக்கும் பூங்காவிற் குயில்கள் கூவ
ஏவிருக்குங் கண்மடவார் மைந்தர் பாவ
எழிலிருக்கு மின்னபிற வளங்கள் நீவ
மாவிருக்குங் காரைதிண்ண புரத்தில் மேவும்
வரதசுந்த ரேசரே யாடீ ரூஞ்சல். 10

## வாழி

ஆவாழ்க மறையாக மங்கள் வாழ்க
அறம்வாழ்க அரிவையர் தம் கற்பு வாழ்க
பாவாழ்க மறையவர்க டாமும் வாழ்க
பசுவாழ்க மழைசைவம் பாரும் வாழ்க
சீவாழ்க வரசர்செங்கோல் செழித்து வாழ்க
திருவூஞ்சல் பாவலவர் திகழ்ந்து வாழ்க
தேவாதி தேவரே என்றும் வாழ்க
சிவசுந்த ரேசரே வாழ்க வாழ்க.

திருவூஞ்சல் முற்றிற்று

## எச்சரீக்கை

1. திருவார்திண்ண புரமேவிய தேவா எச்சரீக்கை
திரமார்சூலப் படையேந்திய செல்வா எச்சரீக்கை.

2. மருவார்கொன்றை மதிசூடிய மகிபா எச்சரீக்கை
மறையார்முடி தனின்மீதொளிர் மணியே எச்சரீக்கை.

3. கருவாரயன் மால்கண்டிடாக் கர்த்தா எச்சரீக்கை
கதியாரடி யவர்போற்றுமுக் கனியே எச்சரீக்கை.

4. தருவார்விண்ணி லுறைவானவர் தலைவா எச்சரீக்கை
தலையார்சவுந் தரநாயகி தரனே எச்சரீக்கை.

### பராக்கு

1 கதிக்குரிய திண்ணபுரக் கருத்தா பராக்கு
காமனையு மேமனையுங் கடிந்தாய் பராக்கு.

2. துதிக்குமென்ப ரகத்துறைஞ் சுகணா பராக்கு
சூலமழ லேந்துகரத் துணைவா பராக்கு.

3. கொதிக்குவிட முண்டருளெண் குணத்தாய் பராக்கு
கோலமனந் தேடரிய குரவா பராக்கு.

4. நிதிக்குவையி னுமரிய நிமலா பராக்கு
நேரில்சுந்த ரேசரேனும் நேசா பராக்கு.

### மங்களம்

இராகம் : சுருட்டி தாளம் : ஆதி

பல்லவி


மங்களம் மங்களம் மங்களம் -- நித்யசுப
மங்களம் மங்களம் மங்களம்.

1. திண்ணபுர வாசருக்கு தேடுமன்பர் நேசருக்கு
எண்ணிய தேசருக்கும் ஏற்றவினை நாசருக்கும்
மங்.


2. செங்கமலப் பாதருக்கு தேடுமறை நாதருக்கும்
அங்கைமழு வாளருக்கும் ஆதிநடு வீறிலர்க்கும்
மங்.

3. சிந்தையுறை சீலருக்குஞ் செக்கர்நிலக் கோலருக்கும்
தந்தைசுந்த ரேசருக்கும் சௌந்தர நாயகிக்கும்
மங்.

4. நாகமுத்துப் பாவலர்க்கும் நாடடியார் காவலர்க்கும்
போகமுத்தர் போற்றி செய்யும் புண்ணிய வடிவினர்க்கும்
மங்களம்.



மூன்றாம் வீதியில் உள்ள தினகரன் பிட்டி வைரவர் கோவில்



திண்ணபுர வெண்பா ஆசிரியர்
ச. பஞ்சாக்ஷரக்குருக்கள்
(1889 - 1953)

அனுபந்தம் 3

# திண்ணபுர வெண்பா

**காப்பு**

சீர்முந்து காரைநகர்த் திண்ணபுர வெண்பா
தேர்சுந்த ரேசன்மேற் செப்பவே – ஏசெய்
அகசா நநபதுமத் தர்க்கனாய் மூத்த
அகசா நநனே யரண்.

**நூல்**

நீரணிந்த சோலை நிலவு கரவீரச்
சீரணிந்த வாலயமார் திண்ணபுரம்–வாரணிந்த
கொங்கையுமை பாகன் குரைகழலைப் போற்றிசெயச்
சங்கரனோர் தங்குந் தலம். 1.

தூவியுடை யன்னத் துணைபுரியுங் கேளியார்
வாவிவள வல்லூரத் திண்ணபுரம் – மேவியவெங்
காம மயக்கொழியக் கண்ணீர் சொரிந்தழுவார்க்
கேமமதா யுள்ளோ னிருப்பு. 2.

நீடும் புலந்த நினைந்தழுவார் கண்ணீரே
கூடுங் குதூகலத் திண்ணபுரம் – வ டுயிர்கள்
சாரப் பிணிமூப்புச் சாக்கா டதிட்டாந
சாரப் படிதருவோன் சார்வு. 3.

---

காப்பு : அகசா– பார்வதி. ஆநநபதுமம் – முகதாமரை அர்க்கன் – சூரியன், அ – சுட்டு

1. கரவீரம் – (1) நீர்; ஈரஞ்செய்வது (ஈரகரமென்றபடி). (2) சோலை: அலரியுள்ளது, (3) நிலவு : மறைவை நீக்குவது (மும்மொழிச் சிலேடை).

2. தூவி – இறகு , கேளி – விளையாட்டு, வல்லூரம் – வயல், ஏமம் – காவல்

3. புல் – பனை, கள் - நீர்....கண்ணீர். (இருமொழிச் சிலேடை), குதூகலம் - மகிழ்ச்சி, அதிட்டாநம் - நிலைக்களம், படி - உருவம்

வாளையினந் தெங்கின் வளர்பாளை மீப்பாயச்
சூளையெனக் காய்சொரியுந் திண்ணபுரம் – வேளை
நுதற்
கண்காட்டி யட்டோன் கலுழ்வீணை ராவணன்
பண்கேட் டருள்வோன் பதி. 4.

இப்பியி னன்முத்து மேயும் பணைமுத்தும்
ஒப்பி னிலவூக்குந் திண்ணபுரம் – திப்பிய
மோநமிகு ஞாநம் முநிவோர் தெளியவா
தாநநிலை தந்தோன் றளி. 5.

மூங்கிலிடை தோன்லான் மூலத்தா லேறுறலாற்
றீங்கில் சிவனாகுந் திண்ணபுரம் – பாங்ககன்ற
சூரனிரு பல்லுடைத்துச் சொன்மாது மூக்கரிந்த
சூரனின னோக்கன் றொடர்பு. 6.

அந்த மருதடியா வாசுரமு நீக்கலாற்
சிந்துருவ மாமுநிநேர் திண்ணபுரம் – வந்து
சிவனே யெனவணங்கச் சீரெவையுந் தந்தெம்
பவநோய் துடைப்போன் பதம். 7.

பூக்குமா போதிமகிழ் புங்கிருப்பை வன்னியரி
தேக்கிலவு புன்னைவளர் திண்ணபுரம் – காக்கும்
குலமுதற் பாண்டியன் கூடலலங் காரண்
சலமுறுகங் காதரன்வா சம். 8

---

4. சூள் – சபதம் (ஐ சாரியை), வேள் – மன்மதன்,
5. பணை – மூங்கில், திப்பியம் – மேலானது, ஆதாநம் – செய்தல்.
6. சிவனுக்குச் சிலேடை. மூலம் – கிழங்கு,ஆதி. ஏறு – எருது, சூரன் – சூரியன், வீரன். இனன் – சூரியன்.
7. மரு – (விந்த) மலை. ஆசுரம் - அசுரர் தீமை. சிந்து - குறள். பவம் பிறப்பு (அகஸ்தியருக்குச் சிலேடை) மருதடி - அயற்குறிச்சிப் பெயர்த் தொனி.
8. அரி மூங்கில். கூடல் -மதுரை, பாண்டியகுல முதல்வராகத் தோன்றிய சோமசுந்தர பாண்டியரென்க.

காவலரும் புட்குலமுங் காள முகிலூரும்
பூவலருந் திண்ணபுரமதுவே -- தேவ
கணங்காக்க வேண்டிக் கறுத்தருளுங் கண்டன்
வணங்கார்க் கிணங்காதான் வைப்பு. 9.

ஆகமநால் வேதமுண ரந்தணர்க ளாதியோர்
ஆகமநத் திண்ணபுர மாராயின் -- சாகமுனம்
காணமய னீக்குங் கநகசபை யாலுவோன்
காணமய னாத்தன் களம். 10.

தும்பிமுக மாகோடை தோயங் குசமேவும்
அம்பிகைசே யைங்கரனோ் திண்ணபுரம் - வம்பகலும்
சூலா யுதனமலன் சொற்கோ புகழ்பெருமான்
வேலாயு தன்றந்தை வீடு. 11.

அம்பலவன் சேய்முருக னாக்கஞ்செய் தோரணியார்
செம்புளின நந்தூருந் திண்ணபுரம் -- இம்பரிடை
நம்பியா ரூரனைமுன் னாடித் தடுத்தாண்ட
தம்பிரா னென்றுமமர் சார்பு. 12.

ஆத்திகரு மாநிரையு மாதுலரு மாயதநச்
சேத்திரமாஞ் சேதாரத் திண்ணபுரம் -- பார்த்தீபனாய்
பாணிக் கிரகணம் பாலித்தோன் பத்திரனின்
பாணிக் கிரங்கரன் பற்று. 13.

---

9. கா....அலர். பூ - பூமி(இருமொழிச் சிலேடை) கணம் - கூட்டம்–
10. ஆகமநம் வருதல். ஆலுதல் ஆடுதல், காண தரிசிக்க, காணம் - பெரன்
11. தோயம் -- குசம் = தோய்...அங்குசம். ஆகு பெருச்சாளி, எலி. ஓடை – நெற்றிப்பட்டம், வாவி. தோயம் - நீர். குசம் – தருப்பை. விநாயகருக்குச் சிலேடை..
12. தோரணி வரலாறு. புளினம் , மணற்குன்று.
13. ஆயதநம் (1) ஆராயும் பொருள். (2) இடம் (3) ஆகியதநம். சேதாரம் மாமரம் (மும்மொழிச் சிலேடை) பாணி - கை, பாட்டு

சாருஞ் செபதவத்தாற் சாப வநுக்கிரகம்
சேருந் திருக்கூட்டத் திண்ணபுரம் -- காருணியன்
திண்ணன் றிறத்தைச் சிவகோ சரிக்குணர்த்தும்
அண்ண லமரா லயம். 14.

பாதம் பணிவோரும் பாக மடைவோரும்
நாதம் படுநடைகொ டிண்ணபுரம் -- வேதந்தர்
மங்கலைம னோன்மணி மதாங்கி மீனாட்சி
அங்கனை ணாள னகம். 15.

வள்ளிகய மாதர் மயில்கோழி வாகைவேல்
கொள்ளுங் குமரனிகர் திண்ணபுரம் -- உள்ளநிறை
சாந்தனக நீறு சகச மயமானோன்
சாந்தனகண் டன்சேர் தலம். 16

வாவி மணற்காடு மாலூரம் பொன்னாலை
தீவிகையின் வீரகத் திண்ணபுரம் -- தேவியிடச்
சந்திர சேகரன் றாணு சதாசிவன்
சுந்தர னெம்மான் துறை. 17.

காவலரு நாரியருங் கற்புநெறி நீங்காத
நாவலரு நாடியுறுந் திண்ணபுரம் -- பாவி
பரிபவம் போக்கும் பராபர னாம்பல்
உரிபடிவம் போர்த்தோ னுறைவு. 18.

ஆளிகுடங் கன்னிதுலா மாமிதுனம் விற்கொறிமான்
தேளலவன் மீன்ராசித் திண்ணபுரம்---- கோளுணரும்
மார்க்ககதி யற்றோர் மகிதலத் தெய்துசன்
மார்க்ககதி யுற்றோன் மனை. 19.

---

14. சாப அநுக்கிரகம் –சாபமிடுதலும், சாபவிமோசனம் செய்தலும் ஆகிய திறமை

15. பாகம் - பக்குவம், நாதம் - ஒலி, சிவதத்துவம் (இரு மொழிச்சிலேடை).

16. (முருகனுக்கு சிலேடை) சாந்து - சந்தநம், சாந்தன் - பொறுமையாளன், சகசம் - இயல்பு, மயம் - வடிவம்.

17. மாலூரம் - வில்வம், ஆலை - கரும்பு, வீரகம் - அலரி. (மணற்காடு, பொன்னாலை என்பன அயற்கிராமங் குறிக்கும் தொனிப் பொருள்)

18. காவலர் - கணவர். கற்பு - விதி, மகளிர் நிறை, கல்வி. (இடநிலைத் தீபகம்.) பாவி - வரற்பாலது, பரிபவம் - இகழ்ச்சி. மும்மொழிச் சிலேடை)

19. கோள் - கொள்கை, சன்மார்க்கம் - சித்தாந்தம், (பன்னிரண்டு இராசிப் பெயர்த்தொனி.)

ஆவுங்கோ பாலகரு மாபீநங் கூடவரி
தாவுஞ் சரக்கொன்றைத் திண்ணபுரம் — ஆவதியின்
ஆபாத சூட வலங்கார வாகிருதன்
காபாலி யீசன் களம். 20.

குமரிவரை மான்காமக் கோட்டிகௌ ரிப்பேர்
அமரிநிகர் திண்ணபுர மாலி --- அமரக்
கெழுமுகில் கண்டுமகிழ் கேகயநே ருள்ளம்
சுழுமுனையி லீவோன் சுவடு. 21.

கொண்டி பெருக்கங் குலமகவு பெற்றாருந்
தொண்டிசையுந் தூலகுறித் திண்ணபுரம் -- சண்டன்
கருத்தி னருச்சிக்கக் காவலனாய் வெள்ளை
எருத்தி னணைந்தோ னிருப்பு. 22.

செந்தமிழுஞ் சூரியனுஞ் சேர விருளோட்டுஞ்
செந்தமித தோற்றமார் திண்ணபுரம் -- நந்தமுறும்
தன்னிலய மெல்லோருஞ் சாரத் தருஞ்சத்தி
தன்னிலய முள்ளோன் தலம். 23.

கண்டிகையுஞ் சந்திரனுங் கந்தரமேற் காணுஞ்
சண்டியணி தாழைமலி திண்ணபுரம் -- பண்டிசையும்
ஈட்டவினைக் கீடிந்தா வென்றருளு மீச்சுரன்
ஒட்டவினைக் கீதையா னூர். 24.

பேயுடனோய் நீக்கம் பெருவாரி காண்போர்கள்
தீயுடனோன் றாள்பணியுந் திண்ணபுரம் -- பாயுடை
கொண்டவரைப் புத்தரைக் கோப்பழித்த சித்தாந்தங்
கொண்டபொரு ணின்ற குறி. 25.

---

20. ஆபீநம் - பசுமடி, இடையர் வீதி,(இருமொழிச் சிலேடை.) ஆபாதசூடம் - பாத முதல் முடிவரை, ஆகிருதி - வடிவம்.

21. குமரி - அழிவின்மை, கற்றாளை. வரை - மலை, மூங்கில், கௌரி - அம்மை, துளசி.(தேவிக்குச் சிலேடை) ஆலி - நீர்த்துளி, கேகயம் - மயில்.

22. கொண்டி - உணவு, பெருக்கம் - செல்வம், தூலகுறி - கோபுரம். சண்டன் - சண்டேசுரன்.

23. இருள் - அகவிருள், புறவிருள். (இருமொழிச் சிலேடை). செந்து - பிராணி. அமிதம் - அளவின்மை.

24. கண்டிகை - - உருத்திராக்கம், கந்தரம் - - கழுத்து. முகில் - - (இருமொழிச் சிலேடை), கீதை - - உபதேசக்கதை. ஓட்டம் - -உதடு.

25. வாரி - - வருவாய், தீ - -அறிவு, கோப்பளித்தல் -சீரழித்தல்.

பூமனையால் வாணியாற் புள்ளூறலாற் சிட்டியால்
பூமனையே போலாருந் திண்ணபுரம் -- நாமநதி
எத்தனைசென் றாடுகினு மெண்ணார்க் கசையாத
பித்தனருள் பேணு மிடம். 26.

பாவலரும் பாலகரும் பங்கயமும் பாலனமார்
சேவமர் காஞ்சனத் திண்ணபுரம் -- ஆவ!
கிருபா சமுத்திரங் கேண்மையகங் கொண்டு
குருவாகு முன்னோன் குலம். 27.

பொருளல்ல வற்றைப் பொருளென்று கொண்டே
தெருள்கெடலி றிண்ணபுரந் தேரின் -- அருளாளன்
தந்தைதா யில்லோன் றனியனடி சேர்ந்தார்
தொந்தமலம் போக்குந் துறை. 28.

காரிகையுங் காரளியுங் கண்ணாடி யுட்கொள்ளக்
காரிகையுங் கற்போரின் றிண்ணபுரம் -- ஆரியைதன்
காந்தன் கரிக்குருவி காதரமு னீக்குமே
காந்தன் கரிசில் களம். 29.

தூண்டுசுட ரையன் றொழுகேத் திரபாலன்
ஆண்டிவரு கேணியமர் திண்ணபுரம் -- தாண்டவன்
வெம்பிறவி வேலையிடை வீழ்வோரை மீயேற்றும்
அம்பியருள் பெம்மா னரங்கு. 30.

ஆர்சித் திரமதுர மாசுவித் தாரமெல்லாந்
தேர்சித்தி முத்தமிழ்த் திண்ணபுரம் -- ஆர்வ
மனங்கனி வாசகம் மாசிறே வார
மனங்கனி வாக்கி மனை. 31.

---

26. பூமனை - பூவிருக்கை, பொலிவான மனை ; வாணி - சரஸ்வதி, வார்த்தை ; சிட்டி - படைத்தல்(பிரமனுக்குச் சிலேடை).

27. பாலனம் - (1) காத்தல், (2) பாற்சோறு, (3) வெள்ளையன்னம் (மும்மொழிச்சிலேடை). காஞ்சனம் - சம்பகமரம். ஆவ - அதிசயக் குறிப்பு.

28. தெருள் - தெளிவு, தொந்தம் - தொடர்பு.

29. காரிகை - அழகு, கட்டளைக் கலித்துறை. கண்ணாடி கண் + நாடி (இருமொழிச் சிலேடை). காதரம் - அச்சம். கரிசு - குற்றம்

30. ஆண்டிவரு கேணி - ஆண்டிகேணி (இடப்பெயர்). மீ - கரை. அம்பி - தோணி.

31. தமிழுக்குச் சிலேடை.. மன் - தலைவன். கனி - உருகுகின்ற செறிவு (மன் + அம் + கனி). வாக்கி -உபதேச வாக்குடையவன்.

ஊழின் கணிதரு முய்தியரு மெண்ணலார்
காழில் கணவமுறு திண்ணபுரம் – பூழியார்-
பூம்பாவை தோன்றப் பொழிபாடற் பிள்ளையழத்
தீம்பா லருத்தினோன் சேர்வு. 32.

கன்னியரும் வெண்பாவுங் காசோடு நாண்மலரும்
பின்னியற்பி றப்புமார் திண்ணபுரம் -- தன்னிகரில்
சைவத் திருநெறியின் சாயுச்ய தாதனென்
கைவல் லியனுறைவு காண். 33.

சங்கரனார் கண்டமுஞ் சங்கியையில் புட்குலமுஞ்
சங்கரமார் சங்கற்பத் திண்ணபுரம் -- சங்கவொலி
மேலுறமுங் கண்டைகொடு வேண்டி யருச்சிப்போர்
மேலுறமுங் கன்றருள்வோன் வீடு. 34.

சும்மா விருக்கிற் சுகமில்லை யென்றுன்னிச்
செம்மாந் திருப்போரின் றிண்ணபுரம் -- அம்மான்
மழுவேந்தி மாய்விலான் மாலயனுங் காணான்
குழுவேந்து கொட்டி குடி. 35.

சிவஞாநம் பூத்தலினாற் சேர்மலநீக் கத்தாற்
சிவபூதி நேர்திண் ணபுரம் -- சிவகதியாய்
ஈன்றாளு மாயெனக் கெந்தையுமா யுற்றாராய்த்
தோன்றாத் துணையான் றுறை. 36.

உள்ள மயற்புலனு மோங்கு மழைநீரும்
தெள்ளவயல் பாயச்செய் திண்ணபுரம் – வெள்ளிமலை
வாசனையை வாமன் வரதனடி யேன்பிறவி
வாசனையை வாங்குவோன் வைப்பு. 37.

---

32. ஊழின் கணிதர் - சோதிடர்(இருமொழிச் சிலேடை : காழ் - வைரம். கணவம் - அரசமரம்.
33. கன்னிக்கும் வெண்பாவுக்குஞ் சிலேடை. கைவல்யம் - மூத்தி.
34. சங்கியை - எண், சங்கரம் - நஞ்சு, கலப்பு, சங்கற்பம் - நியமம் (இருமொழிச் சிலேடை), சங்கம் - சங்கு, மேல் - மிகுதிஇடம ; கண்டை - மணி, உறமுதல் - மாறுபடுதல், உறழ் - செறிவு (உறழ் +உங்கு +அன்று)
35. உன்னி - தியானஞ்செய்து. செம்மாந்திருத்தல் - வீற்றிருத்தல், கொட்டி - கொட்டிக்கூத்தையுடையவன், குழுவேந்து - கணநாதன்.
36. வீபூதிக்குச் சிலேடை. மலம் - பசுச்சாணி, பாவம்.
37. தெள்ளவயல் - தெள்ள - அயல், (இருமொழிச் சிலேடை) ; ஐயை - உமை

கண்ணே கருமணியே காருண்ய சாகரமே
எண்ணேம் பிறவென்போர் திண்ணபுரம் -- மண்ணீர்
வளிதீ வெளியாவி மாமதியெல் லானோன்
தளிதோ றுதிப்போன் றலம். 38.

சோதிமுகங் காணலாற் றூயகதி கூட்டலால்
ஆதியரு ளக்கநேர் திண்ணபுரம் -- வேதிசெயும்
வன்னமுலை மாதர் வலைப்பட்டு மாழ்கவெற்
கன்னமய கோசமிடா னார்வு. 39.

சேதா விலமாய் சிரறாளை வீபுளென்றே
சேதா விலமாருந் திண்ணபுரம் -- நேதா
புலையகல விண்ணாளி பூசித்த செல்வன்
புலையகல விண்னோன் புரம். 40.

தஞ்சக் கதிதரலாற் சாற்றரிய மந்திரத்தால்
அஞ்சக் கரமன்ன திண்ணபுரம் நெஞ்சதனிற்
சிந்தனைசெய் பக்குவியைச் சேர்ந்துசுமை தாங்கிப்
பந்தனைய றுப்போன் பதி. 41.

சாதகமும் வண்டுந் தருவனமும் பண்டிதரும்
போதகமேய் பொய்கையுமார் திண்ணபுரம்– பேதைமிகப்
பெற்றவரா கத்தயாப் பேசிச்செ றத்தையே
நற்றவரா கத்த னகர். 42.

கண்ணிருண்ட பல்லுதிர்ந்து காயநெகி ழாமுன்
எண்ணிநம் வென்றடைவோர் திண்ணபுரம் -புண்ணியற்குத்
தேசிகக்கும் பாசந் தெறுமாறு வந்துருளுந்
தேசிகக் கைலையான் சேர்வு. 43

---

38. வளி - காற்று, தளி - கோயில், அட்டமூர்த்தியென்பது.
39. உத்திராட்சத்துக்குச் சிலேடை, அக்கம் - உருத்திராக்கம், வேதிசெய்தல் - வேறுபடுத்தல், கோசம் - கூட்டம்.
40. சேது - நீர்வரம்பு, ஆவிலம் - கலங்கநீர், சிரல் - மீன்குத்திப்பறவை, வீ - பூ,சே - எருது, புலி - இழிவு (புல் - ஐ - அகலன் ஐ - தலைவன்).
41. மந்திரம் - மந்திரம், கோயில், பஞ்சாக்ஷரத்துக்குச் சிலேடை, பந்தனை - கட்டு.
42. போதகம் - (1) காலம் (2) பூவிடம் 3 யானை 4.போதித்தல், 5 பூவையுடையது (ஐம்மொழிச் சிலேடை) அராகம் - விருப்பம் கடவுண்மாட்டு மானிடப்பெண்டிர் நயந்த பக்கம், கிள்ளை விடு தூது. அயா - வருத்தம்.
43. தேசு ...இகத்தல் - ஒளி நீங்குதல், தேசிகன் - குரு.

காம்போதி காயகருங் கானுந் தெரிவையருங்
காம்போதி காட்டிடுந் திண்ணபுரம் — ஓம்பிக்
கழுவாய்செ யென்பார் கழங்கறுப்போ னெள்ள
எழுவாயென் புன்கவியா னில். 44

அரத்தை வலம்புரி யாத்தி கடுக்கை
சிரத்தையலர் பூந்தோட்டத் திண்ண — புரத்தான்
மிகையாற்றி னின்றெல்லா மித்தையெனும் வீண்கன்
மிகையாற்றி னாள்வோன் விசி. 45

காய்கதிரு மாத்தேருங் காலிலியும் பூவிரிவும்
ஆய்கதி ரோனனைய திண்ணபுரம் - தூய
மழுவாகை சூலமான் வாங்குதுடி வன்னி
தழுவாக நீறாடி சார்வு. 46

காணும் வெறுங்கூடு காவலராய் வாழாதே
தாணுபணி தாங்குவோர் திண்ணபுரம் - காணிகொளும்
ஆரூர் சிதம்பர மாலவாய் காசியெனும்
ஆரூர் சிவபெருமா னார்வு. 47

யானெ னகம்பாடற் றாருந யந்தடையத்
தேனெனவே தித்திக்குந் திண்ணபுரம் - பண்ணோங்குஞ்
சாமநிக மப்பிரியன் சச்சிதா நந்தவரன்
சாமநிகழ் கூத்தன் றலம். 48

விண்ணோங்கு தேரும் விலோதநமும் வீதிகொளக்
கண்ணோங்கு காருணிகன் றிண்ணபுரம் — பண்ணோங்குஞ்
சாமநிக மப்பிரியன் சச்சிதா நந்தவரன்
சாமநிகழ் கூத்தன் றலம். 49

---

44. காயகர் - இசைபாடுவோர், காம்பு - மூங்கில், ஓதி - கல்வி, மலை, ஓந்தி, வேய்ங்குழலூதுவோர் காம்போதி ராகத்தையும், கான்மூங்கிலையும் மலையையும், தெரிவையர் மூங்கிலையும், ஒந்தியையும் காட்டும் என்பது. (மும்மொழிச் சிலேடை) கழுவாய் - பிராயச்சித்தம்.45. சிரத்தை - விருப்பம். மிகை - கல்லாச்செல்வருள்ளக் கிளர்ச்சி. ஆறு - வழி, மித்தை - பொய், கன்மி - கன்மமுடையவன். கையாறு - செயலற்றிரங்குதல்.
46. காலிலி - அருணன், பாம்பு. சூரியனுக்குச் சிலேடை. ஆய - ஆகி
47. கூடு - உடம்பு. காணி - உரிமை. ஆர் - பூமி
48. பாடு - பெருமை. பேனம் - நுரை. கீரன் - நக்கீரன்
49. விலோதநம் - கொடி. நிகமம் - வேதம். சத் + சித் + ஆநந்தம் - உண்மையறிவு, ஆநந்தம். வரன் - சிரேட்டன்

நம்பனர னாமம் புணையாக நண்ணமே
லிம்பரிடை யெண்ணகத்தார் பூர்வபதி - அம்புயன்மா
றேவர்பு லர்ந்தலைந்தும் வாய்ந்துதரந் தேடுவது
பூவரம்பு திண்ண புரம். 50

பொன்மணில நேமியகி பூந்துளபம் புள்ளரசு
மன்பொருவு மாயோனாந் திண்ணபுரம் - இன்பமார்
பாண்டரங்க னங்கணன் பஞ்சா க்ஷரசிவன்
பாண்டரங்கு யாழினன் பற்று. 51

காடுங் கடலுங் கவிஞரொடு நாரியரும்
தேடுங் கலைகாணுந் திண்ணபுரம் - மூடுஞ்
சுரரு ளகப்படான் றொண்டரகப் பாட்டன்
சுரரு ளகப்பட்டோன் றுறை. 52

காக்கையிரைக் காயங் கழியுமுனஞ் சம்புபர
வாக்கை வழங்குவோர் திண்ணபுரம் - தாக்கும்
மதிமோச வாகாமி வாய்சஞ்சி தம்முன்
விதிமோச னத்தன் விசி. 53

பழிக்கஞ்சி யெந்நாளும் பாத்துண்டு தூற்றம்
மொழிக்கஞ்சி திண்ணபுர மூத்தோர் - வழிக்கணுற
மக்களையொ றுக்கு மறக்கருணை பாலித்தீ
மக்களரி நட்டன மனை. 54

கெண்டையரி பாயக் கெழுதேன் சொரியிறாற்
புண்டரிகத் திண்ண புரமன்பு - கொண்டவுப
மன்னியன் பால்வேண்ட வற்றாத பாற்கடலை
முன்னியமித் தோன்மூல வூர். 55

---

50 அரநாமம் புணையாக மேல் நண்ண என்க. புணை - மரக்கலம். தரம் - உயர்வு. (இரதபந்த வெண்பா. கூடசதுர்த்தமுமாம்.)
51. பணிலம் - சங்கு. நேமி - சக்கரம், கடல். அகி - பாம்பு. திருமாலுக்குச் சிலேடை. தரங்கு - வழி.
52. கலை - (1.) மான், (2) மகரமீன், (3) கல்வி, (4) மேகலை (நான்மொழிச்சிலேடை) சுரர் - தேவர், பண்டிதர். பாட்டம் - தோட்டம். உளகப்பாட்டு - யாழோசை.
53. மோசம் (மோசநம்) - கபடம், விடுதல். ஆகாமி - ஆகாமியம். முன் - பிராரத்தம்.
54. பாத்து - பகுத்திடல், ஈமம் - சுடுகாடு. நட்டன் - கூத்தன்
55. கெண்டை, அரிபாய இறாலும் புண்டரிகம்முந்தேன் சொரியுந் திண்ணபுர மென்க. இறால் - தேன்கூடு.

வெள்ளியா னந்தியால் விண்ணுறலாற் பாரிடத்தால்
வெள்ளிமய வெற்புநிகர் திண்ணபுரம் - புள்ளிருக்கும்
வேளு ரரசனயன் விண்டுதலை மாலைபல
வேளுரத் தாங்கினேன் வீடு. 56

நேருளமில் லார்க்கு நிவேதநஞ் செய்யாமை
தேருளம் வேண்டுவோர் திண்ணபுரம் - காருள்
ஒருமரபுங் காட்டா துணர்வைக் கெடுக்கும்
கருமலவி நாசன் களம். 57

செந்தா மரையாற் றிதியரசைச் சேர்தலாற்
செந்தா மரையாணோர் திண்ணபுரம் - மைந்தாரும்
காலபடர்க் கஞ்சாமை கண்ட சிவபூசைப்
பாலபன வற்களிதோன் பார். 58.

ஆகமநூற் கோயிலு மஞ்சூட்டுச் சேவலும்
ஏகமய லேர்புறுத்துந் திண்ணபுரம் - தேகி
உறவுபகை மானுடரா லுய்விலையென் றேதாள்
உறவுவகை செய்வோனுலகு. 59

தீக்கோ ணிலையாற் றிரிபாமுற் பாதமகல்
தீக்கேயாப் புண்ணியமார் திண்ணபுரம் - மீக்கூறும்
வம்புரைத்த வேதன்றன் வன்றலையை வாங்கினோன்
சிம்புளுருக் கொண்டசிவன் சேர்வு. 60

போதந் தருதலாற் புண்டரிகஞ் சேர்தலால்
போதன் மனைபோலுந் திண்ணபுரம் - நாதன்றான்
அஞ்சக் கரமாலுக் கன்றீந்தோ னன்பரெணும்
அஞ்சக் கரத்தாதி யார்வு. 61

---

56. திருக்கைலாசத்திற்குச் சிலேடை, வே;ர - விருப்பமுண்டாக
57. நிவேதநம் - அறிவித்தல். கருமலம் - ஆணவம்.
58. இலக்குமிக்கச் சிலேடை, திதியரசு - விட்டுணு, நிலையான அரசு; மைந்து - வலிமை, காலபடர் - யமதூதுவர். பாலபனவன் - மார்க்கண்டேயன்
59. மயல் - ஆசை, மயக்கம் ( இருமொழிச் சிலேடை) தேகி - ஆன்மா, ஏர்பு - எழுச்சி
60. தீ - தீமை , அறிவு; கோள் - கிரகம். உற்பாதம் - தீமைக்குறி வம்பு - பொய் சிம்புள் - சரபப்பறவை.
61. கலைமகளுக்குச் சிலேடை. அஞ்சக்கரம் - அம் + சக்கரம். அஞ்சு + அக்கரம்.

திருவந்த மாலையுஞ் சேர்தருவும் பூவுங்
குருவிந்தங் கொண்டளிருந் திண்ண - புரமிந்தப்
பூதபரி ணாமம் புகும்பிர பஞ்சத்தின்
பூதபரி பாலி புரம். 62

சத்தா ரெரிவெட்டுச் சற்காரஞ் செய்திறைஞ்சிச்
சித்தார்ந் தடம்புரியார் திண்ணபுரம் - வித்தால்
புராதவஞ்செய் பார்த்தற் புரந்தருளத் தோன்றுங்
கிராதனுமை பாகன் கிடை. 63

கடஞ்சக் கரந்தீ கவினுருத்தம் பத்துத்
திடஞ்சத்த மந்திரஞ் சேர்க்கப் - படாந்தருள்வோன்
திண்ணபுரப் பேரே சிவகதிநல் வாழ்வருளல்
திண்ணமெனல் கண்டு தெளி. 64

மின்னாரும் பொய்கையும் மீமரனுங் கானகமும்
புன்னாகம் பூக்குமுயர் திண்ணபுரம் - தன்னேரில்
நம்பன் குறுமுனியால் ஞாலசமங் காட்டினோன்
நம்பனவை சற்றொணா னாடு. 65

நாகவலந் தாங்கலான் ஞாங்கருறு மத்தியினால்
வாகவனி மாணலுறுந் திண்ணபுரம் - மோகினியின்
சௌந்தரியங் கொண்டுமகா சாத்தற் றருபகவான்
சௌந்தரியி னாயகன் சார்வு. 66

சித்திரையி னோணமுதற் சீரா றபிடேகச்
சித்திரமோ டர்ச்சனையார் திண்ணபுரம் - சித்தம்
தெளிவிக்குஞ் சிங்காரத் தேறனடங் காண
இளிவிக்கு டாரா னிடம். 67

---

62. பூ - பூமி. குருவிந்தம் - (1) பதுமராகம், (2) குன்றுக்கொடி (3) கோரைக்கிழங்கு (மும்மொழிச்சிலேடை) பூதம் - பஞ்சபூதம் , உயிர். பரிணாமம் - வேறுபாடு.
63. சத்து - உள்ளது, சற்காரம் - பெருமைப்படுத்துதல், அடம் - பொல்லாங்கு. சஜம்மு - அறிவு, புரா - முன்னே, கிராதன் - வேடன்.
64. கடம் - கும்பம், சக்கரம் - யந்திரம், படர்தல் - புகதல் திண்ணபுரப்பெயர் தானே தன்னையடைவோர்க்குச் சிவகதியையும் நல்வாழ்வையுங் கொடுப்பது திண்ணம் என்கின்றது என்றபடி.
65. புன்னாகம் - 1, புன்னைப்பூ 2. வெள்ளாம்பல் 3. குரங்கு 4. பாம்பு (நான்மொழிச் சிலேடை) பூத்தல் - பொலிவுபெறுதல் நம்Hபல்Hநவை - நமதுபலகுற்றம்.
66. பூமிக்குச் சிலேடை, நாகம் - ஆதிசேடன், பாம்பு; (சர்ப்பம் காட்சியும் காவலுமாயது தல ஐதீகம்)
67. சித்திரம் - அழகு, சிங்காரம் - இனிமை, இளி - அவமதிச்சிரிப்பு, விக்குள் - விக்கல்

தாடலைபோ லத்துவிதச் சார்பு வகுளத்தாற்
தேடலைச் செப்புகின்ற திண்ணபுரம் - கூடலரும்
பஞ்சேந் தியவசப் பார்ப்பார் பரிந்திடவின்
பஞ்சேர்ந்தி யாசித்தோன் பற்று. 68

சங்கதமும் பாடகமுஞ் சாரசமும் மால்கரமுஞ்
சங்கதரச் சால்புறூந் திண்ணபுரம் - துங்கமிகும்
பாண நிறைஞ்சுமேம் பாடமையி லிங்கத்து
வாணன் வரதனமர் வைப்பு. 69

பட்டப் பகலிலொரு பட்டிமையோ பாவத்தாற்
கிட்டக் கிடையாத திண்ணபுரம் - சட்டகமார்
புக்கரைக் காரரவப் பூணன் சிவநிசியிற்
புக்கரையி ருட்போதன் பூ. 70

வச்சிரத்தால் வேளவியால் வல்லியால் வானுறலால்
வச்சிரியை மானுமெழிற் றிண்ணபுரம் - சுச்சிரமார்
மேருகிரி யந்தணர்க்கு வேண்டவரம் பாலித்தோன்
தேருகிரி காணொணான் சேர்வு. 71

தென்புலத்த ராதி தெளியைம் புலத்தாறோம்
பின்புலத் தீகையார் திண்ணபுரம் - முன்பிற்
சலந்தரனை யுள்ளிட்ட சாகசரை யட்டோன்
சலந்தரனா நந்தி தலம். 72

சுகந்தாதி யாற்பூசை தோத்திரஞ் செய்வோர்
இகந்தேடு திண்ணபுரமெண்ணிற் - சகந்தேறும்
காயத் திரிமூலங் காமாரி யைம்முகனா
காயத தொளியானோன் காப்பு 73

---

68. வ - கால், குளம் - நெற்றி (தலை) வகுளம் - மகிழ் பஞ்சேந்தியம், ஐம்பொறி. பார்ப்பார் - (தாருகாவன) முனிவர், இன்பம் .....சேர்ந்து
69. சங்கதம் - சம்ஸ்கிருதம், சராசம் - நாரை, சங்கம் 1 .புலவர். 2. கணைக்கால், 3 கூட்டம் 4. சங்கு, (நான் மொழிச்சிலேடை) பாணன் , பாணாசுரன், வாள் + நன் - வாணன்.
70. பட்டிமை - வஞ்சகம். சட்டகம் - உடம்பு, மார்புக்கு அரைக்கு அரவப்பூணன். அரையிருள் - அர்த்தராத்திரி.
71. இந்திரனுக்குச் சிலேடை. வல்லி - கொடி, பெண். சு. நன்மை. கிரி - மலை, பன்றி, (விட்டுணு).
72. புலம் - திசை, புலன் - அறிவு, சாசம் - வலாற்காரம், நந்தி - சிவன்.
73. சுகந்தம் -நறுமணம், இகம் - இவ்விடம், சகம் - உலகம், ஆகாயத்து ஒளியானோன்.

அம்மையே யப்பாவென் றெப்போதும் போற்றுவோர்
செம்மைசேர் தெய்வீகத் திண்ணபுரம் - இம்மையே
பொன்னம் பலநடனம் போந்து தரிசிப்போர்
முன்னங் கொடுப்போன் முகம். 74

காமரசங் கம்வாவி காரிகையா ரூஞ்சலினன்
தாமரசந் தந்திலகு திண்ணபுரம் - வீமமொடு
வந்தோ ரமிர்துண்ண வாணஞ்சு தானுண்டு
வந்தோன் கிரீசன் மனை. 75

கம்பை யொலித்தலாற் காமாட்சி யாற்பரனாற்
செம்பொருளின் கச்சிநிகர் திண்ணபுரம் - நம்பும்
அடியார் தமிழ்ப்பாட லங்கணைந்து கேட்டு
மடியாத வீடளித்தோன் வாழ்வு. 76

செற்றஞ் செகுத்தாருஞ் சேராருந் தீமையும்
அற்றமுறுந் திண்ணபுர மற்புதமாம் - வற்றி
அவிநாசி நீர்கரா வார்சிறுவற் றந்த
அவிநாசி யப்ப னகம். 77

செய்வினையின் போகமே தேகமெனத் தேருவோர்
உய்வினைசெய் திண்ணபுர முள்குதலாற் - தெய்வதளி
தன்மநத் தாக்கியவன் றாபநந் தேற்றினோன்
தன்மநத்த நாதி தலம். 78

மண்ணிலுயர் தெங்கின் வளரோலை காயிளநீர்
விண்ணிரவி யுன்னிமெலுந் திண்ணபுரம் - முன்னி
அநந்தசய னன்பணியு மாதிமறை யுச்சி
அநந்தசய னத்தன்றா னார்வு. 79

---

74. முன்னம் - குறிப்பு, செம்மை - பெருமை, முகம் - பிரதான இடம்.
75. காமாசங்சம் - வண்டுக்கூட்டம். இனன் - சூரியன். தாமரசம் - பூந்தேன், 2 தாமரை. 3. பொன், 4. கயிற்றினா மின்மை, 5. ஒளிச்சுவை (ஐம்மொழிச்சிலேடை) வீமம் - பயங்கரம். வாள் - கொலை.
76. கம்பை - கம்பையாறு, சங்கை. காமாட்சி - கா ூ மாட்சி, செம்பொருள் - கடவுள். கச்சிக்குச் சிலேடை.
77. அற்றம் - 1 அவகாசம், 2. குற்றம், 3. அழிவு (மும் மொழச் சிலேடை) அவி+ நாசி - அழிந்த, இல்லாமற்போன, (நீர்கரா - நிரனிறை.)அர்தல் - உண்ணல
78. தளி- கோவில். ஆக்கியவன் - பூசலார். தன்மம் - வேதம், நந்து - விருப்பம்.
79. உன்னி - குதிரை, அநந்தசயனன் - திருமால், அநந்தமறையுச்சி சயனத்தன் என்றபடி, மறையுச்சி - உபநிடதம்.

ஏற்றநிறை மாளிகையு மேனல் விளைநிலமும்
தேற்று சுகநிறையுந் திண்ணபுரம் - ஆற்றுதவப்
பொன்னனையாள் வேண்டுமுருப் பொற்பாக்குஞ்சித்தனலர்
பொன்னனைய கொன்றையான் பூ. 80

கற்பகத்தா லீழத்தாற் காமினியாற் றேனுவாற்
பொற்பகமார் பொன்னுலகாந் திண்ணபுரம் - தற்பரன்
கைம்மாறு வேண்டாக் கருணா நிதிவள்ளல்
தம்மானே யாவான் சகம். 81

வற்றுமரம் போற்றுநரின் மற்றுமொரு தெய்வத்தைச்
சற்றுமகந் தாநினையார் திண்ணபுரம் - பெற்றமிசை
வந்துவென வென்னை மறலிமுன மஞ்சலென
வந்துதனி காப்போன் மனை. 82

ஆக்கநய னஞ்சரப்பே ராதி கடையிடையென்?
பாக்கத்தின் பேரொன்றென்? பார்ப்பதியின் - நீக்கமிலா
மன்னவ னாஞ்சுந்த ரேசன் மகிழ்ந்துறையும்
பொன்னகரென்? றிண்ண புரம். 83

வேளாண்மை சொல்லாண்மை வில்லாண்மை
கொள்ளுவோர்
நாளாண்மை நாடுகளத் திண்ணபுரம் - தாளாலிம்
மண்ணுலகு விண்ணுலகு மாபலிமெய் தாவிபணி
பண்ணவர்க ணாதன் பதி. 84

கன்னலுங் கேத்திரமுங் காசினியும் ராகவனும்
சின்னமிலஞ் சீதையார் திண்ணபுரம் - தன்னலமில்
கூத்தன் குணநிதி கோதகற்று மெங்கண்மா
சாத்தனயல் சார்ந்தோன் றலம். 85

---

80. சுகம் - சௌக்கியம், கிளி, (இருமொழிச் சிலேடை) நனை - தேன்.
81. பொன்னுலகுக்குச் சிலேடை. ஈழம் - இலங்கை, பொன்
82. வந்து - காற்று, வாயுவேகமாகப் பெற்றமிசை வந்து என்க.
83. வினவுத்தரம். ஆக்கம் - திரு. நயனம் - கண், சரம் - பாணம். ஆதிகடையிடை - தி, ண், ண, பாக்கம் - புரம். சுந்தரேசன் - தலக்கடவுள் திருநாமம்
84. ஆண்மை - 1 ஆளுந்தன்மை, 2 உண்மை 3. விரம் (மும்மொழிச் சிலேடை) தாவி - அளந்தவராகிய திருமால்.
85. கேத்திரம் - விளைநிலம், சீதை - 1 மது, 2. உழவுசால் 3. பொன்னாங்காணி 4 சிதாபிராட்டி (நான்மொழிச்சிலேடை) கூத்தன் - சிவன்.

பூவுறலா லோங்கலாற் பொன்னுறலாற் கோள்வலத்தாற்
தேவுறைமா மேருநிகர் திண்ணபுரம் - ஆவுரிஞ்சும்
முண்டமய யோகர்பவ மோசநஞ் செய்தருளும்
முண்டநய னத்தினிட முன். 86

எண்ணார் கயல்கரும் பீகையார் கீசகம்
கண்ணார் கதிதரூஉந் திண்ணபுரம் - விண்ணோர்
குடந்தமுட னேத்தக் குறைதீர்த் தருள்வோன்
இடந்தலைப் பாடுகொள வே. 87

எழுபிறவி யாழியினின் றேறுதுறை யாகத்
தழுவுததி சார்திண் ணபுரம் - தொழுதால்
உடற்பகைவா ளுண்மயற்கெ லோடமிடர் வாரி
மிடற்றால காலனமர் வீடு. 88

மாப்பாண வூரி மணிநீர் சடையாளி
சேர்ப்பார் சிறப்புடைய திண்ணபுரம் - கோப்பாரும்
ஆறாக வைந்தெழுத் தன்பினுட னித்தமும்
ஆறாக ரார்வ னகம். 89

ஆகந் தரநீர்பொ னம்பயமா மைந்துபொருள்
கோகனகங் கொண்டுறூந் திண்ணபுரம் - ஏகன்
திரிதள வில்வத்தாற் செய்பூசை மேவும்
திரிதர வில்லாதான் சேர்வு. 90

தேமா நறுநிழலுந் தீக்கனிகாய் தண்பூவுந்
தாமார் தமிழ்போலுந் திண்ணபுரம் - சீமானாய்
ஒன்றிரண் டைந்தெட்டே யோதையைந் தைந்தாகி
அன்றென் றளப்பிலா னார்வு. 91

---

86. கோள் - கிரகம், கொள்கை: மேருமலைக்குச்சிலேடை. முண்டகம் - குற்றி, நெற்றி; மோசநம் - விடுதலை.
87. பூட்டு விற்பொருள் கோள், ஆர் - பூமி, கீசகம் - மூங்கில். கண் - 1. இடம். 2. கண். 3. கணு. 4. கண்ணோட்டம் 5. கணு (ஐம்மொழிச்சிலேடை) குடந்தம் - கைகூப்பி உடம்பை வளைத்து நிற்றல், தலைப்பாடு - கூடுதல்.
88. திண்ணபுரம், பகைக்குவாள், மயற்கு எல், இடர்வாருக்கு ஓடம் என்க. எல் - சூரியன், ஆலகாலம் - நஞ்சு.
89. மா -இலக்குமி, பாணம் - மழைவண்ணக்குறிச்சி, ஊரி - குருவிச்சை; ஆளி - சிங்கம், சேர்ப்பு - கடற்கரை, (மாப்பாணவூரி, சடையாளி. அயனிலக் குறிச்சிகள்) ஆல்+ தாகர் - செபிக்குந் தாகமுடையோர்.
90. கோகனகம் - கோ, கனம், கம், கனகம், கோகனககம் என்றவாறு பொருள் தநதிருப்பது (பிழிமொழிச் சிலேடை)
91. தே மா முதலியன செய்யுளிலக்கண வாய்பாடுகள். தமிழுக்குச் சிலேடை. ஒன்று - நிஷ்கணம், இரண்டு - சகளம், ஐந்து - பஞ்சசாதாக்கியம், ஐயைந்து - இருபத்தைந்து, கேவல வடிவம், ஐந்து - காரணேசுவரர்கள்.

பங்குனியி லுத்தரநாள் பற்றுதநு வாதிரைநாள்
துங்கவிழாச் சோபனமார் திண்ணபுரம் - நங்குதலாய்
பொக்கம் புரிதக்கன் புன்றலையை மாற்றினோன்
பொக்கந் தருவோன் புரம். 92

பாகனையார் கண்ணும் பரதமார் பண்ணம்வ
சீகனைசெய் வண்டுநிகர் திண்ணபுரம் - ஓகையுற
மாமிக்கு மாற்கு மகனுக்கும் வேலையருள்
மாமிக்க வேற்றான் மனை. 93

பூவையரும் பாடகரும் பூவும் பொறையுடலும்
மேவ மிருதங்கத் திண்ணபுரம் - தாவில்
வியாக ரணதாதன் வித்தியா நந்தன்
தயாபர னெந்தை தலம். 94

அற்பகல் கேட்டங் கவந்திகையும் பூவையுஞ்
சிற்பர வேதஞ்சொ றிண்ணபுரம் - சொற்பலவென்
உற்பவ நாசந னுள்ளக் கமலத்தன்
உற்பல மாலையா னூர். 95

சீதமுயற் கோடமுதந் தேடுகலை யம்புலியாற்
சாதமுறு சந்திரனேர் திண்ணபுரம் - பாதம்
வதியனந் தாதியோ ராவரண மன்னன்
வதியனன் காணான் மனை. 96

ஆலமர வந்தாரை யண்டமழை யாசினி
நீலமலர் காயநிகர் திண்ணபுரம் - சீலமதி
பொன்பச்சை நீலம் புகரிரவி சேயரவம்
மின்பச்சை யாகனமர் வீடு. 97

---

92. உத்தரநாள் - மகோற்சவாந்ததினம், தநு - மார்கழி மாசம் சோபனம் - நன்மை நங்குதல் - பழித்தல், பொக்கம் - குற்றம், பொலிவு.
93. வசீகனைசெய் - விருப்பம் தருவது, வண்டு - அம்பு, வண்டினிசை (இருமொழிச் சிலேடை) வேலை - (மும்மொழிச் சிலேடை) சமுத்திரம், தொழில் வேல், மாமி - பாண்டியன் மனைவி.
94. மிருதங்கம் - (1) மிருது .. அங்கம், 2) மீருதங்கம், 3) மிருத்.... ஆங்கம், 4) மிருதம் - கம், மிருது - மென்மை, மிருத் - மண், மிருதம் ...கம் - மரணம்போவது, பூ- பூமி (நான்மொழச் சிலேடை)
95. அவந்திகை - கிளி, நாசனம் - அழித்தல் உற்பவலம் - செங்கழுநீர்
96. சந்திரனுக்குச் சிலேடை சாதம் - தோற்றம், ஆவரணம் - சுற்றெல்லை; வதியனன் - பிரமா.
97. ஆகாயத்துக்குச் சிலேடை காயம் - ஆகாயம் . ஆலம் - நிர், ஆலமரம், மதி ...அரவம் - நவக்கிரகங்கள், ஆபரண விசேடங்களைச் சிலேடையாகக் கூறுவதுகாண்க. பச்சைமின் - உமாதேவி

வரமடைவு வேதவொலி மாபீடங் காட்டிப்
பிரமபத நேர்பேசுந் திண்ண - புரமதுவே
பஞ்சசா தாக்கியம் பற்றிவரு மாதிபிர
பஞ்சவிடர் தீர்ப்போன் பதி. 98

பரசமய மென்னும் படுகுழியின் வீழ்வில்
தரசமச் சார்புடையோர் திண்ண - புரமுலகில்
கோலவரி தேடுங்குரைகழலா னைம்முகன்
கோலகயி லாசன் குலம். 99

கட்டியலும் வீட்டியலும் காணும் படியாகச்
சிட்டம் பெறவருளுந் திண்ணபுரம் - விட்டிறந்த
தாயிருளி யானோன் றமியே னிடர்களையும்
தாயிருமை யீவோன் தலம். 100

---

சிவம்பொலியுங் காரைநகர்த் திண்ணபுரம் வாழி
தவம்பொலியுஞ் சைவநெறிவாழி - நவம்பொலியத்
தந்ததமிழ் வாழிபஞ் சாக்ஷரன பாமலர்கொள்
சுந்தரே சன்னருள் தோய்ந்து.

முற்றிற்று.

---

98. சத்தியலோகத்துக்குச் சிலேடை. வரம் - மேன்மை, விரும்பியது, சதாக்கியம் - சிவ, அமூர்த்தி, மூர்த்தி, கர்த்திரு, கர்மசாதாக்கியங்கள், ஆதி - முதல்வனாகியவன், பிரபஞ்சம் - உலகம்)

99. தரம் - உயர்வு, சமம் - இந்திரியங்களை அடக்கல், கோலம் - பன்றி, அழகு, குரை - ஒலி

100. கட்டு, வீடு - பந்த மோட்சம், சிட்டம் - நல்லறிவு, தாய்இருளி - தாயாகிய பன்றி, தாய் - முதல்வன்.

அனுபந்தம் - 4

உ
சிவமயம்

யாழ்ப்பாணம்
காரைநகரில் எழுந்தருளியிருக்கும்
சுந்தரேசுவரப் பெருமான் பேரில்

# ஊஞ்சல்

எச்சரீக்கை பராக்கு மங்களம்

காரைநகர்
மு. சபாரத்தினம் ஐயரால்
இயற்றப்பட்டது

சீர் கொண்டமலர்வனங்கள் செறிந்து சூழும்
செயங்கொண்ட காரைநன்னகரில் வாழும்
ஏர்கொண்டசுந்தரேசுவரர்மீதில்
இசைகொண்ட தமிழூஞ்சலெளியேன்பாடப்
பேர்கொண்டநதியிதழிய றுகுசூடும்
சடைமௌலிப்பெருமானீன்ற
கார்கொண்டகரடதடவிகடகும்பக்
கரிமுகவனிருசரணங்காப்பதாமே.

தேமேவுநாதவிந்துகால்களாக
திறமேவுசத்தியொளிர்விட்டமாக
நாமேவுமந்திரநூலிழையதாக
நயமேவுசதுர்வேதங்கயிறதாக
மாமேவுமுபநிடதம்பலகையாக
வரமேவுபிரணவமேபீடமாக
தூமேவுகாரைநந்நகரில்வாழும்
சுந்தரேசுவரரேயாடீரூஞ்சல்

இந்திரன்வெண்கவிகை புடைநின்றுதாங்க
இடந்திகழுமுரசு முதலியங்களேங்க
சிந்தையுடனளகையர்கேனடப்பைதாங்க
சினமுறுமந் தகன்கரத்திற்களாசியேந்த

வந்தனைசெய்வாயுகையிற்கவரி தூக்க
வரமிகுநந்திமனமகிழ்வின்மாழ்க
சுந்தரஞ்சேர்காரைநந்நகரில் வாழும்
சுந்தரேசுவரரேயாடீரூஞ்சல்.

மதிமருவுகந்தருவர்சுருதிகூட்ட
வலமருவுதும்புருநாரதர்பண்பாட
கதிமருவுமலரயன்கைத்தாளம்போட
கவின்மருவுமரம்பையர்கணடனமாட
விதிமருவுமலமறையினொலிவிரிவிநீட
வியன்மருவுமன்பரிடர்வெருவியோட
துதிமருவுகாரைநந்நகரில் வாழும்
சுந்தரேசுவரரேயாடீரூஞ்சல்

மகமலருமமரர் பொழிமலர்கள் வீழ
வயமலருங்கணநாதரருகுசூழ
அகமலருமடியர்மலவிருளைப்போக்கி
அருண்மலரும் சௌந்தரேஸ்வரி பரவிவாழ
முகமலருமான் முதலோர்செறிந்துதாழ
முறைமலரும்பரிசனங்கள் பரிவினாழ
சுகமலருங்காரைநந்நகரில்வாழும்
சுந்தரேசுவரரேயாடீரூஞ்சல்.

உருவளருந்தொண்டருள்ளத்தன்புகூர
உரம்வளருங்கரமலர்கள் சிரமேற்சேர
திருவளருமானந்தக்கண்ணீர்சோர
சிவம்வளரும்பெருஞானஞ்சிறந்துசார
குருவளருஞ்சைவநெறியெவருந்தேர
குணம்வள ருமுமையம்மைமருங்கிலார
சுருதிவளர்காரைநந்நகரில் வாழும்
சுந்தரேசுவரரேயாடீரூஞ்சல்

இனமாருமுனிவரர்களாசிகூற
இசையாருமறையவராசாரம்வீற
மனமாருமரசர்மனுநீதிதேற
வசமாரும்வணிகர்பெருநிதியிலேற

தனமாருமுழவர்கணெல்வளத்தின்மீற
தண்ணாருங்களபசுகந்தாதிநாற்
சுனையாருங்காரைநந்நகரில்வாழும்
சுந்தரேசுவரரேயாடீருஞ்சல்

படர்வுறுசெஞ்சடையுமிளமதியுமாட
பதத்திலணிசிலம்புசிறுசதங்கையாட
சுடர்வுறுமான்மழுக்கரத்திற்றுலங்கியாட
சூலமொடுபொருபுலித்தோலுடையுமாட
அடர்வுறுமாமணிமழுக்கரத்திற்றுலங்கியாட
சூலமொடுபொருபுலித்தோலுடையுமாட
அடர்வுறுமாமணியரவக்கச்சுமாட
அழகுசெறிதிருக்குழைவில்வீ சியாட
தொடர்புறுகாரைநந்நகரில் வாழும்
சுந்தரேசுவரரேயாடீருஞ்சல்

செயிரகலுந்திருக்கைலாசபுரியில்வாச
சிகரமிளிர்மகாமேருவில்லீச
அயர்வகலுமறுமுகனையருளுந்தேச
அறம்வளரும்யோகருளத்தமர்விலாச
பெயர்வகலுஞ்சரமசரவுயிர்கட்கீச
பேசரியவிபரீதமலவிநாச
துயர்வகலுங்காரைநந்நகரில் வாழும்
சுந்தரேசுவரரேயாடீருஞ்சல்

அங்கிகரம்பரித்தவரேயாடீ ருஞ்சல்
அடற்கரியையுரித்தவரேயாடீருஞ்சல்
கங்கைமுடித்தவரேயாடீருஞ்சல்
காமனைமுன்னெரித்தவரேயாடீருஞ்சல்
வெங்கடுவையுண்டவரே யாடீருஞ்சல்
விளங்குமருள் கொண்டவரே யாடீருஞ்சல்
துங்கமுறு காரைநந்நகரில்வாழும்
சுந்தரேசுவரரேயாடீருஞ்சல்

பொருவரியவக்குணமணிபூதிவாழி
பொருளுறுபஞ்சாக்ஷரமுந்தவமும்வாழி
கருதரியவேதசிவாகமங்கள் வாழி
கற்பாருமகளிர்பசுவினமும்வாழி
பரவரியமுகிலரசர்மறையோர்வாழி
பலனுதவுசிவசமயநெறியும் வாழி
சுரர்புகழும்காரைநந்நகரும்வாழி
சுந்தரேசுவரரும்வாழிவாழி

## எச்சரிக்கை

மருவார்பொழிற்காரைநகரில்வாழ்வோயெச்சரிக்கை
திருவார்பிறைமுடிசூடியதேசாவெச்சரிக்கை
தாதார்கொன்றைமலர்மாலிகைதரித்தோயெச்சரிக்கை
மேதாவியருள்ளத்துறைவிமலாவெச்சரிக்கை
காரார்குழன் னுமையம்மைதன் கணவாவெச்சரிக்கை
கூரார்மழுப்படையேந்தியகோவேயெச்சரிக்கை
பண்ணளிகொள்பதிமேவியபகவாவெச்சரிக்கை
தண்ணளிகொள்ளன்பருள்ளத்தகவேயெச்சரிக்கை

## பராக்கு

அரியயனுமறியாதவரனே பராக்கு
அணியுமைதன் அழகுபெறுமரசேபராக்கு
பரியின்மிசையேறும்பரம்பரனேபராக்கு
பழமறையையருள் பரமபதியேபராக்கு
வெங்கரியைவதைத்ததிறல்வீராபராக்கு
வெள்ளைவிடைமீதில்வரும்விமலாபராக்கு
ஐங்கரனைமுனமுதவுமையாபராக்கு
அன்பருள்ளத்துறையுமாதீபராக்கு
குருந்தமரநிழன்மேவுங்குருவேபராக்கு
கொன்றைமலர்சூடுமெங்கள் குமராபராக்கு
திருந்துதவமுனிவர்பணிதேவேபராக்கு
தில்லைமாநகரிலுறைசெல்வாபராக்கு

*அண்டங்களுவந்துதொழுமமலாபராக்கு*
*அருவாகியுருவாகியமர்ந்தாய்பராக்கு*
*தொண்டரிடர்தீர்த்தருளுஞ்சோதீபராக்கு*
*துய்யகாரைநகரில்வாழும்சுவாமீபராக்கு*


**மங்களம்**

*பொங்கரவாம்பூண்டவர்க்கும் - தொண்டர்தமையாண்டவர்க்கும் -செங்கனலாய்நீண்டவர்க்குந் - தில்லையுறைதாண்டவர்க்கும் மங்களம் மங்களம் மங்களம் நித்தியாசுப மங்களம்.*

*தொண்டர்தொழு நேசருக்கும் - சுவயம்பிரகாசருக்கும் - அண்டர்புகழீசருக்கும் - அருளுதவுதேசருக்கும் மங்களம் மங்களம் மங்களம். நித்தியாகப மங்களம்.*

*கங்கையைத்தரித்தவர்க்கும் - காமனைஎரித்தவர்க்கும் - அங்கியைப்பரித்தவர்க்கும் - அரக்கனைநெரித்தவர்க்கும் மங்களம் மங்களம் மங்களம் நித்தியாசுப மங்களம்.*

*நங்கள் தமையாள்பவர்க்கும் - நாகமணிபூஷணர்க்கும் சௌந்தரேசுவரபாகருக்கும் - வாழ்வுறுசுந்தரேசருக்கும் மங்களம் மங்களம் மங்களம் நித்தியாசுப மங்களம்.*



கோவில் முன்பாகத்தில் அமைந்துள்ள சந்தான கோபாலர்

அனுபந்தம் - 5

# மீள்பார்வை

ஈழத்துச் சிதம்பரம் எனும் நூலில் முதற்பதிப்பில் ஆரம்ப காலம் முதல் 1962 வரையிலான காரைநகர் சிவன்கோவில் வரலாறுகள் தெளிவாகக் கூறப்பட்டுள்ளன. இரண்டாவது பதிப்பில் 1962ம் ஆண்டு முதல் 2002ம் ஆண்டு வரையிலான வரலாறு சுருக்கமாகக் கூறப்படுகின்றது. மேற்படி ஆலயம் நூற்றித் தொண்ணூறு ஆண்டுகளிற்கு மேலாக அம்பலவி முருகர் பரம்பரையில் வந்தோரால் இன்றுவரை சிறப்பாக பரிபாலிக்கப்பட்டு வருகின்றது. 1963ம் ஆண்டு ஆரம்பகாலத்தில் வலந்தலை குறிச்சியில் இருந்த ஓர் அன்பரால் கோவில் உட்பிரகாரத்தில் சோமாஸ்கந்தர் கோவில் அத்திவாரமிடப்பட்டு, கட்டப்பட்டு 1963ஆம் ஆண்டு ஆனிமாதத்தில் கும்பாபிஷேகம் நடைபெற்றது. சோமாஸ்கந்தர் கோவில் கட்டட அத்திவாரமிடப்பட்ட நாளில் இருந்து கோவில் பலமுன்னேற்றமான மாற்றங்கள் நடைபெறத் தொடங்கின. அம்பலவிமுருகரால் கட்டப்பட்ட பழைய சிவன் அம்பாள் ஆலயங்கள் கீலமுற்று இருந்ததால் அதனை கருங்கல்லால் கட்ட அப்போதைய ஆதீனகர்த்தாக்கள் திரு. அ. ஆண்டி ஐயா திரு.து. முருகேசு ஆகியோரது பெருமுயற்சியினால் 1963ம் ஆண்டு வவுனியாவில் இருந்து கருங்கற்கள் வரவழைக்கப்பட்டு கருங்கல் கொத்து வேலைகள் ஆரம்பிக்கப்பட்டன. இவ் ஆரம்பவேலைக்கு பயன்படுத்தப்பட்ட கல் பழைய காலத்தில் ஐயனார் சன்னாசிக்கந்தர் என்ற அடியவரது கனவில் தோன்றி தமது ஆலயத்தை கருங்கல்லில் கட்டுவிக்கும்படி கூறியதாகவும் அவர் அதனைபக்தி சிரத்தையோடு வவுனியாவில் இருந்து வண்டிலில் கொண்டுவந்ததாகவும் புதுறோட்டு முடிவில் உள்ள தரவைப் பகுதிக்கு இப்பால் கொண்டுவரமுடியாமல் போய்விட்டதாகவும் பின்னர் அப்போதைய ஆதீனகர்த்தாவாக இருந்த திரு.ச.மாசிலாமணி அவர்களின் ஆலோசனைப்படி ஐயனார் கோவில் வெள்ளைக்கல்லால் கட்டப்பட்டதாகவும் முதியோர் கூறுவர். மூன்று தசாப்தங்களாக கருங்கல் அவ்விடத்திலேயே இருந்தது. அதனால் அவ்விடம் கருங்கல்லடி என அழைக்கப்பட்டது. இந்தக் கல் 1963ம் ஆண்டு கோவிலடிக்கு எடுத்துவரப்பட்டு ஆரம்பவேலைக்குப் பயன்படுத்தப்பட்டது.

மேற்படி திருப்பணி வேலைகள் மூலத்தானம், இராசகோபுரம், தேர் என திட்டமிடப்பட்டு செய்வதற்கென ஆதீனகர்த்தாக்களால் ஒரு

திருப்பணிசபை நிறுவப்பட்டு அவர்களின் ஆலோசனைப்படி செயற்பட்டு வந்தது. 1965ஆம் ஆண்டு இந்தியாவில் இருந்து சிற்ப நூல் வல்லார் வரவழைக்கப்பட்டு அவரது ஆலோசனைப்படி இராசகோபுர நிலையம் நிர்மாணிக்கப்பட்டு அத்திவாரம் சிவன் வாசலிற்கு மட்டும் இடத் தீர்மானிக்கப்பட்டது. அப்பொழுது கோவில் பிரதமசிவாச்சாரியாராக இருந்த சிவஸ்ரீ க. கணபதீஸ்வரக்குருக்கள் அவர்கள் இவ்வாலயத்தில் ஐயனார்தான் மூலமூர்த்தி அவருக்கும் சேர்த்து கோபுரத்திற்கான அத்திவாரக்கல் இடும்படி வலியுறுத்தி வேண்டிய பொழுது அவரது கருத்தில் விடயம் இருப்பதாகத் தெரிந்தும் சிற்பநூல் வல்லாரின் கருத்துப்படி சிவன்வாசலிற்கு மட்டும் அத்திவாரம் 18அடி ஆளத்தில் வெட்டப்பட்டு 1965ம் ஆண்டு அத்தி வாரம் இடப்பட்டு நிலமட்டம்வரை கட்டப்பட்டது. பதினான்கு வருடங்களாக கோபுரவேலைகள் தொடர்வதற்கு முயன்றும் முயற்சிகள் சிறிதளவேனும் பலனளிக்கவில்லை.

1968ஆம் ஆண்டு ஐயனார் தவிர்ந்த சிவன் அம்பாள் பரிவார மூர்த்திகள் பாலஸ்தாபனம் செய்யப்பட்டு பரிவாரக் கோயில்களும் புனரமைக்கப்பட்டு சிவன் அம்பாள் ஆலயங்கள் வியாழவரிரை கருங்கற்களால் கோவில்கட்டப்பட்டு நவாலி சாமி விசுவநாதக் குருக்கள் தலைமையில் ஈழத்துச் சிதம்பர தேவஸ்தான பிரதமகுரு சிவஸ்ரீ க. மங்களேஸ்வரக்குருக்கள் பிரதமகுருவாக இருந்து 10.07.1970 இல் மகாகும்பாபிசேகம் சிறப்பாக நடைபெற்று தொடர்ந்து 45தினங்கள் அபிசேகம் நடைபெற மண்டலாபிஷேகமும் சிறப்பாக நடைபெற்றது. 1971ஆம் ஆண்டு ஆடிமாதம் ஆடிப்பூரத்தை தீர்த்தத் தினமாகக் கொண்டு தேவிமகோற்சவம் முதன்முதலாக ஆரம்பிக்கப்பட்டு தொடர்ந்து நடைபெற்று வருகின்றது. 1972ஆம் ஆண்டு ஆலயத்திற்கு என தத்துவகலாநிதி சிவஸ்ரீ க. வைத்தீஸ்வரக்குருக்களின் பெருமுயற் சியினால் நவாலி சோமசுந்தரப் புலவரின் மகன் கவிசிந்தாமணி பண்டிதர் இளமுருகனாரால் "ஈழத்துச் சிதம்பரபுராணம்" பாடப்பட்டு அவரது பாரியார் பேருரையரசி பண்டிதை பரமேஸ்வரியால் உரையும் எழுதப்பட்டு தலபுராணமாக அச்சேற்றி வெளியிடப்பட்டது. இவ் அருமைபெருமையான நூல் ஆடிமாதத்தில் நடைபெறுகின்ற தேவி மகோற்சவ 10 தினங்களும் மாலையில் படிக்கப்பட்டு பயன்சொல்லப்பட்டு வருகின்றது.

சிவன் அடியார்களின் மனக்குறை கோபுரவேலைகள் பதின்மூன்று வருடங்களுக்கு மேலாகியும் நடைபெறவில்லையென்பதே. இதனை நன்குணர்ந்து ஓர் அன்பர் தமது செலவில் ஐயனார் கோபுரத்திற்கு 18அடி ஆழத்தில் அத்திவாரமிட்டு நிலமட்டம் வரை கட்டுவித்தார். அதனைத் தொடர்ந்து கோபுர வேலைகள் துரித கெதியில் நடைபெறத் தொடங்கின. இராசகோபுரவேலைகள் நடைபெறுவதற்கு ஆதீனகர்த்தாக்களால் திருப்பணிச்சபையும் அமைக்கப்பட்டு வேலை துரிதமாக நடந்து 1988ம் ஆண்டு கோபுரவேலைகள் பூர்த்தி அடைந்தவேளை கோவில் பாலஸ்தாபனம் செய்யவேண்டிய நிலைக்கு வந்தமையால் பாலஸ்தாபனம் செய்யப்பட்டது. அதனைத் தொடர்ந்து நாட்டில் ஏற்பட்ட மக்கள் இடம்பெயர வேண்டிய நிலை ஏற்பட்டது. அசாதாரண நிலையால் காரைநகர் மக்கள் முழுமையாக வெளியேறி குறைந்த எண்ணிக் கையான மக்களே இருந்தனர்.

அப்பொழுது இருந்த ஆதீனகர்த்தாக்களில் திரு.து.முருகேசு அவர்கள் இடம்பெயராது கோவிலிலேயே தங்கியிருந்தார். வயோதிப வேளையிலும் கோவிலை கண்ணும் கருத்துமாக கவனித்து காலத்திற்கு ஏற்ப பூசை ஒழுங்குகளையும் நன்கு கவனித்து வந்தார். அவரின் செயற்பாட்டிற்கு உதவியாக சிவஸ்ரீ க. வைத்தீஸ்வரக் குருக்கள் ஊரில் இடம்பெயராது இருந்து செயற்பட்டார். மணற்காடு மாரியம்மன் கோவில் பிரதமகுரு சிவஸ்ரீ நா.ஞானசம்பந்தக்குருக்கள் அவர்கள் சிவன்கோவில் பூசைகளையும் அபிசேகங்களையும் செய்து வந்தார். அப்பொழுது காரைநகர் போக்குவரத்து இன்றி இருந்ததால் பூசைப் பொருள்கள் கிடைப்பது மிகவும் கஷ்டமாக இருந்தது.


1996ம் ஆண்டில் இருந்து மக்கள் ஓரளவு மீளக் குடியமரத் தொடங்கிய பின்னர் 1998ம் ஆண்டு ஈழத்துச் சிதம்பர தேவஸ்தான ஆத்தான பிரதமகுரு சிவஸ்ரீ க. மங்களேஸ்வரக்குருக்களின் அருளாசியுடன் நவாலி சிவஸ்ரீ சாமி விசுவநாதக்குருக்கள் தலைமையில் மகா கும்பாபிஷேகமும் கோபுரங்களுக்கான மகாகும்பாபிஷேகமும் அபிஷேகமும் 07.06.1998 இல் சிறப்பாக நடைபெற்று தொடர்ந்து 45தினங்கள் அபிசேகத்தினைத் தொடர்ந்து மண்டலாபிஷேகமும் சிறப்பாக நடைபெற்றன. மகாகும்பா அபிஷேகத்திற்குப் பின்னர் காரைநகரில் இருந்த நெருக்கடி நிலைமை மாறி நல்ல முன்னேற்றம்

அடைந்து வந்துள்ளதை யாவரும் அறிவர். மகாகும்பாபிஷேகம் நடைபெற்றபின்னர் எமது ஆலோசனைப்படி 1999 ம் ஆண்டு திருப்பணிச் சபை புனரமைக்கப்பட்டு கோபுரமைப்பூச்சு மங்கியிருந்ததால் மைபூசி 2001ம் ஆண்டு கார்த்திமைாதம் கோபுர மகாகும்பாபிஷேகம் சிறப்பாக நடந்தது. அத்தோடு கோவில் உட்பிரகார மேற்குச் சுவர் அகற்றி புதிதாகச் சுவர் கட்டப்பட்டது. அதோடு தேர்விடுதிமண்டபம் சப்பற விடுதி மண்டபம், திருக்குளத்திற்கு அருகில் இருந்த கேணி தூர்ந்து போனதால் அதனைமூடி துப்பரவு ஆக்கப்பட்டதோடு அதில்சிறு கிணறும் கட்டப்பட்டது. நீண்டகாலமாக நம்முன்னோர் மனதில் இருந்த அம்பாள்வாசலின் தெற்கு புறமுன்றலில் திருக்குளம் அமைக்கும் வேலையும் நடைபெற்றது என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

ஊர்கூடித் தேரிழுத்தல் என்பதற்கமைய ஆதீனகர்தாக்கள் சிவ புண்ணியச் செயல்களில் அடியவர்களையும் தனவந்தர்களையும் அறிஞ்ஞர்களையும் இணைத்து அவ்வப்போது திருப்பணிச்சபைகளை அமைத்து காலம்தோறும் செய்யவேண்டிய திருப்பணி வேலைகளையும் புனராவர்த்தன பணிகளையும் மகா கும்பாபிஷேகங்களையும் சிறப்பாக நிகழ்த்தி ஆலய வளர்ச்சியில் தம்மை அர்ப்பணித்துள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

ஆலயத்தின் நித்திய நைமித்திய கிரியைகளும் ஆலயத்தோடிணைந்த மற்றும் இதர பணிகளையும் செவ்வனே நிகழ்த்தவும் ஆலயத்திருப்பணிகளை முன்னெடுத்துச் செல்லவும் சிவனடியார்களை ஆதீன கர்த்தாக்களின் ஆலோசனைப்படி தொடர்ந்தும் தமது அறப்பணிகளைச் செய்து அவனருளால் அவன்தாள் வணங்கி திண்ணபுரத்தான் திருவருளுக்குப் பாத்திரமாகி இகபர சுகங்களைப் பெற்றுய்யும் வண்ணம் வேண்டுகின்றோம்.

**ஆ. அம்பலவிமுருகன்**
**மு. சுந்தரலிங்கம்**
**ஆதீனகர்த்தாக்கள்**



சிவன் கோபுர கும்பாபிஷேகம்

# 1962 - 2002
# 40 ஆண்டுகளில் நடந்த முக்கிய நிகழ்வு

*1963 -* கோவில் பெரிய அசையாமணி ஆ. நல்லதம்பி அவர்களால் வழங்கப்பட்டது.

சோமாஸ்கந்தர் கோவில் கட்டப்பட்டு மகாகும்பாபிஷேகம் நடைபெற்றது.

*1965 -* சிவன் இராசகோபுர அத்திவாரக்கல் இடப்பட்டது.

*1967 -* சிவஸ்ரீ ச. கணபதீஸ்வரக்குருக்கள் மறைவு.

*1968 -* சிவன் அம்பாள் பரிவாரமூர்த்திகள் பாலஸ்தாபனம் செய்யப்பட்டது.

*1970 -* மகாகும்பாபிஷேகம், பிரதோஷநாயகர் பிரதிஷ்டை செய்யப்பட்டு பிரதோஷ காலங்களில் வீதிஉலா வரத் தொடங்கியது.

*1971 -* ஈழத்துச் சிதம்பரபுராணம் வெளியிடப்பட்டது. தேவி மகோற்சவம் ஆடிபூரம் தீர்த்த தினமாகக் கொண்டு ஆரம்பிக்கப்பட்டது.

*1979 -* ஐயனார் இராசகோபுர அத்திவாரம் இடப்பட்டது.

*1987 -* ஆதினகர்த்தா ஆண்டிஐயா மறைவு.

*1988 -* ஐயனார் சிவன் அம்பாள் பரிவாரமூர்த்திகள் பாலஸ்த்தாபனம் செய்யப்பட்டது.

*1991 -* காரைநகர் மக்கள் நாட்டு நிலைமையால் இடம்பெயர்வு.

*1996 -* ஆதினகர்த்தா து. முருகேசு மறைவு.


*1998 -* மகாகும்பாபிஷேகம் இராசகோபுரங்கள் கும்பாபிஷேகம் நடேசர், அம்பாள், ஐயனார் புதிய தேரும் பிள்ளையார் தேர் புனரமைப்புஞ் செய்யப்பட்டது.

*2001 -* இராசகோபுரங்கள் வர்ணமைபூசி கோபுர மகாகும்பாபிஷேகம் நடைபெற்றது.

சிவஸ்ரீ. க. மங்களேஸ்வரக் குருக்கள் மறைவு.

மாணிக்கவாசகர் மடாலய அன்னதானசபை 75ம் ஆண்டு பூர்த்தி விழா சிறப்பாக நடைபெற்றது. தேர்விடுதி மண்டபம், சப்பர விடுதி மண்டபம் கட்டப்பட்டது.

*2002 -* அம்பாள்வாசல் தெற்குப் பக்கத்தில் திருக்குளம் வெட்டப்பட்டு புதிதாகக் கட்டியது.



கும்பாபிஷேக நிகழ்விற்காக சிவாச்சாரியார்கள் அழைத்துவரப்படல்

# மகா கும்பாபிஷேகங்கள்

| | | |
|---|---|---|
| *1811* | - | *ஐயனார் முதலாவது கும்பாபிஷேகம்.* |
| *1848* | - | *சுந்தரேஸ்வரர் முதலாவது கும்பாபிஷேகம்.* |
| *19.03.1903* | - | *சுந்தரேஸ்வரர் இரண்டாவது கும்பாபிஷேகம்.* |
| *06.09.1929* | - | *ஐயனார் இரண்டாவது கும்பாபிஷேகம்.* |
| *27.11.1931* | - | *நவக்கிரகங்கள் கும்பாபிஷேகம்.* |
| *26.01.1934* | - | *சுந்தரேஸ்வரர் மூன்றாவது கும்பாபிஷேகம்.* |
| *17.06.1948* | - | *சதா அபிஷேகம்.* |
| *29.11. 1950* | - | *சுந்தரேஸ்வரர் நான்காவது கும்பாபிஷேகம்.* |
| *10.07.1970* | - | *சுந்தரேஸ்வரர் ஐந்தாவது கும்பாபிஷேகம்.* |
| *07.06.1998* | - | *சுந்தரேஸ்வரர் ஆறாவது கும்பாபிஷேகம்.* |
| | | *ஐயனார் சிவன் இராசகோபுர கும்பாபிஷேகம்.* |
| *11.2001* | - | *ஐயனார் சிவன் இராசகோபுர கும்பாபிஷேகம்* |
| *23.04.1908* | - | *நடேசர், முருகன் பிரதிஷ்டை கும்பாபிஷேகம் செய்தது.* |
| *30.04.1908* | - | *நால்வர் பிரதிஷ்டை கும்பாபிஷேகம் செய்தது.* |
| *08.09.1910* | - | *சந்திரசேகரர் பிரதிஷ்டை மகாகும்பாபிஷேகம்.* |

# ஆதினகர்த்தாக்கள்

*அம்பலவி முருகர்*
*(1811 - 1859)*

*அ. சண்முகம்*
*(1860 - 1889)*

*ச. சின்னத்தம்பியார்,*
*(1890 - 1904)*

*ச. மாசிலாமணி,*

*அ. ஆண்டிஐயா,*
*(1942 - 1987)*

*ஆ. அம்பலவிமுருகன்,*
*(1988 - )*

*ச. மாசிலாமணி*
*(1889 - 1929)*

*சி. துரையப்பா*
*(1905 - 1941)*

*து. முருகேசு*
*(1942 - 1996)*

*மு. சுந்தரலிங்கம்*
*(1997 - )*

பாரதி பதிப்பகம், 430, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். தொ.பே. இல: 021 - 222 3081